290

# காவேரி

THE REGISTRAR OF BOOKS
28 JAN
MADRAS
290




THE CAUVERI

8 அணா

விய-தை

JANUARY, 1947.




சே[illegible] அகில இந்திய கதர் & சுதேசி பொருட்காட்சி சாலையில் ஏராளமான பொருட் செலவில் மரங்களினாலேயே நிர்மாணிக்கப் பட்டிருக்கும் **K. T. R.** வாசனாதிரவிய மாளிகைக்கு விஜயம் செய்யும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

**K. T. R. கிருஷ்ணா அகர்பத்தி** மணத்திலும், குணத்திலும் சிறந்தது. வாங்கி உபயோகித்து ஆனந்தமடையுங்கள்.

**K. T. R. வாசனாதி திரவியசாலை,**

**விஜயபுரம், (திருவாரூர்.)**

# எவ்விதமான வேலைக்கும் ஈடு கொடுக்கக் கூடியவை



கட்டிட வேலையிலோ, சுரங்கத்திலோ ரயில் பாதைகளைச் செப்பனிடவோ, எவ்வித வேலைக்கும் சுளகுப் பாரை ஈடு கொடுக்கவேண்டும்.

பிரத்தியேகமான முறையில் உயர்ந்த இரும்பிலிருந்து உண்டு பண்ணப்பட்ட எங்கள் சுளகுப்பாரைகள் எத்தகைய கடுமையான வேலையிலும் நன்கு உழைக்கக் கூடியவை.

ஸ்டு, நார்த்தர்ன்சர்க்கார் நீங்கலாக
த்திற்கு விநியோகஸ்தர்கள்:-

**களகய்ய செட்டி & கோ.**
, நைனியப்பநாயக்கன் தெரு,
ராஸ்.

**கன் & கோ.**
ஸன் பீச்சு,
ராஸ்.

## டாடா அக்ரிகோ

TIAC

### கருவிகளையே வாங்குங்கள்

**டா அயர்ண் அண்டு ஸ்டீல் கம்பெனி லிமிடெட்**

198028

# வீல் பாரோஸ்



**இரு சக்கரமுள்ளது**

18 கேஜ் எஃகு தகடுகளைக்கொண்டு செய்யப்பட்ட உடல். 2·75 கன அடி சாமான்கள் கொள்ளும் எஃகு வினல் பற்றவைத்து செய்யப்பட்ட தட்டை பிரேம், சக்கரங்கள், டாங்கியுடன் கூடியது.

**ஒரே சக்கரமுள்ளது**

18 கேஜ் எஃகு தகடுகளைக்கொண்டு செய்யப்பட்ட உடல். 2·75 கன அடி சாமான்கள் கொள்ளும் எஃகு வினல் பற்றவைத்து செய்யப்பட்ட குழாய் கைப்பிடி, 16" சக்கரம் கூடியது.



CA2TM.

விலைகள், மற்ற விவரங்களுக்கு:—

## ஸிம்ஸன் அண்ட் கம்பெனி, லிமிடெட். மவுண்ட் ரோட்,...... சென்னை.

பிராஞ்சுகள்:—பெங்களூர், உதகமண்டலம், திருச்சினாப்பள்ளி, ஹைதராபாத் (D.n.)




OFFICE OF THE REGISTRAR OF BOOKS
28 JAN 1947
MADRAS

# வான்கார்டு

பயர் & ஜெனரல்

இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி

லிமிடெட்

308/309, லிங்கிசெட்டித் தெரு,

மதராஸ் - ஜி. டி.

•

தென் இந்தியாவில் அதிக
மூலதனம் செலுத்தப்பட்ட
ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ்
ஸ்தாபிதம்

•

நெருப்பு, மோட்டார்,
தொழிலாளர் நஷ்டஈடு,
முதலிய சகலவிதமான
இன்ஷ்யூரன்ஸுகளும்
செய்யப்படும்.

H. D. ராஜா,
ஜெனரல் மானேஜர்.

அடுத்த விளையாட்டுப்
பந்தயத்தில்



## அம்ருதா

ரத்த சுத்தி
திராவகம்..



கலக்கம், ஆயாச
மில்லாமல் நன்கு
விளையாடி வெற்றி
பெறச் செய்கின்
றது.

நரம்புகளை
முறுக்கேற்றுகிறது

கேசரி குடீரம் லிட், மதராஸ்

ஒரிஸ்ஸா, நைஜாம் சமஸ்தானம்,
ஆந்திர ஜில்லாக்கள், தமிழ்
— நாட்டுக்கு —

ஏஜண்டுகள்:-

சீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ்,
பேர்ஹாம்பூர், செகந்திராபாத்,
பெஜவாடா, மதுரை.

# சங்கீத மகாபுருஷர் தியாகய்யரின்



# நூற்றாண்டு விழாக் கொண்டாட்டம்!

## தமிழ் நாட்டுப்பிரபல சங்கீத வித்வான்களின் அரிய கைங்கரியம்!

## நூற்றாண்டு விழாவுக்கெனவே வெளியிடப்பட்டுள்ள சில அற்புதமான இசைத்தட்டுகள்!





மதுரகீதவாணி ஸ்ரீமதி
என். ஸி. வஸந்தகோகிலம்
H. 18816 { நீதயராதா (வஸந்த பைரவி)
ஏலாவதாரமு (முகாரி)
H. 18817 { கத்தனவாரிகி
2-பாகங்கள் (தோடி)



மஹாராஜபுரம்
விஸ்வநாத ஐயர்
H. 18813 { மோஹனராமா
2-பாகங்கள் (மோஹனம்)



சாத்தூர்
ஏ. ஜி. சுப்ரமணியம்
H 18815 { ராமாநின்னு
2-பாகங்கள் (மோஹனம்)

ஜி. என். பாலசுப்ரமணியம்
பிடில்: கும்பகோணம் ராஜமாணிக்கம் பிள்ளை
மிருதங்கம்: பாலக்காடு மணி ஐயர்
HT. 123 { வாசுதேவாயனி
2-பாகங்கள் (கல்யாணி)

எல்லா அத்தாக்ஷி பெற்ற வியாபாரிகளிடமும் கிடைக்கும்

HIS MASTER'S VOICE

## "ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்"

தி கிராமபோன் கம்பெனி லிமிடெட்
டம்டம், பம்பாய், மதராஸ், டில்லி, லாகூர்

# ஸெளத் இந்திய வெஜிடபிள் ஆயில் மில்ஸ் லிமிடெட்

## தஞ்சாவூர்




1. முதல்தரமான முதிர்ந்த விதைகளையே உபயோகிக்கிறோம்.
2. அழுகிப்போன விதைகளைக் களைந்து எறிந்துவிடுவதினால் எங்கள் எண்ணெய் மிக்க மணமுள்ளதாயுள்ளது.
3. நாம் கையாளும் ஸ்பெஷல் முறையினால் காரல் செய்யும் அம்சம் நீக்கப் பெற்று, தேக ஆரோக்கியத்திற்கு உகந்ததாகவுள்ளது.
4. பிரஷர் பில்டர்களின் உபயோகத்தினால் தூசி, அழுக்கு எல்லாம் ஒழிக்கப் பட்டு, நாம் தயாரிக்கும் எண்ணெய் தெளிந்து பளிங்குபோன்று காண்பதுடன் உடலுக்கு மிகவும் உகந்ததாக உள்ளது.

சீக்கிரத்தில் எங்கள் சுத்தம் செய்த (refined) எண்ணெய் வகைகளை எதிர்பாருங்கள்.

பூரா விபரங்களுக்கு:—நேரிலாவது அல்லது எங்கள் கீழ்க்கண்ட டிப்போக்களிலாவது தெரிந்துகொள்ளலாம்.

| | | |
|---|---|---|
| தஞ்சாவூர் | பட்டுக்கோட்டை | குடவாசல் |
| திருவாரூர் | அம்மாபேட்டை | கபிஸ்தலம் |
| கும்பகோணம் | அய்யம்பேட்டை | திருத்துறைப்பூண்டி |
| பாபநாசம் | | திருச்சிராப்பள்ளி |

## 1947-ஆம் ஆண்டு
## உங்களுக்கு வைத்திருப்பது என்ன?

அறியவேண்டாமா? என்றையதினம் என்ன ஸம்பவம் நடக்க இருக்கிறது என்பதை எளிதில் நீங்கள் அறிந்துகொண்டுவிடலாமே! இன்றே ஒரு கார்ட்டு எழுதுங்கள். உங்கள் முழு விலாஸமும் நீங்கள் நினைக்கும் ஓர் புஷ்பத்தின் பெயரும் கண்டு எழுதுங்கள் போதும். எழுதும் தேதியிலேயிருந்து வரும் பன்னிரண்டு மாதங்களுக்கு உங்களுக்கு கிடைக்கப் போகும் லாபம், நஷ்டம், எந்த வியாபாரத்தின் மூலம் எந்தவிதமாக ஏற்படப் போகிறது என்ற விபரம், வேலை எப்பொழுது கிடைக்கும், சம்பளம் எப்பொழுது உயரும், பரீக்ஷையில் நீங்கள் தேருவது முதலான எல்லா விஷயங்களையும் மாதவாரியாக பலன் குறித்து ரூ. 1—4—0க்கு வி. பி. யில் அனுப்பிவைக்கப்படும். தபால் செலவு தனி.

இங்கிலீஷிலேயே எழுதியனுப்பவும்

**Shree Swami Yogiraj Jyotish Asram,**
**C. K. PHAGWARA.** (Kapurthala State)

**தற்காப்பு**

## ஆறு வெடிகள்கொண்ட தானுக இயல்கிற கைத்துப்பாக்கி

லைசென்ஸ் வேண்டாம்.

திருப்தியில்லையேல் துகை திருப்பி அளிக்கப்படும்




நாடகம்—சினிமா இவைகளில் உபயோகிப்பதற்கும், ஆபத்தில் திருடர்களை பயமுறுத்துவதற்கும் மிகவும் உபயோகப் படக்கூடியது. உண்மையான ரிவால்வரைப் போல் உபயோகித்தவுடன் ஜ்வாலை, புகை வெளியாகும். 7½" x 4"க்கு 15 அவுன்ஸ் இடையுள்ள ஒரு டஜன் வெடிகளுடன் விலை ரூ. 6—0—0. ஸ்பெஷல் செம்பு oxidized No. 666 விலை ரூ. 8—8—0. பெல்ட் உள்பட பெட்டி விலை ரூ. 2—8—0. தபால் முதலிய செலவு ரூ. 1—2—0. தனி ரிவால்வார் எண்ணை இனமாக பிரதி ஆர்டருடன் அனுப்பப்படும்

**IMPERIAL CHAMBER OF SCIENCE**
(C. K.) P. O. Ichhra, LAHORE




NF-T

# நாஷனல்

இன்ஷ்யூரனஸ கம்பெனி லிமிடெட்

7, கவுன்ஸில் ஹவுஸ் ஸ்டிரீட், கல்கத்தா.

மதராஸ் பிராஞ்சு

நாஷனல் இன்ஷ்யூரன்ஸ் பில்டிங்

362, சைனபஜார் ரோட்

★

ஸப் ஆபீஸ்:-

பெங்களூர் & மதுரை

---

# பொன் விழா வரும்போது




பண்டிட். டி. கோபாலாச்சார்லுவின்

# ஜீவாம்ருதம்

நாட்டில் தேக சுகத்தையும் சுபிட்சத்தையும் பரவச் செய்வதில் தொடர்ந்து ஐம்பது வருஷங்களாக நிலையான ஊழியம் புரிந்து வந்திருப்பதில் பெருமையடைகிறோம்.

## ஆயுர்வேதாஸ்ரமம் லிட்
## தி-நகர்.... மதராஸ்.

EASTERNS 379.

# பாண்டியன் இன்ஷ்யூரன்ஸ்

## கம்பெனி லிமிடெட்

(இந்தியாவில் ஸ்தாபிதம் 1933)

தலைமை ஆபீஸ்: **மதுரை**

●

சிறந்த சேவை செய்து வருகிறது

**நெருப்பு, மோட்டார், விபத்து**

முதலிய

சகலவித இன்ஷ்யூரன்ஸ் திட்டங்கள்.

மொத்த ஆஸ்திகள் ரூ. 62,00,000

●

கிளைகள்: பம்பாய், அகமதாபாத், கல்கத்தா, ராவல்பிண்டி.

●

பிரதம ஏஜண்டுகள்:

**ஏ. & எப். ஹார்வி லிமிடெட்**

மதுரை Etc.



உலகெங்கிலும்
மிகவும் போற்றப்
பெற்றது!

# ஸிரோலின்

'ரோச்'

சுவாஸகோச
உபாதைகளுக்கு சிறந்தது.

---

## திலக் மார்க் மிஸ்கி பெருங்காயத்தையே உபயோகியுங்கள்

**GOPALJI CHAMPSHI & Co.,**
**GOVINDAPPA NAICK ST, G.T. MADRAS.**

ஹெட் ஆபீஸ்: பம்பாய்




பிராஞ்சு: மதுரை

எல்லா இடங்களிலும் கிடைக்கும்.

**கோபால்ஜி சாம்ஷி & கோ., 30, கோவிந்தப்பநாயக்கன் தெரு, மதராஸ்.**

இசை ஒளி

# A. D. சுல்தானின்

## கான வர்ஷம்

அடியிற்கண்ட இடங்களில்
நடைபெறும்



19—1—47 நாகபட்டினம்

26—1—47 ஆம்பூர்

2nd week of Feb. காஞ்சிவரம்

23—2—47 அறுப்புக்கோட்டை




[illegible]

லிவர்க்யூர் பிராஞ்ச் ஆபீஸ்
பெரியதெரு
கும்பகோணம்.

LIVER CURE Branch Office
Parekh Mansion
Sandhurst Road, (West)
BOMBAY 4.




Agent:—T. T. KRISHNAMACHARI & Co.

12A Lingha Chetty Street, G. T. MADRAS.

வீ க ம் ஸீ யி ன்

டிரேட் மார்க்

V. C.

(ஸ்தாபிதம் 1893)

குறிபோட்ட நகைகளெல்லாம்
சவரன் பொன்னுக்கும்
முதல்தரமான
வைரங்களுக்கும்
மேன்மையான கைதேர்ந்த
வேலைப்பாட்டுக்கும்
உத்தரவாதமுள்ளவை

VEECUMSEE
CHABILDOSS & SONS
Renowned Diamond Merchants,
China Bazaar :: MADRAS.


# பொருளடக்கம்


விய மலர் 6 — தை இதழ் 6



தியாக பிரும்மம் 14

அம்மாஞ்சியின்—
அபிப்பிராயங்கள் 19
ராமய்யா

புதுக் குடித்தனம் 24
வேங்கடலக்ஷ்மி

விமோசனம் 29
ஆத்ரேயி

அனர்கலி 33
புத்துகிருஷ்ணு

மூட நம்பிக்கை 42
ச. பாஷ்யம்

இறுதி நாள் 45
இரா. சந்திரகுப்தன்

இளமையின் மனப்புயல் 50
சாரி

விஞ்ஞானத்திலே
புரட்சி செய்த வீரர் 59
நா. கி. நாகராசன்

சித்ரா 64
கே. சுந்தரம்மாள்

புத்தக விமர்சனம் 72

# காவேரி

விய மலர் 6 | "சென்றிடுவீ ரெட்டுத்திக்கும்—கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்—" பாரதியார் | தை இதழ் 6


## தியாகப் பிரும்மம்

'ஸங்கீதத்தில் லயிக்காதவன், அதனுல் இழுக்கப்படாதவன், கொலை, கொள்ளை, சதி இவைகளுக்கு ஏற்ற பாத்திரமாவான்' என்று மேல்நாட்டு நாடக சக்கரவர்த்தி ஷேக்ஸ்பியர் கூறியுள்ளார். இன்று தமிழ்நாட்டில் கச்சேரிகளில் பாடப்பட்டுவரும் ஸங்கீதத்தில் பலர் லயிக்கவுமில்லை; அதனுல் ஆகர்ஷக்கப்படவுமில்லை. படித்த கோஷ்டியினர் அநேகர் இந்தக் கோஷ்டியில் இருக்கிருர்கள் என்ருல் அது மிகையாகாது. இதிலிருந்து இவர்கள் அனைவரும் கொலை முதலிய பாதகங்களுக்கு அஞ்சாதவர்கள் என்று கூறமுடியுமா? அல்லது ஷேக்ஸ்பியர் கூறிச்சென்றதுதான் பொய்யா?

ஷேக்ஸ்பியர் உலக அனுபவம் நிறைந்தவர். அவர் கூறியதில் தவறு இருக்க முடியாது.

நமது சரித்திரத்தைப் புரட்டினுலும் பழையகாலங்களில் கர்னுடக ஸங்கீதம் பாடப்பட்டால் மிருகங்கள்கூடக் கட்டுண்டு கிடந்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஏன், நமது ராகங்கள் பல மனித இதயத்தில் விளைவிக்கக்கூடிய மாறுதல்களைக்கொண்டே பெயரிடப்பட்டிருக்கின்றன. அப்படி இருக்கையில் ஏன் இக்காலத்தில் மட்டும் நமக்கு அத்தகைய உணர்ச்சிகள் உண்டாவதில்லை.

மதவிஷயத்தில் நாம் என்ன காண்கிருேம்? நமது முன்னேர்கள் கையாண்ட பழக்க வழக்கங்களை நாம் கொண்டாடி வருகிருேம். ஆனுல் அதற்கு அடிப்படையாயுள்ள, அதில் அடங்கியுள்ள, கருத்துக்களை அறவே மறந்து ஜீவனற்ற செய்கையாக, கடமை, பழக்கம் என்பதை மட்டுமே மனதில் இருத்திக்கொண்டு வேண்டாவெறுப்பாகச் செய்துவருகிருேம். நம் ஆலயங்களில் நடப்பது இதுவே. பக்திரஸம் ததும்பவேண்டிய இடத்தில்—பக்திரஸத்தை எழுப்பக்கூடிய செயல்கள், சொற்கள், தொழுகிறவர்கள் மனதைக் கவரவேண்டிய சொற்கள் வழங்கவேண்டிய இடத்தில்—பாவமற்ற செயல்கள், பொருள் புலப்படாத வசனங்கள், பழக்கம், ஆசாரம், இவைதான் ஓங்கி நிற்கின்றன. ஜீவன் பறந்தோடிவிட்டது.

அதே காட்சிதான் நம் ஸங்கீதத்திலும் இன்று காணப்படுகிறது. சாஸ்திரப்படி ராகம், தாளம் எல்லாம் அமைந்து, பாடப்படும் பாட்டு அக்ஷரசுத்தமாயிருக்கிறது என்று வைத்துக்கொண்டாலும், பாவம் என்பது காணப்படுவது துர்லபமாயிருக்கிறது.

இதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. ஸ்வாமி சன்னிதியில் விக்கிரகம் எவ்வளவு ஆகர்ஷண சக்தியுடன் கூடியதாயிருப்பினும், அங்கு ஆராதனம் செய்யும் குருக்கள் சான்னித்தியக் குறைவாக நடந்துகொண்டால் எப்படிக் கண்டுகளிக்கும் பக்தர்களிடம் பங்க உணர்ச்சி ஏற்படுகிறதோ, அதேபோல் ஸங்கீதம் பாடுகிறவர்களும் கூடிய மட்டும் பாடும் பாட்டு இன்ன பாவம் உண்டுபண்ண வேண்டுமென்பதை மனதில் இருத்திவைத்

துக்கொண்டு, தம் சேஷ்டைகளை அடக்கிக்கொண்டு பாடுவார்களேயானால் கேட்பவர்கள், பார்க்கிறவர்களின் மனதில் உரிய பாவம் ஏற்பட ஹேதுவாயிருக்கும். பக்தி பரவசமாக்கக்கூடிய பாட்டு ஒன்றைப் பாடுகையில் பாடகர்கள் சிமிட்டாப் பொடி உறிஞ்சுவதிலும், பால் குடிப்பதிலும், எதிரில் உட்கார்ந்திருக்கும் முக்கியமானவர்களைக் குறித்துக் கண் அடித்துக் கரகோஷம் வாங்குவதிலும் கவனம் செலுத்துவார்களேயானால் பாவம் பறந்தோடிவிடாதா என்று நீங்களே யோசியுங்கள்.

மேலும், தியாகராஜ ஸ்வாமிகளின் சரித்திரம் நமக்கு ஏதாவது படிப்பினை கற்பிக்கிறதென்றால் பாவத்துடன் பாடுவதுதான் பாட்டு என்பதை நிரூபிக்கிறது. அவர் சமாதியிலமர்ந்து நூறு ஆண்டுகள் நிரம்பிவிட்டன. அவர் இயற்றிய கிருதிகளில் அனேகம் நடை முதலில் கச்சேரிகளில் பாடப்பட்டு வருகின்றன. இன்னும் அனேக கிருதிகள் அனுஷ்டானத்திற்கு வரவில்லை. அவைகளையும் பாடச் செய்ய வேண்டியது பெரிய பணியாகும் என்பதை நாம் ஒப்புக்கொள்கிறோம். ஆயினும் தியாகராஜஸ்வாமிகள் ஆற்றிய தொண்டு வீண் என்று கருதாமலிருக்க வேண்டுமானால், நமது மேடைகளில் பாடப்படும் ஸங்கீதம் பாவ உணர்ச்சிக்கும் பிராதான்யம் கொடுத்துப் பாடப்படவேண்டும். இது இல்லையேல் வெகு சீக்கிரத்தில் கர்ணாடக ஸங்கீதமே அற்றுப் போய்விடும்.

இதற்காக நமது பாடகர்கள் சன்யாசிகளாக ஆகவேண்டும், பொடி முதலிய பழக்கங்களை விட்டுவிடவேண்டும் என்று நாம் கூறவில்லை. எப்படி நாடகத்தில் கதா பாத்திரம் தம் சகல சேஷ்டைகளையும் அடக்கிக்கொண்டு தாம் வேடம் தரித்திருக்கும் பாத்திரம் எத்தகைய குண விசேஷங்கள் கொண்டதோ அதற்கேற்ப நடிக்கிறாரோ அதேபோல், மேடைக்கு வந்து விட்டால் நமது பாடகர்கள் தாங்கள் பாடும் பாட்டுக்குத் தகுந்தவாறு தங்கள் பாவங்களையும் செயல்களையும் அமைத்துக் கொள்ள வேண்டும். இவ்வளவும் செய்து உரிய பாவம் ஏற்படத் தங்கள் மனதையும் பாடும் பாட்டில் லயிக்கச் செய்து, எதிரே வீற்றிருக்கும் ரஸிகர்கள் உள்ளங்களில் பாட்டிற்குரிய பாவம் ததும்பும்படியாகப் பாடவேண்டும். அப்படிச் செய்தால்தான் நமது ஸங்கீதத்தின் முழு வன்மையையும் அவர்கள் காட்டமுடியும்; தியாகையருக்கு அவர்கள் தங்கள் கடமையைச் செய்தவர்களாவார்கள்.

அநேகமாக நமது தமிழ்ப் படங்களில் கர்ணாடக ஸங்கீதம் குறைந்து கொண்டே வருகிறது. ஹிந்துஸ்தானி மெட்டுக்களில்தான் பாட்டுக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. காரணம் பாவம் இல்லாத ஸங்கீதமாகக் கர்ணாட ஸங்கீதத்தை நமது ஸங்கீத வித்வான்கள் ஆக்கிவிட்டதுதான். பாவம் நிறைந்த ஸங்கீதமாகக் கர்ணாடக ஸங்கீதம் பாடப்பட்டால் வடநாட்டு ஸங்கீதத்திலிருந்து நமது ஸினிமாக்காரர்கள் காப்பி அடிக்கவேண்டிய நிர்ப்பந்தம் இராது.

தியாகய்யரின் நூறாவதாண்டு விழா நாடெங்கும் கொண்டாடப்பட்டது. கச்சேரிகளும் பேச்சுக்களும் ஆராதனைகளும் நிகழ்ந்தன. ஆனால் தியாகய்யர் ஆற்றிய தொண்டிற்கு இத்தகைய கொண்டாட்டம் ஏற்றதா என்று சற்றுப் பரிசீலனை செய்வது அவசியம். இன்று தியாகப் பிரும்மம் உயிர் பெற்றெழுந்து வந்து இக்கச்சேரிகளைக் கேட்டால் அவர் மனம் குளிருமா என்று சற்றே யோசிக்கவேண்டும். அவர் செய்த கற்பனை எங்கே? ரிகார்ட்டு வைத்தமாதிரி யாதொரு கற்பனையுமின்றி, வெறும் ஸ்வரத்தை வைத்துக்கொண்டு ஜீவனை உணராது, சப்த ஜாலத்தின் விந்தையை அறியாது, ஒரே முகமாகப் பாடிக்கொண்டு வரும் இவ்வித்வான்களின் பாட்டைக் கேட்டால் அப்பெரிய சிருஷ்டிகர்த்தாவின் மனம் என்ன பாடுதான் படாது?

தியாகப்பிரும்மம் பரிபூர்ணமுற்று நூறு ஆண்டுகள் ஆயினும் உணர்ச்சி ததும்பும்படியாகவோ கற்பனையாகவோ நாதப் பிரும்மத்தின் முழு சக்தியையும் நாம் சரிவர உணராமல் ஈ அடிச்சான் காப்பி போல் பாடிவருவது கர்ணாடக ஸங்கீதத்திற்கு நாம் தொண்டு செய்வதாகாது.

இன்றைய தேவை என்ன? தியாகப் பிரும்மம் செய்த கற்பனையின் உட்கருத்தை உணர்ந்து பாவத்துடன் ஸங்கீதம் பாடும்படி செய்வது முதற்கடமையாகும். சில பாட்டுக்களைப் பாடினால் மழை பெய்யச்செய்யலாம், இடிமுழங்கச் செய்யலாம், மக்களை ஆனந்த பாஷ்பத்தில் லயிக்கச்செய்யலாம் என்று சொல்லுகிறார்கள். இப்படி எல்லாம் நாதப் பிரும்மத்திற்கு மகிமை இருப்பதை உணர்ந்து முன்கால வித்வான்கள் பாடியதாகச் சொல்லப்படுகிறது. இத்துறைகளில் ஆராய்ச்சி செய்து ராகங்களைப் பாடச் செய்வதே கடமை. அப்பொழுதுதான் நமது ஸங்கீதமும் முன்னேற ஹேதுவாகும்.

இப்பணி ஆற்ற, திருவையாற்றில் ஆராய்ச்சி நிலையம் ஒன்று நிறுவி அதில் ஸங்கீதத்தில் மேதையாயுள்ளவர்களை அமைத்து ஆராய்ச்சி செய்யச் செய்வது தான் தியாகையருக்கு நாம் செய்யக் கூடிய கைம்மாறு ஆகும். ஸங்கீதக் கச்சேரிகளில் பாவ உணர்ச்சி ததும்பப் பாடப் படவேண்டும் என்ற கிளர்ச்சி கிளம்பினால் அது தியாகராஜ ஸ்வாமிகளின் மனோபாவத்தை ஒட்டியதாயிருப்பதுடன் நமது மக்கள் அனைவரையும் கர்னாடக ஸங்கீதத்தை அனுபவிக்கச் செய்யவும் உதவும்.

தியாகராஜ ஸ்வாமிகளைத் தெய்வமாகக் கொண்டாடுவதினாலும், அவருக்குக் கோயில் கட்டித்தொழுவதினாலும், கர்னாடக ஸங்கீதம் முன்னேறிவிடாது. ஊர்வலங்களும், பஜனை கோஷ்டிகளும் பாமர ஜனங்களை உற்சாகப்படுத்த உதவுமேயல்லாது தியாகராஜ கீர்த்தனங்களின் மகிமையை உயர்த்தமாட்டா. கர்னாடக ஸங்கீதத்தில் உணர்ச்சி வெள்ளம் ததும்ப வேண்டும். புதிய கற்பனைகள், ஆராய்ச்சிகள் வேண்டும். தியாகையரிடம் இருக்கும் பக்தியினால் இதை அனைவரும் செய்வார்களாக.



# கதம்பம்

## காட்சி கண்காட்சியே!

144, துப்பாக்கிப்பிரயோகம், ஸ்ட்ரைக்குகள், மதியூகமந்திரிகளின் பிரயாணங்கள், சாமான்கள் தட்டு—இப்படிப்பட்ட ருசிகரமான விஷயங்களைக்காட்டிலும் பத்திரிகைகளில் நமது கண்களை அதிகம் உறுத்தும் விஷயம் ஹரிஜன ஆலயப்பிரவேசம். பெரிய படைகளுடன் ஒரு கோட்டையைப்பிடிக்கக் கிளம்பும் வீரர்கள்போல் பிரமுகர்கள் பலர் ஹரிஜனங்களை ஆலயப்பிரவேச நிமித்தம் இழுத்துச் செல்லும் காட்சி கண்காட்சியே. இப்படிப்பட்ட தலைபோகிற விஷயமாகப் பலருடைய அபிப்பிராயங்களைத் திரட்டியுள்ளோம்.

கோயில் கடவுள்:- மௌனம்! மௌனம் என்றால் சம்மதம் என்றுவைத்துக் கொள்ளலாம் என்றார் ஒரு நண்பர். எப்படி வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளுங்கள். கடவுள் பேசாதிருப்பதிலிருந்து இந்த விஷயம் தலைபோகிற முக்கிய விஷயமல்ல என்று முடிவு கட்டலாமா?

காத்தான் சாம்பான்:- ரொம்ப தமாசுங்கோ! புதுத்துணி, தேங்கா, மாலை, வாளப்பளம் அல்லாம் சும்மா கிடைச்சுதுங்கோ, நித்தம், நித்தம் இப்படி கிடைக்குமா?!

சிவமணி சிங்காரவேலுபிள்ளை:- அன்று நந்தனை நாடிய நடேசன் ஹரிஜனங்களை வெறுப்பானா?!

காங்கிரஸ் கமிட்டி தலைவர் கந்தசாமி நாடார்:- தீண்டாமைப் பேயை விரட்டியடிக்க அதுவே வழி. அப்பொழுதே நாடும், ஹிந்து சமூகமும் முன்னேற்றமடைய வழியுண்டு. ஹிந்துசமூகத்தைச் சேர்ந்த பெரும் பகுதியினருக்கு இந்த உரிமைகூட அளிக்க மறுப்பது முறையா?!

வியாபாரி வையாபுரி செட்டி:- இந்த தண்டா நமக்கேன்? நமக்கு வேண்டியது துட்டு!

ஸனாதனி சங்கரசாஸ்திரி:- போச்சு! கலிமுத்திப்போச்சு! இன்னும் என்னென்ன விபரீதங்கள் நடக்கப்போகிறதோ? 'விநாசகாலே விபரீத புத்தி!'

சினிமா ஸ்டார் மிஸ் சின்னி:- கேவலம் இந்த நாற்ற உடலைப்பெற்ற என் அழகையும், ஆட்டத்தையும் மக்கள் ஜாதிமதபேதமின்றி ரசித்து இன்புறுகையில் கடவுளைக் கண்டு எல்லா மக்களும் களிப்புறுவதை ஏன் ஆட்சேபிக்கவேண்டும்?

வக்கீல் வரதாச்சாரி:- இது சிக்கலான பிரச்னை! இதுவிஷயமாய் வழக்கு ஏற்பட்டு என்னிடம் வந்தால் அப்பொழுதே உண்மையைத் திட்டமாக விளக்கமுடியும்!

ஆப்காரி கண்ட்ராக்டர் அழகிரிசாமி நாடார் }:— இன்றைய தினம் கோவில்போச்சு; நாளை குடியும் தொலைந்துவிட்டது என்று ஏற்படாமலிருக்க அந்த வள்ளியம்மன் துணைபுரிய வேண்டுகிறேன்!

சு. ம. சுப்பையன்:- இதெல்லாம் அசல் பார்ப்பனச் சூழ்ச்சி! ஆரியனின் அயோக்யத்தனம்! ஏழைமக்களைச் சுரண்ட, பூசாரிக் கும்பல்களின் சதி, கோவிலாம், கடவுளாம்!

பொதுஜனம்:- ஹரிஜனங்களும் இந்துக்கள். இன்று ஹிந்து சமுதாயம் சிதறுண்டும் அழிந்தும் வருவதற்குக் காரணம் நாம் அவர்களுக்குச் சாதாரண உரிமைகளைக்கூட அளிக்காததுதான். அவர்களின் மதமாற்றத்தைக்கண்டு கண்ணீர் விடுகிறோம். அதைத் தடுக்க நாம் யாதுசெய்கிறோம்? நாமே அவர்களை விரட்டிவிடுகிறோம். பழக்க வழக்கங்களைக் காலத்துக் கேற்றவாறு மாற்றியமைத்தல் அறிவுடையோர் கண்ட வழி. ஹிந்து சமுதாயம் பலப்பட இத்தகைய சீர்திருத்தங்கள் நன்கு உதவும். காலவெள்ளம் கட்டுக்கடங்காமல் கரைபுரண்டோடுவதைத் தடைசெய்ய முற்படுவது புத்திசாலித்தனமல்ல!

## கோவிந்தா—கோ-வி-ந்-தா!

யுத்தம் நடந்துகொண்டிருக்கும்வரை வல்லரசுகள் அபார ஒற்றுமையுடன் வெற்றிக்குப் பாடுபட்டன. யுத்தம் முடிந்தது. சந்தேகங்கள், சச்சரவுகள், பிளவுகள், சுயநல வேட்கைகள் இவைகளெல்லாம் வல்லரசுகளை அதிகமாக ஆட்கொண்டுவிட்டன. உலக ஒற்றுமை, உலக சமாதானம் என்ற மந்திரங்களை உச்சாடனம் செய்வதில் வல்லரசுகள் தவறுவதில்லை. ஆனால் உலக சமாதானத்தைக் குலைப்பதிலும், ஒற்றுமையை அழிப்பதிலும் ஒவ்வொரு வல்லரசும் போட்டா போட்டியிட்டு, சுயநலம் ஒன்றையே குறியாகக்கொண்டு காரியங்களைச் செய்துவருகின்றன. வல்லரசுகளின் நடவடிக்கைகளை நன்கு கவனித்தால் ருஷ்யா ஒரு பக்கமும், அமெரிக்கா அலாதி

வழியாகவும், பிரிட்டன் ஒரு தனிப் போக்காகவும் போய்க்கொண்டிருப்பது நன்கு விளங்கும். பொதுவாக ருஷ்யாவின் பலத்தைக்கண்டு பிரிட்டனும் அமெரிக்காவும் அச்சமடைந்துள்ளன என்பது தெளிவு.

ஜகஜ்ஜாலப் புரட்டரும் ராஜதந்திர நிபுணருமான பிரிட்டிஷ் மாஜி பிரதம மந்திரி சர்ச்சில் ருஷ்யாவின் ஆதிக்கம் ஓங்காதிருக்க ருஷ்யா தவிர மற்ற ஐரோப்பிய நாடுகள் அடங்கிய கூட்டுத் தொகுதி திட்டம் ஒன்றை முன்பே வெளியிட்டார். பிரான்ஸ் பலமுடையதாக இருந்தாலே இனி ஐரோப்பாவில் சற்றே சமாதானம் நிலவ வழியுண்டு என்ற கொள்கையை அடிக்கடி வற்புறுத்திவந்தார். ருஷ்யா சிற்றமடைந்தது. அமெரிக்காவில் குழப்பம் உண்டாகிவிட்டது. பிரிட்டிஷ் சர்க்காரோ ஒன்றும் புரியாமல் தவித்தனர்.

ஆனால் ருஷ்யாவின் போக்கு நாளுக்கு நாள் பிரிட்டனின் சந்தேகத்தையும் கவலையையும் அதிகரிக்கச் செய்தது. அடுத்த யுத்தம் ஐரோப்பாவில் நேர்ந்தால் யாது செய்வது என்பதைச் சிந்திக்கத் தொடங்கி விட்டது. அமெரிக்காவை மட்டும் நம்பி வாழ்வது அசட்டுத்தனம் என்பதைக் கண்டு கொண்டது. அடி விழும்போது உதவிக்குச் சட்டென்று வராமல் உயிர் துடிக்குங்கால் தான் அமெரிக்கா ஆதாயத்தை நாடி உதவிசெய்ய முன்வரும் என்பதைப் பிரிட்டன் நிதர்சனமாகக் கண்டுகொண்டதல்லவா? ஆகவே சமயத்தில் அடிகள் விழுவதைத் தாங்கிப் பிரிட்டனுக்கு உதவியளிக்கக்கூடியது பிரான்ஸ்தான். அப்படிப்பட்ட பிரான்ஸ் தேசத்துடன் பிரிட்டன் ஒரு உடன்படிக்கை செய்துகொள்ள முற்பட்டுவிட்டது!

தென்னைமரத்தில் புல் பிடுங்க ஏறிய தாகச் சொன்ன திருடன் கதைபோல் பிரிட்டன் பிரான்ஸுடன் உடன்படிக்கை செய்துகொள்வதற்கு ஒரு நம்பத்தகாத, சொத்தையான, அபத்தமான காரணத்தைச் சொல்லியுள்ளது. மறுபடியும் ஜெர்மனி வாலேயாட்டித் திருவிளையாடல்கள் புரிவதைத் தடுக்கவாம்! ருஷ்யாவுக்குப் பயந்தே இந்தச் சதி என்பதை யாரும் அறியலாம்.

ஆகவே இனி வல்லரசுகள் தனித்தனியாக மனம் தோணினவாறு அவரவர்கள் சுயநலத்தை யொட்டி, காரியங்களைச் செய்துகொண்டே போவர் என்பது தெளிவாகிவிட்டது. அடுத்த மகா யுத்தம் எப்பொழுது ஆரம்பமாகும் என்பதில்தான் இனி உலக மக்களின் கவனம் திட்டப்படுகிறது.

உலக சமாதானம், உலக ஒற்றுமை, ஆயுத பரிகரணம் என்பதெல்லாம் இனி பரிகாச மொழிகளாகிவிட்டன. கோவிந்தா—கோ-விந்-தா!

## ருசி கண்ட பூனையின் கதை!

கெஞ்சல், ஒப்பாரி, உருட்டல், மிரட்டல் இப்படிப்பட்ட சதுர்வித உபாயங்களைக் கையாண்டு கெஜட் பதிவில்லாத சர்க்கார் ஊழியர்களும், ஸ்தல ஸ்தாபன சிப்பந்திகளும் சம்பள விகிதங்கள் அதிகம் கிடைக்க வழிதேடிக் கொண்டுவிட்டனர். நிரம்ப சந்தோஷம்.

ஆனால், ருசிகண்ட பூனையின் கதையாகி விடுமோ என்று அஞ்சுகிறோம். வாழ்க்கைத் தரம் உயர்ந்துவிட்டது. விலை வாசிகள் வானளவு உயர்ந்துவிட்டன. பிளாக் மார்கெட் பெருகிவிட்டது. ஊதியம் போதவில்லை. ரொம்ப சரி. ஊதியம் உயர்ந்ததினால் பிரச்னை தீர்ந்துவிட்டதா?

விலைவாசிகளைக் கட்டுப்படுத்தி, பண்டங்கள் கிடைக்கச் செய்ய அரசாங்கம் என்ன செய்கின்றது? செய்யப்போகின்றது? என்பதுதான் புரியவில்லை. இதுவரையில் பல தடவை பஞ்சப்படி உயர்த்தப்பட்டது, ஆனாலும் ஊழியர்களிடையே திருப்தி காணப்படவில்லை.

அரசாங்கத்தினிடம் பணமிருக்கிறது. இல்லாவிடில் புதிய வரிகள் போட்டு வசூலித்துவிடுகிறது. நிறைய அள்ளிக்கொடுக்க வசதியிருக்கிறது. ஊழியர்களை வைத்து நடத்தும் மற்ற தனிப்பட்ட ஸ்தாபனங்களுக்கும் அத்தகைய வசதியுண்டா? தனிப்பட்ட ஸ்தாபனங்களில் வேலை செய்யும் ஊழியர்களின் குறைகள் அனைத்தையும் நிவர்த்திக்க, தனிப்பட்ட ஸ்தாபனங்கள் எல்லாவற்றாலும் முடியுமா? அரசாங்கம் ஊதியத்தைத் தன் ஊழியர்களுக்கு உயர்த்திவிட்டதால் எண்ணற்ற தொல்லைகள் மற்றவர்களுக்கு ஏற்பட ஹேதுவாகிறது. "கொடு, கொடு" என்றால் எங்கிருந்து கொடுப்பது? சட்டியில் இருந்தால் அல்லவோ அகப்பையில்வரும்? கிளர்ச்சி அனுவசியமாக அதிகமானால் ஸ்தாபனங்கள் சிக்கனத்தில் நாட்டம் செலுத்த முற்படும். பலர் வேலையிழந்து திண்டாட வேண்டும்.

ஆகவே ஜீவாதார மூலாதார பிரச்சனைகளாகிய விலைவாசி கட்டுப்பாடு, பண்டங்கள் எளிதில் மக்களுக்குக் கிடைக்க வழிதேடுதல்—இவைகளில் அரசாங்கம் விசேஷ கவனம் செலுத்தாவிடில் ருசிகண்ட பூனையின் கதையாகத்தான் முடியும்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
29 JAN 1941
MADRAS

# அம்மாஞ்சியின் அபிப்பிராயங்கள்



ராமய்யா

“காவேரி” பத்திகை ஆரம்பித்து ஐந்து வருஷங்களுக்குமேல் ஆகின்றன அல்லவா? காலப்போக்கு எவ்வளவு வேகமாகச் சம்பவிக்கின்றது? நேற்றையதினம் போலல்லவோ இருக்கிறது. அம்மாஞ்சியும் ஆசிரியரும் நானும் இதைப்பற்றிப் பேசி, முடிவுக்கு வந்து, வெகு குதூகலத்துடன் ‘‘சரி, பத்திரிகை ஆரம்பித்துவிடுவோம்; எழுத்தாளர்களை எல்லாம் சேர்த்துவிடுங்கள்; தமிழ்நாட்டில் நல்ல விஷயங்களைப்பற்றி நன்றாக எழுதக்கூடியவர்கள் அநேகர் இருக்கின்றனர். அவர்கள் எழுதுவதையெல்லாம் பிரசுரிக்கத்தான் பத்திரிகை இல்லாமலிருக்கிறது; ‘காவேரி’ என்று பெயரைவைத்துப் பத்திரிகை ஆரம்பித்தால் அதில் ஜலத்துக்குப் பஞ்சமே இருக்காது; மாதம் ஒரு முறை நமது ராமய்யா ஒரு வியாசம் வரைந்து போட்டுவிடுவான், அது நிச்சயம்; அவனைப்போல் இன்னும் பத்துப்பேரை, சேர்த்துவிடுங்கள்; பிச்சுப் பிரியக்கட்டிவிடலாம்” என்றானே அம்மாஞ்சி! எனக்கு வயிற்றில் பகீல் என்றது. என்ன? நானாவது மாதம் ஒரு முறை வியாசம் எழுதவாவது? ‘‘என்ன, அம்மாஞ்சி, பரிகாசம் பண்ணுகிறாய்? குட்டியைக்கொண்டு கடலாழம் பார்க்கிறாயே? இம்மாதிரி சந்தியில் இழுக்கலாமா” என்றேன். ஆசிரியரும் சிறிது சந்தேகத்துடன் எங்களிருவரையும் பார்த்துவிட்டு, ‘‘அம்மாஞ்சி, நீங்களே எழுதலாமே, ராமய்யாவால் முடியுமோ, முடியாதோ” என்று பொடிவைத்துச் சொன்னார். அதற்கு அம்மாஞ்சி, ‘‘எனக்குப் பேசத்தெரியுமே ஒழிய எழுதத்தெரியாது; ராமய்யாவுக்குப் பேசவும் தெரியாது, எழுதவும் தெரியாது, ஆனால் என்னுடைய அபிப்பிராயங்களை விறுவிறுவென்று எழுதிவிடுவான். ஆகவே உடன்படிக்கை இத்தகையதாயிருக்கட்டும்; மாதந்தோறும் என்னுடைய அபிப்பிராயங்களை அவன் வெளிப்படுத்துவான். அதைப் பிரசுரித்து விடுங்கள். ஒன்றும் சந்தேகிக்க வேண்டாம். எல்லாம் சரியாயிருக்கும்” என்று முடிவுசெய்தான். ஐந்து வருஷங்களாக இதுவும் நடந்துகொண்டிருக்கிறது—நேயர்களும் இந்த ஏற்பாட்டை அங்கீகரித்து இருக்கிறார்கள். ஆதலால் இந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு சிறிய விஷயம் அவர்களுக்குத் தெரிவிக்கிறேன்.

அம்மாஞ்சி சிறுவயதிலிருந்து ஒரு பத்ததியைக் கையாடிவருகிறான்; அதாவது, தன்னால் ஆகவேண்டிய காரியத்தைக் கூடுமானவரை, பிறரால் செய்விப்பது என்பது. ஏதாவது நல்ல விஷயத்துக்குப் பத்து ரூபாய் கொடுக்கவேண்டும்படி ஏற்பட்டால், உடனே அருகிலிருக்கும் தனவந்தர் ஒருவரைத் தட்டிக்கொடுத்து அவர் கையிலிருந்து அதை வாங்கிக்கொடுத்துவிடுவான். துடுக்காக யாராகிலும் ‘‘உம்முடைய கைங்கரியம் எங்கே” என்று அம்மாஞ்சியைக்கேட்டால் ‘‘பொன் வைக்கும் இடத்தில் பூவைத்தால் போதுமே” என்று சொல்லிவிட்டு ஒரு புஷ்பத்தை எடுத்துக்கொடுத்துவிட்டு ஒரு பஞ்சாதியையும் சொல்லி அனுப்பிவிடுவான்! நானும் அவனும் கோவிலுக்குப்போனால், வெளிப்பிராகாரத்தில் அவன் கீழேஅமர்ந்துவிட்டு, ஜபம்செய்வதுபோல் கண்ணை மூடிக்கொண்டு, என்னைப்பார்த்து ‘‘நான் சிறிது ஜபம் செய்கிறேன்; நீ எனக்காக வெளிப்பிராகாரத்தை மூன்று முறையும், உள் பிராகாரத்தை ஐந்து முறையும் சுற்றிவிட்டுவா, பார்ப்போம்” என்று சொல்லுவான். வெகு தர்மசங்கடமான வழியில் பிறரை மாட்டிவிடுவதில் அவனைப்போலச் சாமர்த்தியசாலி நான் எங்கும் பார்த்ததில்லை. பத்து வருஷங்களுக்குமுன், ஒரு சமயம் அம்மாஞ்சிக்கு வெகு தீவிரமான வயிற்று வலி ஒரு முறை ஏற்பட்டது; இரண்டுநாட்கள் என்ன வைத்தியம் செய்தும் தீரவில்லை; அப்பொழுது ஒரு பெரியவர் அவனிடம் வந்து,‘‘திருப்பதி வேங்கடாசலபதிக்கு ஏதாவது வேண்டிக்கொண்டால் குணமாகும்

என்று எனக்குத் தோன்றுகிறது" என்றார்— உடனே அம்மாஞ்சி வேதனையைப் பொறுத்துக்கொண்டு, "ஆஹா, அப்படியே செய்வோமே—எனக்கு இன்று மத்தியானத்துக்குள் வயிற்றுவலி போய்விட்டால் இன்னும் ஒரு வாரத்துக்குள் ராமையாவின் தலையை மொட்டை போடுகிறேன்" என்றான்! பெரியவர் "அதோ, அதோ, அதென்ன சபதம்" என்றார்; நான் "என்னய்யா, இது, பயித்தியக்காரத்தனமாயிருக்கிறதே" என்றேன். அம்மாஞ்சி ஒன்றுக்கும் அஞ்சவில்லை—"சபதம் பண்ணியாய் விட்டது; என் தலையை மொட்டைபோடுவது எனக்கு வெகுசுலபம்; உன்னுடைய அனுமதிபெற்று உன்னுடைய தலையை மொட்டை போடுவதுதான் கஷ்டம்; சபதத்தில் கஷ்டமான சபதத்தைத்தான் செய்ய வேண்டும்; உனக்கு என்மேல் அபிமானம் இருந்தால் நீ உடன்படுவாய்; மேலும், நீ சம்மதிக்காவிடில் என் வயிற்றுவலி உனக்கு வரும்; ஜாக்கிரதை" என்றானே மகாபாபி! பிறகு என்ன நடந்தது என்கிறீரோ? கேட்பானேன்! அம்மாஞ்சி இரண்டுமணி நேரத்துக்கெல்லாம் கொட்டாப்புளிபோல் எழுந்து விட்டான்; மூன்று நாட்கள் கழிந்து நான் விழுந்தடித்துக் கொண்டு திருப்பதிக்குப் போய்த் தலையை மொட்டையடித்துக் கொண்டு வந்தேன்! இந்த ரகசியம்தான் நேயர்களுக்குத் தெரிவிக்க வேண்டுமென்று வெகுநாளாய் யோசனை செய்திருந்தேன். இத்தகைய மனப்போக்கு அம்மாஞ்சிக்கு இருந்ததால்தான், "ஊரார் கூத்துப்பார்க்கவும், ஆவா எண்ணெய் விடவும்" என்பதுபோல், அம்மாஞ்சி அபிப்பிராயங்களை வெளியிடவும், நான் அவைகளைக் குறிப்பிடவும் முறையேற்பட்டது!

1947 ஆம் வருஷமும் வந்துவிட்டது. ஐந்து வருஷங்களாகத் தமிழ் நாட்டில் சங்கீத சாத்திர அபிமானிகள் எல்லோரும் தியாகய்யர்வாளுடைய நூற்றாண்டு வைபவம் 1947 ஆம் வருஷத்தில் வரபோகிறது; நாமெல்லோரும் அந்த வைபத்தைப் பிரமாதமாகக் கொண்டாடப் போகிறோம்; அவருடைய ஞாபகார்த்தமாக ஒரு குருகுலம் கட்டப்போகிறோம்; வயோதிக வித்வான்களை சம்ரக்ஷணை செய்யப் போகிறோம்; கர்னாடக சங்கீதத்தை நிலைநிறுத்தப் போகிறோம்; அய்யர்வாளுடைய கீர்த்தனைகளைச்சேமித்து (Variorum Edition) ஒன்று அச்சிடப் போகிறோம்; என்றெல்லாம் சபதம் பண்ணினார்கள். சபதங்கள் லவலேசமும் நிறைவேறாமல் நின்று விட்டன. "ஆசை இருக்குது தாசில் பண்ண, அதிர்ஷ்டம் இருக்குது கழுதை மேய்க்க" என்பது போல் தமிழ் நாட்டுக்குச் சற்றேறக்குறைய ஒரு வருஷ காலமாகத் தீவிரமான பஞ்சம் பிடித்திருக்கிறது. பஞ்சமாவது ஒரு விஷயத்தில் அல்ல, இரண்டு விஷயத்தில் அல்ல. தலைவர்களுக்குப் பஞ்சம், தத்துவத்துக்குப் பஞ்சம். ஆத்ம சுத்திக்குப் பஞ்சம், அநுதாபத்துக்குப் பஞ்சம். துணிப் பஞ்சம், பொருள் பஞ்சம், காகிதப் பஞ்சம், இம்மாதிரி சகல விஷயங்களிலும் பஞ்சம் ஏற்பட்டுத் தமிழ் நாடு முழுவதும் சக்தியற்று ஓய்ந்து கிடக்கிறது, ஆகவே, சங்கீத அபிமானிகள் எடுத்துக்கொண்ட சபதங்களெல்லாம் வீணாய்ப்போய்விட்டன. நூற்றாண்டு வைபவக் கொண்டாட்டத்தில், மதராஸில் அபிமானிகள் கூட்டம் போட்டனர். தியாகய்யர்வாள் ஐந்தாவது வயதிலேயே சுவரில் கீர்த்தனைகளை எழுதியதாக ஒருவர் சொன்னார்! மற்றொருவர் 42 வயது வரையில் அவர் ராம ஜபம் செய்து கொண்டுதான் இருந்தார் என்று சொல்லி விட்டார்! இன்னும் ஒருவர் ஐயர்வாளுக்குச் சிறிய வயதில் பெரிய வியாதி ஒன்று வந்ததாகத் தெரிவித்தார். மதுரை ஸௌராஷ்டிர சபையார் கைப்பற்றிய சுவடிகளையும் பொருள்களையும் எல்லோரும் பார்த்தார்கள். எல்லா விஷயங்களும் நவீன ஆராய்ச்சி முறையை ஒட்டி நாகரிகமாக நடந்தேறின. மதராஸில் நடந்த வைபவத்தைத் தோற்கடிக்க ராஜமந்திரியிலும் ஆந்திரர்கள் பொதுக்கூட்டம் கூடினர். அங்கும் சங்கீதக் கச்சேரிகளும், சர்ச்சைகளும், பிரசங்கங்களும் நடந்தன. வழக்கம்போல் திருவையாற்றில் சங்கீத கோஷ்டிகள் கூட்டம் போட்டார்கள். இது தவிர, பல ஊர்களில் ஐயர்வாளுடைய படத்துக்கு ஆராதனையும் சங்கீதத்துக்குக் கோர வேதனையும் நடந்தேறியதாக அறிகிறோம். தற்சமயம் எல்லா வைபவங்களும் ஒருவிதமாக ஓய்ந்திருக்கின்றன. இனி அடுத்த வருஷம் நல்லகாலம் பிறந்து, பஞ்சம் தீர்ந்து, தமிழ் நாட்டுத் தலைவர்களுக்குத் திரும்பவும் செல்வாக்கு வந்தபிறகு 101-வது ஆண்டு வைபவத்தை விமரிசையாகக் கொண்டாடலாம் என்ற பிரதிக்கினை செய்திருப்பதாகவும் கேள்வி. இந்த உத்தேசத்துடன் தமிழ்நாட்டின் பிராசீனத் தலைவர்களில் ஒருவரான ஸர் ஸி. பி. ராமசுவாமி அய்யரை ஸ்ரீ தியாக பிரும்ம மஹோத்ஸவ சபைக்குத் தலைவராக அங்கீகரித்துள்ளார்கள், என்று அறிகிறோம். இதுவும் நல்ல செய்திதான். ஐயர் அவர்கள் எந்தக் காரியத்தைக் கையில் எடுத்தா

லும் விமரிசையாகப் பூர்த்தி செய்வார் என்பது தமிழ் நாட்டின் கொள்கை. காவேரிப் பாய்ச்சலைத் தடுத்து மேட்டூர் ஏரி கட்டி, தஞ்சாவூர் ஜில்லாவுக்குத் தன சம்பத்தும் தானிய சம்பத்தும் கொடுத்த ஐயர் அவர்கள், நிலையற்று ஓடிக்கொண்டிருக்கும் கர்னாடக சங்கீதத்தைத் தடுத்து திருவையாற்றில் குருகுலம் ஒன்றை அணைக்கட்டாகக் கட்டி, குரு சிஷ்ய பரம்பரையை ஸ்தாபிதப் படுத்துவாரோ என்று அம்மாஞ்சி ஏங்குகிறான்.

தியாகராஜ நூற்றாண்டு வைபவ சந்தர்ப்பத்தில் *Memorial Edition ஒன்றை வெளிப்படுத்த வேண்டும் என்கிற உறுதி இதுவரையில் பலிக்க வில்லை. பத்துப்பேர் கூடி நல்ல காரியம் ஒன்றைச் செய்விப்பது என்கிற ஆசாரம் தமிழ் நாட்டில் கிடையாது என்பதாகத் திண்ணமாய் விளங்கிவிட்டதல்லவா? போட்டியும் அசூயையும் அதிகரித்து வால் தலையை ஆட்டும் பத்ததி தமிழ் நாட்டில் குடிகொண்டுவிட்டது. ஆகவே இனி யாராவது ஒருவர் இந்தக் காரியத்தைத் தலைமேற்கொண்டு செய்தால் தான் Memorial Edition கூடிய சீக்கிரம் வெளிவருமென்று உத்தேசிக்கலாம். கர்னாடக சங்கீதத்தில் மிகவும் அனுபவசாலியான ஒரு நண்பர் தாமே இந்தக் காரியத்தைச் செய்துமுடிக்கலாம் என்கிற உத்தேசத்துடன் இன்னும் ஆறு மாதத்துக்குள் நான்கு பதிப்புக்களை வெளிப்படுத்த ஏற்பாடு செய்திருக்கிறார். இந்தப் புத்தகங்களில் தியாகய்யர்வாளுடைய கீர்த்தனைகள் 400. பிறகு, தீக்ஷிதர் சியாமா சாஸ்திரியார், சுப்பராய சாஸ்திரியார், க்ஷேத்ரஞ்ஞர் இவர்களுடைய உருப்படிகள் 200. ஆக மொத்தம் 600 உருப்படிகள் தெலுங்கிலும் தமிழிலும் சாஹித்யத்துடனும், அர்த்தத்துடனும், ஸ்வரங்களுடனும், ராக லக்ஷணங்களுடனும், பதிப்புக்கு ஆயிரம் புத்தகங்கள் வீதம் வெளிப்படுத்துவதாக ஏற்பாடு ஆயிருக்கிறது. புத்தகங்கள் வெளிவந்தபின் நிமிஷ நேரத்தில் அவைகளெல்லாம் விற்பனை ஆய்விடும் என்பதற்குச் சந்தேகமே கிடையாது. ஆனாலும் அச்சில் போவதற்குமுன் புத்தக ஆசிரியருக்குப்பண உதவி வேண்டுமல்லவா? அந்த உதவி செய்வதற்குச்சங்கீத அபிமானிகள் முந்தி வரவேண்டுமே என்கிறான் அம்மாஞ்சி. தியாகப்பிரும்ம ஆராதனை சபையாரும் இந்தச் சிரேஷ்டமான காரியத்தில் ஈடுபடவேண்டுமே என்கிறேன் நான். நமது தலைவர் ஸர். ஸி. பி. ராமஸ்வாமி ஐயர் மனதுவைத்தால் ஒரு நிமிஷத்தில் இந்தக் காரியம் கைக்கூடலாம்! இந்த வேண்டுகோளைத் தியாகப்பிரும்மத்துக்கே அர்ப்பணம்செய்கிறோம்! பிறகு கடவுள் காட்டிய வழி.

*    *    *

தமிழ் நாட்டுத் தலைவர்கள் சிலர் சங்கராந்திக்கு முதல் நாள் பத்திரிகைகளில் ஒரு எச்சரிக்கை பிரசுரம் செய்தனர். என்னவென்றால் பொங்கல் பண்டிகையைத் தமிழ்நாட்டுப் பெரியபண்டிகையாகக் கொண்டாடவேண்டும், தமிழர்கள் எல்லோரும் ஒன்றுசேர்ந்து ஒரு வாரம் பண்டிகையைக் கொண்டாடி, தமிழ் நாட்டுக்குச் சுயராஜ்யம் ஏற்படவேண்டும் என்று வேண்டிக் கொண்டு ஒற்றுமைக்க வேண்டும் என்பதாகவே! ததாஸ்து என்கிறான் அம்மாஞ்சி. இப்பொழுதாவது ஒற்றுமைப்பின் முக்கிய அம்சங்களைக் கவனித்து, சண்டை, சச்சரவு, அசூயை இல்லாமல் தமிழ் பொதுமக்கள் எல்லாரும்—பெரியோர், சிறியோர், ஏழை, பணக்காரர், பார்ப்பனர், பார்ப்பனரல்லாதவர், பெரியஜாதி, சிறியஜாதி, தமிழ் சங்கீதம் தெலுங்கு சங்கீதம், ஆரியர், திராவிடர் என்கிற—பேதங்கள் எல்லாவற்றையும் ஒதுக்கி, செந்தமிழ் நாட்டின் செழிப்பைக் கருதி ஒன்று சேர்ந்து உழைப்பாரோ என்று அம்மாஞ்சியும் நானும் ஆயிரத்தெட்டுஅண்டம் குடைக்குள் ஆண்ட சூரனை வளைத்து வளைத்து வேலால் இருபிளவாகப் பிளந்த புயனுக்குக் வேண்டிக்கொள்ளுகிறோம்! ஆண்டவன் அருள் புரிவாராக.

---

* Memorial Edition—நினைவு மலர்

# என் சரிதை

பூமி

நான் ஒரு கிரகம். எங்கள் குடும்பம் மிகப் பெரிது. நான் சூரியனைச் சுற்றி வருகின்றேன். நான் செல்லும் பாதை நீள்வட்ட [Ellipse] வடிவானது. நான் எப்படிச் சூரியனைச் சுற்றி வருகிறேனோ அதேபோல, சந்திரன் என்னைச் சுற்றி வருகிறது. என்னைப்போல இன்னும் பல கிரகங்கள் இருக்கின்றன. சந்திரன் என்னைப் பிடித்துக்கொண்டு தொங்குவதனால் என்னுடைய உபகிரகம் என்று அதனை அழைக்கிறார்கள். இதேபோல மற்றக் கிரகங்களுக்கும் உபகிரகங்கள் உள. சூரியனும் கிரகங்களும் உபகிரகங்களும் சேர்ந்து ஒரு குடும்ப வாழ்க்கை நடத்தி வருகிறோம். இக் குடும்பத்தையே சூரிய ஒழுங்கு (Solor System) என்று வான நூலோர் அழைக்கின்றனர். சூரியனே எங்கள் குடும்பத்திற்குத் தந்தைபோலிருந்து வருகிறது.

இராக் காலங்களில் ஆகாயத்தை உற்றுப் பாருங்கள். எத்தனை நட்சத்திரங்கள் காணப்படுகின்றன! ஆயினும் அவற்றில் சிலவே என் சகோதரர்களான கிரகங்கள். உண்மையில் எங்களை நட்சத்திரங்கள் என்று கூறுவது தவறு. எங்களுக்கும் நட்சத்திரங்களுக்கும் என்ன வேற்றுமை தெரியுமா? நாங்கள் உண்மையில் மிகச் சிறியவர்கள். நட்சத்திரங்கள் எங்களைவிடப் பல்லாயிர மடங்கு பெரியவை. ஆனால் என் சகோதரர்களெல்லாரும் எனக்கு அருகாமையிலேயே இருப்பதால் அவர்களைக் காணும் மக்கள் "எவ்வளவு பெரியவை இக்கிரகங்கள்!" என்று சொல்லி ஆச்சரியமடைகிறார்கள். நட்சத்திரங்கள் எனக்கு வெகுதூரத்தில் இருப்பதால், என் பரப்பில் வாழும் மக்களுக்கு அவை மிகச் சிறியவைபோலத் தோன்றுகின்றன. ஆனால் உருவின் அளவைக்கொண்டு வானத்திலுள்ள ஒரு ஒளிப் புள்ளியை (Luminous point) நட்சத்திரமா அல்லது என்னைப் போன்ற ஒரு கிரகமா என்று கண்டுபிடிக்க முடியாது. நட்சத்திரங்கள் மின்னுகின்றன, பொறி தட்டுகின்றன. அப்படி மின்னுதல் இல்லையானால் அது கிரகம். எங்களுக்கு மின்னுஞ் சக்தி இல்லாததற்குக் காரணந் தெரியுமா?

சூரியனுடைய ஒளி எங்கள்மேல் படுகிறது. அந்தச் சூரிய ஒளியில் நாங்கள் பிரகாசிக்கிறோம். ஆகவே எங்களுக்குச் சுய ஒளி இல்லை. எங்களிடம் காணப்படும் ஒளி சூரியனால் எங்கள்மேல் வீசப்படும் ஒளியே. ஆனால் உண்மையான நட்சத்திரம் ஒவ்வொன்றும் சூரியனைப் போன்றது. பிறருதவியின்றித் தானே பிரகாசிக்கும் சக்தியுடையது. நட்சத்திரங்களெல்லாம் மிக வெப்பமானவை, ஓயாமல் எரிந்துகொண்டேயிருப்பவை. நான் பிறந்ததும் வளர்ந்ததும் எவ்வாறு என்று கேட்கிறீர்களா?

முதலில் நானும் என் சகோதரர்களும் சூரியனுடைய பகுதிகளாயிருந்தோம். சூரியன் அப்போதும் ஒரு அதி தீக்ஷண்யமான சுடர்ப் பொருளாகவே இருந்தது. எது காரணம் பற்றியோ (எனக்கே ஞாபகமில்லை) நானும் என் சகோதரர்களுமாய்ச் சேர்ந்து சூரியனுடன் இனி இருத்தல் இயலாதென்றும் அதனால் நாங்கள் தனியே விலகிச் சென்றுவிடவேண்டும் என்றும் தீர்மானித்தோம். அதேபோல அவனிடமிருந்து விலகி, காற்றில் பறந்துபோனோம். ஆனாலும் தந்தைபோலும் சூரியனிடம் எங்களுக்கிருந்த அன்பு எங்களை அவனுடன் இன்னும் பிணைக்கவைத்தது; அவனிடமிருந்து அறவே விலகி நிற்க எங்களால் முடியாமற்போயிற்று.

அதனால் அவனைச் சுற்றிவர ஆரம்பித்தோம். இங்ஙனம் எங்களைச் செயற்படுத்தும் (Operate) தாக்கு (Force)க்குப் புவிக் கவர்ச்சி (Gravity) என்று பெயர். இந்தக் கவர்ச்சி எங்களை மாத்திரம் கட்டுப்படுத்துவதொன்று அல்ல. எந்தச் சிறிய பொருளும் அதற்கருகாமையிலுள்ள பெரிய பொருளால் இம்மாதிரி கவரப்படுகிறது. இக் கவர்ச்சியாலேதான் மேலே எறியப்படும் பொருள்கள் மீண்டும் பூமியில் வந்து சேருகின்றன. நாங்கள் சூரியனிடமிருந்து பிரிந்து போகும்போது என் அனற்பதம் (Temperature) எவ்வளவு இருந்திருக்கும் என்று உங்களால் எண்ணவும் முடியாதே! என்னை நாற்புறமும் சூடான வாயுக்களும் ஆவிகளும் சூழ்ந்துகொண்டிருந்தன. பிறகு காலஞ் செல்லச் செல்ல என் அனற்பதம் குறைந்து, தற்போதைய நிலையை அடைந்தேன். நன்றாய் யோசித்துப் பார்த்தீர்களானால் சூரியனும் ஆறி வருவது உங்களுக்குத் தெரியலாம். ஆனால் அது என்னைப்போலக் குளிர்நிலையடைய இன்

னும் பலகோடி வருஷங்கள் செல்லும். நான் சூரியனைவிட்டுப் பிரிந்து சென்ற காலத்து என் நிலப்பரப்பில் தாவரங்களோ விலங்குகளோ மனிதர்களோ ஒரு சிறிதும் இருக்கவில்லை. எனது தீவிர சூட்டினால் அவற்றின் உயிர் வாழ்க்கை இயலாது போய்விட்டது.

நான் எப்படி, சூரியனிடமிருந்து பிரிந்து சென்றேனோ அதேபோலச் சந்திரன் என்னிடமிருந்து பிரிந்து சென்றது. இப்பொழுது அமெரிக்காவுக்கும் ஜப்பானுக்குமிடையே பஸிபிக் மகா சமுத்திரம் இருக்கிறதல்லவா? இது அடைத்துக்கொண்டிருக்கும் இடத்தில்தான் சந்திரன் இருந்ததாக எனக்கு ஞாபகம். அது எழுந்து போய்விட்டதும் என் குளிர்ச்சியினால் காற்றில் இருந்த நீராவியெல்லாம் சுருக்கிச் செறிந்து (Condense) மழையாகப் பெய்யவே அம்மழைநீர் சந்திரனைப்போன்ற என் உபகிரகங்கள் என்னைவிட்டுச் சென்றதனாலுண்டான குழிகளிலெல்லாம் நிரம்பினது. இந்த நீர்ப் பரப்புக்களையே கடல்களென்றும் சமுத்திரங்களென்றும் பெயரிட்டு அழைக்கிறீர்கள். இப்படியாக என்னிடமிருந்த நிலப்பரப்பும் அதைச் சூழ்ந்திருந்த நீரும் குளிர்ந்தவுடனே உயிரினங்கள் அவற்றில் வாழத்தொடங்கின.

இப்பொழுதும் என் புறப்பரப்பு குளிர்ச்சியடைந்திருக்கிறதே தவிர, என் உட்புறம் சூடாகவே யிருந்துவருகிறது. ஒரு சுரங்கத்திற்குள் செல்லச் செல்ல சூடு அதிகரிப்பதை இன்றுங் காண்கிறீர்கள் அல்லவா! அப்படியே இன்னும் பல நூறு மைல்கள் ஆழத்தில் நீங்கள் செல்வீர்களானால் அங்கே தரைப்பரப்பு முழுதும் சிவக்கக் காய்ந்திருக்கக் காண்பீர்கள். சந்திரன் என்னைவிட மிகச் சிறியது. அதனால் அது மிக விரைவில் குளிர்ந்து போய்விட்டது. அதை இப்பொழுது 'தண்மதி' யென்றும், அதன் ஒளியைத் 'தண் ஒளி' என்றும் அழைக்கிறீர்கள். அதில் எங்கே பார்த்தாலும் பனிக்கட்டியாறு (Glaciers) களும் பனி மலைகளுமே உள்ளனவோ என்றுகூட ஊகிக்க வேண்டியிருக்கிறது.

உங்கள் ஆயுளை இன்ஷ்யூரன்ஸ் செய்துகொள்வதில் தாமதம் கூடாது
இப்பொழுதே
**தி விச்வபாரதி இன்ஷ்யூரன்ஸ்**
கம்பெனி லிமிடெட்டில்
உங்கள் ஆயுளை இன்ஷ்யூர் செய்துகொள்ளுங்கள்.
தலைமைஆபீஸ் :: பம்பாய்
மிஸ்டர் ராம்ராவ் கண்பத்ராவ் விஜயாகர், சேர்மன் & மானேஜிங் டைரக்டர்.
மிஸ்டர் C. G. திவேதி, மானேஜிங் டைரக்டர்.
ஏஜண்டுகள் இல்லாத நகரங்களில் சம்பளத்திலேயும் கமிஷனிலும் வேலைசெய்ய செல்வாக்கும் யோக்யதையுமுள்ள ஏஜண்டுகள் தேவை.
:( விபரத்திற்கு எழுதவும் ):
T. S. Panchu, பிராஞ்சு மானேஜர்,
விச்வபாரதி லைப் பிராஞ்சு, No. 30, சகிண்ட்லைன் பீச், மதராஸ்.

# புதுக் குடித்தனம்

வேங்கடலக்ஷ்மி

1

ரயில் கூவென்று ஊதியது. சிறுமலைப் பட்டி ஸ்டேஷனில் சாதாரணமாக ரயில் ஐந்து நிமிஷம்தான் நிற்கும். அன்று ஐந்து நிமிஷம் கூடவே நின்றுவிட்டது.

“இறங்கு! இறங்கு! ரயில் கிளம்பப் போகிறது!” என்று தம் மனைவியை அவசரப்படுத்தினார் சிதம்பரம்பிள்ளை.

“காந்திமதி! உடம்பை நல்லாப் பாத்துக்கிடணும் தெரியுமா? லேகியம், மருந்து எல்லாம் வேளாவேளைக்குச் சரியாச் சாப்பிட்டுவா!...பிள்ளையையும் ஜாக்கிரதையாகக் கவனிச்சுக்க; அடிக்கடி சௌகர்யத்துக்கு எழுது” என்று தன் மகளுக்குப் புத்திமதி கூறிக்கொண்டே தோளில்சார்த்தியிருந்த குழந்தையையெடுத்து முத்தமிட்டுவிட்டு அவள் கையிற்கொடுத்தாள் பார்வதியம்மாள்.

அவள் கண்களில் நீர் தளும்பியது. ரயிலை விட்டுக் கீழேயிறங்கி நின்றுகொண்டாள்.

“போய்வாருங்க மருமகப்பிள்ளை! அடிக்கடி காயிதம் போடுங்க. காந்தி! உடம்பை ஜாக்கிரதையாகக் கவனிச்சுக்க,” என்றார் சிதம்பரம்பிள்ளை.

“ஆகட்டும் மாமா” என்றான் வண்டியில் உட்கார்ந்திருந்த மருமகன் ஷண்முகம்.

“போய்வருகிறேன் அப்பா, போய்வறேன் அம்மா” என்றாள் காந்திமதி. வண்டி புறப்பட்டுவிட்டது.

அது கண்ணுக்கு மறையுமட்டும் பார்த்திருந்துவிட்டு ஒரு பெருமூச்சுடன் திரும்பினாள் பார்வதியம்மாள்.

“வீட்டுக்குப் போகலாமா?” என்றார் சிதம்பரம்பிள்ளை.

“ஆமாம், வேறெங்கே போவது?” என்று சலித்துக்கொண்டாள் அவர் மனைவி.

அவளுடைய வார்த்தைகள் சிதம்பரம் பிள்ளையின் முகத்தில் லேசான புன்னகையைத் தருவித்தன. ஏதோ கூற வாயெடுத்தவர் அவள் முகத்தில் தோன்றிய வேதனையைக் கண்டதும் மௌனமாக நடக்கலானார். பார்வதியம்மாளும் அவரைத் தொடர்ந்தாள்.

ஸ்டேஷனுக்கு வெளியே ஒரு ஈ காக்கை கூடக் கிடையாது. அடர்ந்து தழைத்திருந்த பூவரச மரத்தின்கீழ் அவர்கள் வீட்டு மாட்டுவண்டி நின்றுகொண்டிருந்தது.

பார்வதியம்மாள் வண்டியிலேறி உட்கார்ந்து கொண்டாள். சிதம்பரம் பிள்ளை வண்டியைச் செலுத்தலானார். கல் கல்லென்ற சதங்கையொலியுடன் வண்டியை இழுத்துச் சென்றது காளை.

2

காலை பத்துமணிசமயம். சிறுமலைப்பட்டி கிராமம் கதிரவனொளியில் மின்னிக்கொண்டிருந்தது. பூவாற்றங்கரையில் நெடுந்தூரம் பரவிக்கிடந்த மாஞ்சோலைகளின் மத்தியில் புதுமணப்பெண்ணைப்போல் நாணிமறைந்து கிடந்த அச்சின்னஞ்சிறு குக்கிராமம் இயற்கையன்னையின் எழிலனைத்தையும் ஒருமிக்கத் தன்னகத்தே ஏந்திநின்றது. கிராமத்தை வளைத்து உத்தரீயமிட்டாற்போல் தழுவிச் சென்றது பூவாறு—நீர்வசதிக்குக் குறைவில்லை. பச்சைப் பசிய வயற்பரப்புக்களும் அடர்ந்து தழைத்துக் கிடந்த மாஞ்சோலைகளும் கண்ணுக்கெட்டியதூரம் விரிந்து கிடந்தன. மத்து மதுக்கென நிற்கும் அன்னையின் மடியில் நிம்மதியாய்ப் படுத்திருக்கும் இளங் குழந்தையைப்போல் சிறுமலைப் பட்டி கிராமம் இவ்வியற்கைக் காட்சிகளின் நடுவே அமைதியும் அழகும் உருவாய் விளங்கியது.

கிராமவாசிகள் அனைவரும் சைவவேளாளர்கள்—பழங்காலப் பழக்க வழக்கங்களில் பற்றுள்ளவர்கள்—விடியுமுன்னரே எழுந்து பூவாற்றில் ஸ்நானம் செய்து, திருநீறு பூசி, சிவப்பழமாய் விளங்குவார்கள். கிராமக் கோடியிலிருந்த சிவன்கோயிலில் தேர், திருவிழா முதலிய யாவும் முறைப்படி விமரிசையாய் நடக்கும். முக்கால்வாசிப் பேர் வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டிருந்தனர்.—ஒரு சிலருக்குமட்டும் கொடுக்கல் வாங்கல், வெளியூர்ப்பண்டங்களை லாபத்துக்கு வாங்கி உள்ளூரிலேயே விற்றல் ஆகியவை உண்டு.

மொத்தத்தில். தெளிந்த நீரோடை போல் சலனமற்று நிம்மதியாய்ச் சென்றுகொண்டிருந்தது சிறுமலைப்பட்டி வாசிகளின் வாழ்க்கை.

அன்று திருவாதிரை. கிராமம் முழுதும் நீர் தெளிக்கப்பட்டு, விதம் விதமான வர்ணக் கோலங்களுடன் பொலிவுற்று விளங்கியது. வீட்டுக்குவீடு மாவிலைத்தோரணங்கள் கட்டப்பட்டிருந்தன.

சிவன் கோயில் கண்டாமணியின் நாதம் அடிக்கடி கணகணவென்று ஒலித்துக் கொண்டிருந்தது. கோயிலைச் சுற்றிலும் சிறுவர்கள் குதூகலத்துடன் குதித்துக் கூச்சலிட்டுக் கும்மாள மடித்துக்கொண்டிருந்தனர். பெரியோரும் சிறியோரும் கும்பல் கும்பலாக ஜனங்கள் கோயிலுக்குப் போய் வந்து கொண்டிருந்தனர். நாயனக்காரன் விதம் விதமான அபஸ்வரங்களைத் தன் வாத்தியத்தின் மூலம் பொழிந்து தள்ளிக்கொண்டிருந்தான்.

குளித்துத் திருநீறணிந்து கோயிலுக்குச் செல்லத் தயாராய் நின்றார் சிதம்பரம் பிள்ளை. தேங்காய், பழம், வெற்றிலை பாக்குத் தட்டைக் கையிலெடுத்துக் கொண்டு தெருப்பக்கம் வந்தவர் எதையோ எண்ணிக்கொண்டவராய் உள்ளே போனார்.

"பார்வதி! நீ வரல்லே கோயிலுக்கு?"

கூடத்தில் ஸ்வாமி படங்களுக்கு மாலைகள் சார்த்திக்கொண்டிருந்த பார்வதியம்மாள் திரும்பிப் பார்த்து, "நீங்க போய் வாங்க; எனக்கு வீட்டிலே இன்னும் வேலை கெடக்குது; அத்தையெல்லாம் முடிச்சிப் போட்டு, நான் பக்கத்துவீட்டு ஆச்சியோடு போய் வந்துக்கிடறேன்" என்று கூறிவிட்டு மீண்டும் தன் வேலையில் முனைந்தாள்.

சிதம்பரம் பிள்ளையின் முகத்தில் அதிருப்தி தோன்றியது. சற்றுநேரம் வரையில் மௌனமாய் உட்கார்ந்திருந்தார்.

தூரத்திலிருந்து கோயில் கண்டாமணியின் நாதம் காற்றில் மிதந்துவந்தது. அதைக்கேட்ட பார்வதியம்மாள், "திருவாதிரை யன்னிக்கில்லெ நம்ம காந்திமதி பொறந்துது. இன்னிக்குப் பதினெட்டு வயசாச்சு அதுக்கு. உங்கம்மாகூட செத்துப் போகிறவரைக்கும் அத்தெ சிவகாமின்னாட்டுதான் கூப்பிட்டிருந்தாங்க. கொளந்தெ ஊருக்குப் போனதிலிருந்து வீடே வெறிச்சோடிப்போச்சு;............" என்று பழைய நினைவுகளை யெடுத்துப் பேசிப் பெருமூச்சுவிட்டாள்.

"ஆமா!.........அது மாமியார் வீட்டுக்குப் போவாமெ எவ்வள நாள்தான் நம்ப வெச்சிருக்க முடியும்? என்ன செய்யலாம்? இப்ப நீயும் நானுந்தான் புதுப்பொண்ணும் பிள்ளையுமாப் புதுக்குடித்தனம் செய்யறோம்!" என்று சிரித்தார் சிதம்பரம்பிள்ளை.

"சரிதான் போங்க; இந்தக் கிண்டல் பேச்சு உங்களைவிட்டு எப்பவுமே போவாது!" என்று பார்வதியம்மாளும் உடன் சிரித்தாள்.

சிதம்பரம்பிள்ளை மீண்டும் சிரித்துவிட்டு எழுந்துபோனார்.

* * *

"என்னா பார்வதி? காந்தி சௌக்யமாயிருக்குதில்ல! அடிக்கடி சேதி வருதா? வீடு ஒன்னு கெடக்குது! இவ்வளவு பெரிய வீட்டிலே இப்ப நீயும் உன் வீட்டுக்காரரும் தனிக்குடித்தனம் பண்ணறீங்களா?" என்று சிரித்துக்கொண்டே உள்ளே நுழைந்து தன் பார்வையைச் சுற்றுமுற்றும் ஓட்டினாள் பக்கத்து வீட்டு ஆச்சி.

பார்வதியம்மாள்: "வாங்க ஆச்சி! என்னமோ போங்க; காந்திமதி போனதிலிருந்து வீடு ஒரேமுட்டா வெறிச்சோடிப் போயிட்டுது; சுத்திச்சுத்தி நாங்கதா ரெண்டுபேர் திரும்பத்திரும்ப வீட்டுலே புழங்கறோம்; ஒண்ணுமே புடிக்கல்லே...... இப்பகூடக் காந்தி என்னை வரச்சொல்லி எழுதி யிருக்குது; நான் போயி ரெண்டு மாசம் இருந்துவரலாம்......இவரு சாப்பாட்டுக்குக் கஷ்டப்படுவா ரென்னு யோசிக்கிறேன்" என்றாள்.

ஆச்சி, விரலை மோவாயில் வைத்தபடி, "நல்லாச் சொன்னெ பார்வதி! சாப்பாடு என்னா பிரமாதம்?.........நம்ப வீட்டிலே ரெண்டு மாசம் சாப்பிடக்கூடாதா? இல்லாட்டி நாலு வெள்ளிக்காசை வீசியெறிஞ்சிட்டா தவிசுப்பிள்ளைக்கா குறைச்சல்? நீ பேசறது அதிசயமாயில்ல இருக்குது!" என்றாள்.

"என்னமோ பார்க்கலாம்! அவரென்னா சொல்லறாரோ?" என்று கூறிய பார்வதி, 'நேரமாவல்லிங்களா ஆச்சி! கோயிலுக்கு போவலாமா?" என்று கேட்டாள்.

"அத்தெக் கேக்கத்தானே இப்பவந்தேன்! அதுக்குள்ள பேச்சு எப்படியோ திரும்பிடிச்சு,—வா போவலாம்! என் மருமககூட உனக்காகத்தான் காத்திருக்குது" என்று கூறிவிட்டு வாசலை நோக்கி நடந்தாள் ஆச்சி.

பார்வதியம்மாள் தெருக்கதவைப் பூட்டினாள். ஏதேதோ பேசியபடியே கோயிலை நோக்கி நடக்கலானார்கள்.

3

நல்ல நிலா வெளிச்சத்தில் சிறுமலைப்பட்டி கிராமம் தன்னை மறந்து துயில்வது போல் விளங்கியது.

இரவு பதினொரு மணி இருக்கும்; ஊரோசை அடங்கிவிட்டது. எங்கோ ஒவ்வொரு வீடுகளில் லேசான பேச்சுக்குரல் கேட்டது. சிவன் கோயில் கோபுரத்தில் குடியிருந்த ஆந்தையின் குரல் இரண்டொரு தரம் கிரீச்சென ஒலித்தது. மற்றப்படி கிராமம் முற்றிலும் ஆழ்ந்த அமைதி குடிகொண்டிருந்தது.

சமையலறையில் தன் வேலைகளையெல்லாம் முடித்துக்கொண்டு தெருப் பக்கம் வந்தாள் பார்வதியம்மாள்.

வாசலில் போட்டிருந்த கயிற்றுக் கட்டிலின்மீது உட்கார்ந்திருந்தார் சிதம்பரம் பிள்ளை.

கையில் கொண்டுவந்த வெற்றிலைத் தட்டை அவரருகில் வைத்துவிட்டு, "உஸ், அப்பாடா!......கைகாலெல்லாம் கொடைச்சல் எடுக்குது" என்று கூறிக்கொண்டே திண்ணையில் உட்கார்ந்து கொண்டாள் பார்வதி.

அவள் கணவரின் முகத்தில் புன்னகையின் சாயல் படிந்தது.

பாக்குவெட்டியைக் கையிலெடுத்துப் பாக்கை வெட்டியபடியே, "நாளைக்கு வேணுமானா வள்ளுவனை வந்து நாடி பார்த்து ஏதாவது நல்ல மருந்து கொடுக்கச் சொல்லட்டுமா?" என்று விஷமமாகக் கேட்டுக்கொண்டே பாக்கை வாயில் போட்டுக்கொண்டார். பிறகு வெற்றிலையைக் கையில்எடுத்துச் சுண்ணாம்பு தடவிக் கொண்டே அவளைச் சாவதானமாக நோக்கினார்.

பார்வதியம்மாள் உதட்டைக் கோணிக் கொண்டாள்.

"இவ்வளாம் வயசுக்குமேல்கூட என்னா எளவு கிண்டல் வேண்டியிருக்குது! என்னாலே இந்த வீட்டிலே ஒண்டியா குடித்தனம் பண்ண முடியாது! சுத்திச்சுத்தி வாரத்துக்குள்ளே கைகால் அசந்து போவுது."

மனதிற்குள்ளேயே சிரித்துக்கொண்டார் சிதம்பரம் பிள்ளை.

"அதுக்கு என்ன பண்ணச்சொல்லுறே? நாளைக்கே நம்ம காரியஸ்தரிடம் சொல்லி நம்பவீட்டுக்கு ஒரு தவிசுப் பிள்ளையை ஏற்பாடு பண்ணிடச்சொல்லுறேன்! அவ்வளவு தானே!"

"தவிசுப்பிள்ளையெ வெச்சுக்கிட்டு நீங்க இருங்க; நான் போய், காந்திமதி கிட்டெ ரெண்டுமாசம் இருந்திட்டு வாறேன்," என்று தன் மனதிலுள்ளதை மெதுவாக வெளியிட்டாள் பார்வதி.

"அப்படி சொல்லு! சுத்திவளச்சுப் பேசினா எனக்கென்னா தெரியும்? இந்தா பார்வதி! நான்சொல்றதைக்கேளு; காந்தி என்னமோ எளுதுது. ஷண்முகம் உன்னை வரச்சொன்னானா? இல்லையே! அதுங்க ரெண்டும் அறியாததுங்க; நீ வயசானவ; நீபோய் அங்கே நொளைஞ்சிக் கிட்டாயானா அதுங்களுக்கு ஒரு முட்டுக்கட்டையாயல்ல இருக்கும்! நீயே யோசிச்சுப்பாரு! நானும் கெளவன், நீயும் கெளவி, நம்ப இருக்கற விடத்துலே இருந்தாதான் மதிப்பு! அங்கேயெல்லாம் போனா அவுங்களுக்கும் கஷ்டம், நமக்கும் 'கஷ்டம்!" என்றார் சிதம்பரம் பிள்ளை.

பார்வதியின் முகம் சுண்டிவிட்டது.

சற்றுப் பொறுத்து "என்னங்க அப்படி ஒரேயடியாச் சொல்லிட்டீங்களே! நம்ப வயத்துக்கொளந்தை! அதுங்கிட்டகூடவா நாம்ப இந்தமாதிரி மதிப்பும் மரியாதையும் வைச்சுக்கிடணும்?" என்று கேட்டாள்.

"என்னமோ, என் மனசிலே தோணினதே சொன்னேன்; பிறவு உன்னிஷ்டம்," என்று பதில் கூறினார் சிதம்பரம் பிள்ளை.

அப்பொழுது அதற்குமேல் பேச்சு ஓடவில்லை.

எழுந்து உள்ளேவந்தார் சிதம்பரம் பிள்ளை.

பார்வதியம்மாள் வெற்றிலைத் தட்டைக் கொண்டு தெருக்கதவைத் தாளிட்டு விட்டு அவர் பின்னால் வந்தாள்.

* * *

ஒரு வாரம் சென்றது.

நடுப்பகல் ஒரு மணியிருக்கும்; பார்வதியம்மாள் சமையலறையில் பணியாரம் சுட்டுக்கொண்டிருந்தாள். தவிசுப்பிள்ளை கூடமாட ஒத்தாசை செய்துகொண்டிருந்தான்.

முன்பக்கத்துக் கூடத்தில் மூட்டை முடிச்சுகளெல்லாம் தயாராய்க் கட்டிவைக்கப் பட்டிருந்தன. வாசலில் வண்டி நின்று கொண்டிருந்தது. சிதம்பரம் பிள்ளை வண்டிக்காரனிடம் ஏதோ பேசியபடி திண்ணையில் உட்கார்ந்திருந்தார்.

பார்வதியம்மாளின் மனதில் குதூகலம் நிரம்பியிருந்தது.

பக்கத்துவீட்டு ஆச்சி மலர்ந்த முகத்துடன் உள்ளே வந்தாள்.

"என்ன பார்வதி! கடைசிலே இன்னிக்கு ஊருக்குப் போவருயாமே?"

"ஆமாங்க ஆச்சி, ஒரு மாசம் காந்திமதி கிட்டெ இருந்து வரலாமின்னிருக்கேன்."

"அவரு சம்மதப்பட்டாரா? உங்க வீட்டுக்காரரு?"

"அவ்வளவா இஷ்டமில்லெ; இப்பகூட அவுங்களுக்கு அரைச்சம்மதந்தான்" என்று சிரித்தாள் பார்வதி.

"இம்;.........கிளம்பு சீக்கிரம்.........வண்டிக்கு நேரமாச்சு!".........என்று வாசலிலிருந்தபடியே கூவினுர் சிதம்பரம்பிள்ளை.

சாமான்களெல்லாம் வண்டியிலேற்றப்பட்டன.

"ஐயாவுக்குச் சரியான வேளைபாத்து நல்லாச் சாப்பாடு பண்ணிப்போடு; பண்டங்களைப் பாளடிக்காதே! ஊட்டெக் கவனிச்சுக்க" என்று தவிசுப்பிள்ளையிடம் கூறிவிட்டு வண்டியிலேறிக்கொண்டாள் பார்வதி.

"ஆச்சி! போய்வாறேன்;......வீட்டெக் கொஞ்சம் பார்த்துக்கிங்க;......ஒரு மாசத்துலே வந்திடறேன்!" என்று ஆச்சியிடமும் சொன்னுள்.

"ஆவுட்டும்!" என்று தலையசைத்தாள் ஆச்சி.

சிதம்பரம்பிள்ளை வண்டியிலேறிக்கொண்டார்.

பார்வதியின் மனதில் தன் செல்வ மகளைக் காணப்போகும் ஆனந்தம் பொங்கி வழிந்தது.

வண்டி துரிதமாக ஸ்டேஷனை நோக்கிச் செல்ல ஆரம்பித்தது.

4

மூன்று வாரங்கள் ஓடிப்போய்விட்டன... தன் தாயார் சௌக்யமாக வந்து சேர்ந்ததாகக் காந்திமதி எழுதி யிருந்தாள். அதற்குப்பின் அவர்களிடமிருந்து ஒரு தகவலும் தெரியவில்லை. தினமும் தபால்காரனை எதிர்பார்த்துப் பார்த்து அலுத்துப்போனுர் சிதம்பரம்பிள்ளை.

அதன்பிறகு மருமகன் ஷண்முகத்தினிடமிருந்து பிள்ளைக்கு ஒரு கார்டு வந்தது. மாமிக்கு ஊர் ஒத்துக்கொள்ளாமையினுல் காயலாவா யிருந்ததாகவும் கூடிய சீக்கிரம் திருப்பி யனுப்பிவிடுவதாகவும் எழுதியிருந்தான். இதைப் படித்த சிதம்பரம் பிள்ளைக்கு முதலிற் கோபம் வந்தது. அதற்குப் பின்பு சிரிப்புப் பொங்கி வந்தது. கடிதத்தைக் கிழித்தெறிந்துவிட்டு, "நன்ருக வேணும் அவளுக்கு. போகாதே, போகாதே என்று சொன்னேனே! கேட்டாளா?......" என்று தமக்குத் தாமே சொல்லிக்கொண்டார்.

* * *

"ஏய்!......நல்ல சூடாக் காப்பி போட்டுக்கிட்டுவா!......என்று தவிசுப்பிள்ளையிடம் சொல்லிக்கொண்டே கூடத்திலுட்கார்ந்தாள் பார்வதி. அவளைச் சுற்றிலும் ஊரிலிருந்து கொண்டுவந்த சாமான்கள் பரப்பப்பட்டிருந்தன.

சிதம்பரம்பிள்ளை: "ஊரிலே காந்தி, கொளந்தை, எல்லாம் சௌக்யமா?...... உனக்குக்கூட என்னமோ காயலாவா யிருந்திச்சாமே! ஷண்முகம் எழுதியிருந்திச்சே!" என்று விசாரித்தார்.

பார்வதியம்மாள் ஒன்றுமே பதில் பேசவில்லை.

சற்றுப் பொறுத்து, "குளந்தை நல்லாருக்குது; இப்பதான் நாலுநாளா மூகம் பாத்துச் சிரிக்குது,......" என்ருள்.

அன்றிரவு சாப்பாட்டுக்குமேல் நிலாவெளிச்சத்திலுட்கார்ந்து தன் கணவரிடம் ஊர் சமாசாரமெல்லாம் சொன்னுள் பார்வதி. கடைசியில், "நீங்கள் சொன்னது நெசம்தான்; நம்ப இருக்கிறவிடத்துலே இருந்தாத்தானில்ல மதிப்பு! காந்திமதி எழுதிச்சேன்னுபோனேன்! மருகப்பிள்ளை, 'மாமி!' வந்தியான்னுகூட ஒரு வார்த்தை கேக்கல்ல; அதான உடனே கிளம்பி வந்திட்டேன்" என்ருள்.

சிதம்பரம்பிள்ளை: 'ஸரி தான் போ!...... விட்டுத்தள்ளு!"......என்ருர்.

பார்வதி: தவிசுப்பிள்ளையை நாளைக்கே அனுப்பிச்சுடுங்க, பண்டத்தையெல்லாம் பாளடிச்சிக்கிட்டிருக்கான்!" என்ருள்.

"இருந்திட்டுப் போவட்டுமே! உன்னலெயும்தான் ஒண்டியா முடியல்லையே" என்ருர் சிதம்பரம்பிள்ளை.

"என்னத்துக்குங்க?...ருக்குமணி குக்கராமே!......அது ஒண்ணு ஊரிலேருந்து புதிசா வாங்கியாந்திருக்கேன்! ஒரு மணி நேரத்திலே சுலபமாய்ச் சமையல் செய்திடலாம்!......நம்ப இரண்டுபேர் தானே இனிமே புதுக்குடித்தனம்! தவிசுப்பிள்ளை நமக்கு வேண்டாம்!" என்ருள் பார்வதி.

சிதம்பரம்பிள்ளை சிரித்தார்.

"சரிதான், உன்னிஷ்டம்!" என்று சொல்லிக்கொண்டே கையிலிருந்த வெற்றிலைச் சுருளை வாயில் போட்டுக்கொண்டார்,



தலைவர்களின் கையெழுத்தை வாங்கிச் சேர்ப்பதில் பெருத்த அவா நமது வாலிபர்களுக்கு.
ஆசார்ய கிருபலானி இப்பணியில் ஈடுபட்டுள்ளார்.



விஷயாலோசனைக் கமிட்டியில் கலந்துகொள்ளச் செல்லும்
ஸ்ரீமதி கமலாதேவி முதலிய தலைவியர்.

# விமோசனம்

"ஆத்ரேயி"

நாளுக்குநாள் கடவுள் தனக்குச் செய்த கொடுமையை எண்ணி எண்ணி அவள் ஏங்கினாள். சூம்பிப்போன தன்னுடைய கால்களை இழுத்துக்கொண்டு, சூரியனொளியில் பூக்களுக்குப் பூக்கள் பறந்து செல்லும் வண்ணாத்திப் பூச்சியைப் பிடிப்பதற்கு முயலும், குழந்தையைக் காணுந்தோறும் அவள் துக்கம் கரைகடந்தது. "ஒரு குற்றமுமறியாத என் குழந்தை ஏன் இந்தத் தண்டனையை அனுபவிக்கவேண்டும்?" என்று அலறினாள்.

கோடைக் காலமும் சென்று இலையுதிர் காலமும் வந்தது. குளிர் காலத்தின் மெல்லிய வருகை காற்றில் பரவிப் பிரதிபலித்து நின்றது. முன் பனிக்காலம். குழந்தைகள் வீதியில் குதூகலத்துடன் விளையாடிக் கொண்டிருந்தார்கள். இதை ஜன்னல் வழியாகப் பார்த்துக்கொண்டிருந்த ஜெனித் நீண்ட பெருமூச்சுவிட்டாள்.

நல்ல குளிர்காலம். சத்திரத்திற்கு வந்த பிரயாணிகள் கணப்பிற்கெதிரே உட்கார்ந்துகொண்டு, குளிர் காய்ந்துகொண்டிருந்தனர். ஜெனித் அந்த விடுதியில்தான் பல வருஷங்களாக வேலைசெய்து வந்தாள். அன்று மெலிந்த தேகமுடைய ஒரு பெரியவர் வந்திருந்தார். துயிலிலாழ்ந்திருந்த குழந்தையையும், துக்கம் தேங்கிய அவளது முகத்தையும் கண்டு; அனுதாபம் கொண்டார்.

"அதோ தூங்கிக்கொண்டிருக்கிறதே, அது உன் குழந்தை தானே?" என்றார்.

"ஆம் தந்தையே," என்று பதிலளித்தாள். "நான் கேட்பதற்கு மன்னிக்கவும். அவனுக்கு உடம்பு சுகமில்லையா?" என்று வினவினார்.

"அவன் ஒரு நொண்டி. அவனுடைய சின்னஞ் சிறு கை கால்கள் வலிப்பு நோய்க்குப் பலியாகிவிட்டன" என்று தழுதழுக்கக் கூறினாள்.

உடனே அவர் முகத்தில், இருளிடை தோன்றி மறையும் மின்னல்போல், ஒரு தெய்வீக ஒளி தோன்றி மறைந்தது. "குழந்தாய்! நான் சொல்வதைக் கேள். என் வார்த்தைகளிவை, பெரிபீட் நகரத்திற்கருகிலுள்ள மாதாகோவிலுக்குச் சென்று அங்குள்ள மத குருவிடம் வேண்டி நின்றாயானால் உன் குறை தீரும்" என்றார்.

வெளிச்சத்தைக் கொண்டுவரும் வெள்ளத்தை வரவேற்பதற்கு, அவளுடைய இருதயக் கதவுகள் திறந்துகொண்டதுபோல் அவளுடைய உள்ளம் பட்பட்டென்று அடித்துக்கொண்டது.

"குழந்தாய்! உன் எதிரில் பூரண உருவத்துடன் நிற்கும் நான் ஒரு காலத்தில், இதோ உறங்கிக்கொண்டிருக்கும் இந்தக் குழந்தையைப் போலவே அங்கஹீனனாக இருந்தேன். ஆனால் அந்தப் பரமனருளால் இன்று முழு உருவுடன் விளங்குகிறேன்" என்றார்.

ஒரு கணம் அவள் உடல் முழுவதும் பலவீனம் பரவி நின்றது. கண்கள் இருண்டு தடுமாறினாள். அவர் பாதங்களில் விழுந்து கதறினாள். அவர் அவளைச் சமாதானப்படுத்திவிட்டுப் பெரிபீட் நகரம் செல்லும் வழியைக் கூறினார். பின்பு அவர் அந்தக் கரிய பனி நிறைந்த இருளில் மறைந்தார்.

ஜெனித் கனவு காண்பதுபோல் உணர்வற்ற நிலையில் உட்கார்ந்துகொண்டிருந்தாள். குழந்தையின் அழுகுரல் கனவுலகிலிருந்து அவளை விழிப்படையச் செய்தது. விடுதியின் எஜமானி லூகோன், அவளை நோக்கிக் கடுமையாக "ஏ சோம்பேறிப் பெண்ணே! எழுந்திருந்து உன் வேலையைப் பார். உன் முடம் அழுகிறது. புது மனிதர்களுடன் பேசி நேரத்தை வீணாக்குவதற்கா உனக்கு நான் சம்பளம் கொடுக்கிறேன்? மேசையின்மேலுள்ள தட்டுகளைக் கழுவி வை" என்று அதட்டினாள். "அவர் வீண் பேச்சுப் பேசவில்லை. அவர் கூறியபடி பெரிபீட் நகரத்திற்கு என் குழந்தையுடன் சென்று என் குறையைப் போக்கிக்கொள்வேன்" என்றாள். அவளுடைய குரலில் காரியத்தைச் சாதிக்கும் பிடிவாதம் தொனித்தது. லூகோன் ஏளனமாகச் சிரித்தாள். "மூட மகளே! அதெல்லாம் நம் போன்ற பாபிகளின் விஷயத்தில் நடைபெறாது. இறைவன் உன் தலையில் அத்தகைய விதியை எழுதிவிட்டார். நீ போய் அழும் பிள்ளையைச் சமாதானம் பண்ணு" என்றாள்.

"விதி! விதி! அந்த மானஸீகமான விரோதி என் குழந்தையின்பேரிலா வஞ்சம் தீர்த்துக் கொள்ள வேண்டும்! முடியாது, ஒரு பொழுதும்! இல்லை" என்று கூச்சலிட்டு விட்டு அடியற்ற மரம்போல் சாய்ந்தாள்.

அவள் நினைவுபெற்றபொழுது குழந்தை அழுதுகொண்டே தாயின் கூந்தலை வருடுவதை உணர்ந்தாள். குழந்தையை எடுத்து அணைத்துக்கொண்டாள்: பக்கத்திலிருந்த கிழிந்த கம்பளியால் அதனுடைய ஊனமான உடலைப் போர்த்தினாள். மார்புடன் அணைத்துக்கொண்டு விடுதியினின்றும் வெளிப்பட்டாள். அவளுடைய ஜீவியத்தின் உயிர்நாடியுடன், வாழ்வில் கொண்ட ஒரே நோக்குடன் நம்பிக்கை என்னும் ஒரே வழியைக்கொண்டு அவள் இருளடைந்த பாதையில் நடக்கலானாள்.

கைகள் சுமந்து வந்த பாரத்தினால் கடுத்தன. பனியினால் அவளுடைய கால்கள் மரத்துப்போயின. பனி சிறிது மறைய ஆரம்பித்தது. அலை அலையாகச் செல்லும் மேகத்தினின்றும் வெளிப்பட்ட வெள்ளி, மனிதர்களால் உண்டாக்கப்பட்ட மாசு நிறைந்த புகைப்படலத்திற்குமேல் பிரகாசித்து உலகத்தை வெள்ளிமயமாக்கிக் கொண்டிருந்தது. கால்கள் மேலே செல்ல முடியாமல் வலித்தன. ஒரு பாறையின் மேல் அமர்ந்து களைப்பாறினாள். "உலகினின்றும் பனி விலகியதுபோல் தன் வாழ்வை மூடியிருக்கும் பனியும் மறைந்து விடும்" என்று எண்ணியபொழுது அவள் மேனி சிலிர்த்தது. எழுந்து மறுபடியும் சென்றாள்.

கீழ்த்திசையில் வெள்ளைப் புரையோடியது. எதிரே ஒரு குடிசை காணப்பட்டது. குழந்தை நாவறட்சியினால் கதறிற்று. குடிசையின் கதவை இடித்தாள். ஒரு குடியானவப் பெண் கதவைத் திறந்தாள். அவள் காலை ஆகாரம் தயாரிப்பதற்காக அடுப்பை மூட்டிக்கொண்டிருந்தாள். "அம்மா நான் வெகுதூரம் நடந்து வந்திருக்கிறேன். இந்தக் குழந்தை அழுகிறது. கொஞ்சம் பால் தரமுடியுமா?" என்று கெஞ்சிய குரலில் கேட்டாள். அப்பெண் அவளை வரவேற்று உள்ளே அழைத்துச் சென்றாள். அவள் குழந்தையைக் கீழே கிடத்திவிட்டுக் கைகளை நீட்டி மடக்கி வலியைப் போக்க முயன்றாள். குடியானவப் பெண் தன் ஏழ்மையை வெளிப்படுத்தும் ஒரு கிழிந்த பாயை எடுத்துத் தந்து "நீங்கள் தொலைதூரம் நடந்து வந்திருக்கிறீர்கள். சற்று இளைப்பாறுங்கள்," என்றாள். தன்னையறியாது கண்களை மூடிக்கொண்டு சிறிது நேரம் கண்ணயர்ந்தாள். கோழியின் கூவலைக் கேட்டதும் சட்டென்று விழித்துக் கொண்டாள். "குழந்தை!" என்று மெல்லிய குரலில் கேட்டாள்.

"அதோ உங்களுடைய குழந்தை விளையாட முயற்சிக்கிறான். ஆனால் மன்னிக்கவும் அவனுடைய கால்கள்" என்று முடிப்பதற்குள் ஜெனித் கைகளில் முகத்தை புதைத்துக்கொண்டு விம்மினாள். "ஆம். அவனுடைய கால்கள் விதியின் வஞ்சனைக்கு இரையாகிவிட்டன" என்று கூறி அவனுடைய நடுங்கும் கைகளை வாயில் பதிய வைத்து முத்தமிட்டாள். 'பெரிபீட் நகரத்திற்கு இன்னும் எத்தனை மைல் செல்ல வேண்டுமென்பது உங்களுக்குத் தெரியுமா?" என்று கேட்டாள்.

"சுமார் நாற்பது மைலிருக்கும். என்ன தாங்கள் அங்கு கால்நடையாகவா செல்லப் போகிறீர்கள்?" என்று ஆச்சரியத்துடன் வினவினாள்.

"ஆமாம். நன்றாகப் பொழுது புலர்ந்து விட்டதே. நான் போய் வருகிறேன். நீங்கள் என்னிடம் காட்டிய அன்பிற்கு நான் மிகவும் நன்றியறிதலுள்ளவளாக இருக்கிறேன்" என்றாள். அப்பெண் ஜெனித்தை மிகவும் வற்புறுத்திச் சிறிது ஆகாரம் எடுத்துக்கொள்ளச் சொன்னாள்.

மூன்றாம்நாள் மாலை உள்ளமும் உடலும் சோர்ந்து, தள்ளாடியவாறு சென்றுகொண்டிருந்தாள். வைக்கோல் வண்டியொன்று முன்னால் சென்றுகொண்டிருந்தது. அந்த வண்டிக்காரன் தில்லானாப் பாட்டு ஒன்று பாடிக்கொண்டு மெதுவாக வண்டியை ஓட்டிக்கொண்டிருந்தான். மாடுகள் தளர்ந்த நடையுடன் சென்றுகொண்டிருந்தன. அந்த மாடுகளுக்கும் அவளுக்கும் என்ன வித்தியாசம்? அவை தினமும் சுமையை இழுத்துச் செல்ல வேண்டுமென்னும் கடமையை, வண்டிக்காரன் கைகளிலிருக்கும் மூக்கணாங்கயிறு விதித்துவிட்டது. அதேபோல் அவள் குழந்தையைக் காக்கவேண்டிய தாய் என்னும் கடைமயை அவளுக்கும், குழந்தைக்குமிடையேயிருந்த பாசக் கயிறு முரசறைந்துவிட்டது. அதைமீறி அவளால் என்ன செய்ய முடியும்?"

"ஐயா" என்று தன் பலம்கொண்டமட்டும் கத்தினாள்.

வண்டிக்காரக் கிழவன் வண்டியை நிறுத்திவிட்டு அவளையும் கையிலிருந்த சுமையையும் ஆழ்ந்து நோக்கினான். சுமையிலிருந்து ஒரு ஈனஸ்வரம் எழுந்தபிறகுதான் அது ஒரு குழந்தை என்பதை அறிந்தான்.

"ஐயா நானும் அந்த வண்டியில் ஏறிக் கொள்ளலாமா?" என்று பரிதாபத்துடன் வினவினாள்.

"குழந்தாய்! அந்த இளம் பாலகனை என் கையில் அளித்துவிட்டு நீ மெதுவாக ஏறிக் கொள்" என்று பரிவுடன் கைகளை நீட்டினான்.

அவளுடைய இரு கண்களிலும் நீர் நிறைந்தது. விவரிக்க முடியாத துக்கத்தினால் அவளுடைய மெல்லிய உதடுகள் துடித்தன. "ஐயோ! சமூகத்தால் நிராகரிக்கப்பட்ட இந்தச் சிசு, கை கால்களை இழந்த அனாதை, தாயின் அன்பைத் தவிர வேறொன்றையுமறியாது இவ்வுலகில் ஊசலாடும் உயிர்" என்று கூறும்பொழுது துக்கம் நெஞ்சை அடைத்தது. குழந்தையின் மேல்போர்வையை விலக்கிவிட்டு, துவண்டிருந்த அவனுடைய கால்களைத் தூக்கிக் காண்பித்ததும் அவளது உள்ளத்திலிருந்து நீண்ட விம்மல்கள் வெளிப்பட்டன.

வாழ்வின் கரடுமுரடான பாதைகளின் அனுபவம் பெற்ற அந்தக் கிழவனின் உள்ளம் இந்தக் காட்சியால் சிறிது சலனப்பட்டது.

"குழந்தாய்! கடவுள் புதியதும் பயங்கரமுமான வழிகளைக் காண்பிக்கிறார். இக் குழந்தையின்மூலம் உன்னுடைய பொறுமையையும் நம்பிக்கையையும் சோதிக்கிறார். நீ இதற்காக மனம் வருந்தாதே. நீ இப்பொழுது எங்கே செல்கிறாய்?" என்று கேட்டான்.

"பெரியவரே! நான் இந்தச் சிசுவின் வாழ்வை மூடியுள்ள இருளின் பிரிவிற்காக பெரிபீட் நகரம் செல்கிறேன்." என்று கூறினாள். அவளுடைய கண்கள் வைரம் போல் பிரகாசிப்பதைக் கண்டான்.

"மகளே! பொய்யும் வஞ்சனையும் நிறைந்த மனிதர்களின் சொற்களை நம்பி நீண்ட அந்தகாரத்தில் பிரவேசிக்காதே. அருகிலிருக்கும் கிராமத்தில் நான் என் மனைவி குழந்தைகளுடன் வசிக்கிறேன். இன்றுமுதல் நீயும் என் பெண். என் பேரனை என் கையில் தா. நான் அவனைக் கண்ணிமைக்குள் வைத்து மூடிக் காப்பாற்றுவேன். கடந்ததை எண்ணிக் கலங்காதே" என்று கண்களில் நீர் மல்கக் கூறினான்.

"இல்லை இல்லை. நான் இருளில் பிரவேசிக்கவில்லை. என் அந்தகாரத்தின் விடிவு அருகில் வந்துவிட்டதென்று என் உள்ளம் அலறுகிறது. என் குழந்தையின் தளர் நடையைக் காண்பதற்கு என் கண்கள் துடிக்கின்றன" என்று ஆவேசம் வந்தவள்போல் கூக்குரலிட்டாள்.

இதற்குள் கிழவன் செல்லவேண்டிய கிராமம் வந்துவிடவே அவளிடம் விடைபெற்றுக்கொண்டான். இரவுமட்டுமாவது தங்கிவிட்டுச் செல்லும்படி வற்புறுத்தினான். அவள் மறுத்துவிட்டு மீண்டும் தன் பிரயாணத்தைத் தொடங்கினாள்.

பனி பெய்துகொண்டே இருந்தது. அவள் உடல் பனியினால் திமிர்த்துப்போயிருந்தது. அவளுடைய கனத்த இமைகளை நித்ராதேவி ஆக்கிரமிக்க முயற்சித்துக்கொண்டிருந்தாள். மேடு ஒன்றின்மேல் தடுமாறி விழுந்தாள். குழந்தை வீல் வீல் என்று அலறிற்று. தூக்கத்தின் வசமாகிவிட்டதை எண்ணி, தன்னைக் கடிந்துகொண்டாள். பனியைக் கிழித்துக்கொண்டு நடந்தாள்.

எதிரே ஒரு வீடு தென்பட்டது. அதன் கதவைத் தட்டினாள். ஒரு பெண் கதவைத் திறந்தாள். அவள் ஆச்சரியத்துடன் ஜெனித்தையும், கையிலிருந்த குழந்தையையும் நோக்கினாள். உள்ளே அழைத்துச்சென்று உட்காரச் சொன்னாள்.

"இதுதானே பெரிபீட் நகரம்" என்று ஆவலுடன் கேட்டாள்.

"இல்லை இங்கிருந்து ஆறுமைல் தூரத்திலிருக்கிறது, வயல் வழியே குறுக்கே சென்றால் நாலு மைலிருக்கிறது. நீங்கள் இந்த இரவிலா அங்கே போகவேண்டும்?" என்று கேட்டாள்.

"இன்னும் ஆறு மைல் இருக்கிறதா! இப்பொழுது மணியென்ன?" என்று பரபரப்புடன் கேட்டாள்.

"மணி மூன்று" என்று பதிலளித்தாள்.

"ஐயோ ஆறு மணிக்கு நான் அங்கிருக்க வேண்டுமே" என்று கத்திக்கொண்டே வாசற் கதவைத் திறந்துகொண்டு வெளியே ஓடினாள். அப்பெண் அவளை நிறுத்த முயன்றாள். ஆனால் காற்றிலும் கடிதான மனோவேகத்துடன் செல்லும் அவளை நிறுத்த முடியவில்லை.

இருளிலும் பனியிலும் அவள் இடையறாது ஓடிக்கொண்டிருந்தாள். அடிக்கடி வழிதெரியாமல் தடுமாறி விழுந்தாள். குழந்தையை இறுகத் தழுவிக்கொண்டாள். பனியால் மரத்துப்போன தன் மார்பகத்திலிருந்து அவனுக்குப் பால் ஊட்டினாள். பனியும் இருளும் கவிழ்ந்துகொண்டு வழியை மறைத்தன. "தெய்வமே வழி! வழி!" என்று அலறினாள். பறவைகளின் மெல்லிய ஒலி தொலைவில் கேட்டது. படபடவென்று இறக்கைகளை அடித்துக் கொண்டு நாரைக் கூட்டமொன்று மேலே

பறந்து சென்றது. கீழ்த்திசை சற்று வெளுக்க ஆரம்பித்தது. மாதா கோவிலின் மேல் காணப்பட்ட சிலுவை அவளைக் கை விரித்து வரவேற்பதுபோல் காணப்பட்டது.

மாதாகோவிலின் வாசலை அடைந்தாள். பூட்டியிருந்தது. குழந்தையைக் கீழே கிடத்தினாள். இரத்தஓட்டம் பனியினால் உறைந்து போயிருந்ததுபோல் தோன்றிற்று அவளுக்கு. வாழ்வின் திட்டி வாசலை அடைந்து விட்டாள். ஆனால் அதன் கதவு இன்னும் திறக்கப்படவில்லை.

"ஆண்டவனே! உன் அடிமை குறையைப் போக்கிக்கொள்ள வந்திருக்கிறேன். என்னை நிராகரிக்காதே" என்று கதறிக்கொண்டே தடாலென்று கீழே சாய்ந்தாள். ஒரு மெல்லிய ஒளி குழந்தையின்மேல் பரவி மறைந்தது. தாயினருகில் சென்று குழந்தை அழுதது. அவள் விழித்துக்கொண்டு அவனை நோக்கினாள். பூரண அங்க வளர்ச்சியுடன் நின்ற அந்தக் குழந்தை "தப்தப்"பென்று இரண்டடி வைத்துவிட்டு, நடந்து பழக்கமில்லாமல் பொத்தென்று விழுந்தது. அவளுடைய உள்ளத் துடிப்பு நின்றுவிட்டது போன்ற உணர்ச்சி அவள் உடல் முழுவதும் பரவியது. அவள் கண்கள் அவனுடைய தளர் நடையைப் பார்த்ததினால் ஏற்பட்ட ஆனந்தம் தாங்காமல் மூடிக்கொண்டன. குழந்தையை மார்புடன் சேர்த்து இறுகத் தழுவிக்கொண்டாள். அவளுடைய வாய் "நம்பிக்கை, விமோசனம்" என்று முணுமுணுத்தது. துக்கத்தினால் கனத்திருந்த அவளுடைய இமைகள் ஆனந்தத்தினால் மூடிக்கொண்டன. அவை மீண்டும் திறக்கப்படவில்லை. அவள் வாழ்வை மூடியிருந்த இருள் பிரிந்து விமோசனம் தோன்றிவிட்டது; ஆனால் அதை அவள் நீண்டநேரம் அனுபவிக்கவில்லை. தாய்மையின் ஒளி வீசிய அவள் வதனத்தில் பெருமித இள நகை அரும்பியிருந்தது.

மறுநாட் காலையில் மத குரு தம்மைச் சூழ்ந்து நின்றவர்களிடம் "நீச வழியில் பெற்றெடுத்த இக் குழந்தையை நிராதரவாக விட்டு மறைந்த இந்தத் தாயின் பாப ஆத்மா சாந்தியடைய நாம் பரமனை வேண்டுவோம்" என்றார். தீர்க்கதரிசியான அவர் கட்டளையை அனைவரும் மேற்கொண்டனர். மாதாகோயில் மணி "விமோசனம், விமோசனம்" என்று இசைத்து, அவளுடைய நிரந்தர வாழ்க்கையை அறிவித்தது. ஆனால் அது "பாப ஆத்மாவின் சாந்தி" என்று இசைத்ததாகத் திரிகால ஞானியாகிய மதகுரு எண்ணி ஆத்ம திருப்தி அடைந்தார்.

(ருஷியக்கதை ஒன்றைத் தழுவி எழுதியது)



காங்கிரஸ் நகரின் முதல் வாயில் வழியே பண்டித நேருவும், புதிய ராஷ்டிரபதி ஆசார்ய கிருபலானியும் வரும் காட்சி.

# அனார்கலி

## புத்துகிருஷ்ணா

காட்சி 1.

[காலைப்பொழுது. ஸலீம் ராஜகுமாரனுடைய அறை. சுவர்ப்புறமாக முகத்தை வைத்துக்கொண்டு தூங்கிக்கொண்டிருந்த ஸலீம் நெட்டுயிர்ப்புடன் புரண்டு படுத்துக்கொள்ளுகிறான். நீர் நிறைந்த கண்களுடன் மேஜையைப் பார்க்கிறான். சட்டென்று திடுக்கிட்டு எழுந்து உட்காருகிறான். மேஜைப் பக்கம் போய்க் குரல் நடுங்க]

ஸலீம்: சேவகா!

சேவகன்: (வருகிறான்) மகாராஜ்!

ஸ: இந்த அறையில் யார் வந்திருந்தனர்?

சேவ: தெரியாது மகாராஜ்.

ஸ: (நெருங்கிப்போய்) ஏன் தெரியாது?

சேவ: மகாராஜ்!

ஸ: மகாராஜாவுக்கென்ன? (சேவகன் கையைப் பிசைந்துகொண்டு பின்னால் நகர்கிறான். பயத்தால் கால் நடுங்குகிறது.) அடே! ஏன் வாய்திறக்கவில்லை?

சேவ: நான் இதோதான் வந்தேன்.

ஸ: சரி. போய் குல்நாரை அனுப்பு. (குல்நார் பயத்துடன் வருகிறாள்.)

ஸ: குலன், இங்கேயிருந்த மாதுளைமொட்டுக்களை எடுத்தவர் யார்?

குல்: தெரியாது மகாராஜ்!

ஸ: (கண் சிவக்க) உண்மையைச் சொல்லிவிடு.

குல்: (நடுங்கிக்கொண்டே) மகாராஜ்! (குல்நார் பயத்துடன் சேவகனையும் ஸலீமையும் மாறி மாறிப் பார்க்கிறாள்.)

ஸ; (சேவகனிடம்) வாசற்புறம் போய்விடு. குல்நார், நீ உட்புறம்வா. பயப்படாமல் சொல்லு.

குல்: மகாராஜ், நிரம்ப பயமாயிருக்கிறது.

ஸ: சற்றும் பயப்படாதே.

குல்: (அடிக்கடி பயத்துடன் வாசற்புறத்தைப் பார்த்துக்கொண்டே) மகாராஜ்......பாதுஷா.........சேவகருக்குக் கட்டளையிட்டார். தோட்டத்திலுள்ள மாதுளைமொட்டுக்களை எல்லாம் நெருப்பில் போட்டாயிற்று. நகரத்து மாதுளை மரங்களை எல்லாம் ஒன்றுவிடாமல் வெட்டிவிடும்படி உத்தரவாயிருப்பதாக வதந்தி உலாவுகிறது.

ஸ: (கன்னத்தில் கையைவைத்துக்கொண்டு) அப்படியானால் கோபம் மாதுளைமொட்டிடம் மட்டுமல்ல என்று தோன்றுகிறது. இந்தச் சிறுதுள்ளி பெருவெள்ளத்துக்கு அறிகுறிபோலும்!)

குல்: மகாராஜ் நகரத்தில் வதந்தி.........

ஸ: என்ன?

குல்: மகாராஜ், அனார்கலி!

ஸ: சரி, நீ போ.

(குல்நார் நடுங்கிக்கொண்டே வெளியே போகிறாள். ஸலீம் மனக்குழப்பத்துடன் ஒன்றும் தோன்றாமல் இங்கும் அங்கும் உலாவுகிறான். சேவகன் வருகிறான்.)

சேவ: மகாராஜ், மந்திரி ஸாஹப்!

ஸ: அழைத்துவா.

(ஸலீம் ஏதோ முடிவுக்கு வந்தவன்போல் சோபாவில் உட்கார்ந்து கொள்கிறான். மந்திரி பிரவேசித்து, சேவகனை வெளியே போகச் சொல்லிவிட்டு ஸலீமுக்கு ஸலாம் செய்கிறார்.)

அபுல்பஸல்: இளவரசே, சௌக்கியம் தானே?

ஸ: மந்திரி ஸாஹப், என் மேஜையிலிருந்த மாதுளை மொட்டுக்களைக் கூடச் சரிவரக்கவனிக்கமுடியாத என்னிடமா குசலம் கேட்கிறீர்கள்?

அபுல்பஸல்: உங்களைப்போன்ற புத்திமான்கள் விஷயத்தை எளிதில் அறிந்துகொள்ள முடியுமல்லவா?

ஸ: இப்போது புத்தியைவிட அதிகாரம் தான் அதிக அவசியம்.

அ. ப: இளவரசே, ஒரு வார்த்தை.

ஸ: சொல்லுங்கள்.

அ. ப: சக்கரவர்த்தி பெருமானுக்கு மாதுளை மொட்டுக்களைக்கண்டால் கோபம் வருகிறது.

ஸ: ஒன்றும் அறியாத ஏழை மாதுளை மொட்டிடமா சக்ரவர்த்திக்குக் கோபம்? இது சரியல்ல மந்திரி ஸாஹப்! இந்த மொட்டுக்களை ஒழிக்கக் கங்கணம் கட்டிக் கொள்வது பாதுஷாவுக்குத் தகுந்த செயல் அல்ல. இந்தக் கோபத்தை வேரோடு கல்லி எறிவதே அவர் செய்யவேண்டிய காரியமாகும்.

அ. ப: இளவரசே, நான் சொல்கிறேன்.

ஸ: சரி.

அ. ப: ரோஜா இந்தத்தேசத்துப் பூவல்ல. முகல் அரசர் அதைத் தங்கள் தோட்டத்தில் வைப்பதற்காகத் தங்கள் தேசத்திலிருந்து கொண்டுவந்தனர்.

ஸ: ஆம்.

அ. ப: அக்பர் சக்கரவர்த்திதான் பாரஸீக தேசத்து ரோஜாச்செடிகளை வரவழைத்தார். பாரஸீக ரோஜாவைவிட அழகான பூ கிடையவே கிடையாது. சக்கரவர்த்திக்கு அந்தப் பூவின்மீது அளவற்ற பிரேமை. உங்களுக்கும் அப்படியே. (ஸலீம் தலை அசைக்கிறான்.) தாங்கள் ரோஜாத்தோட்டம் வைத்தபோது அரசர் அளவற்ற மகிழ்ச்சிகொண்டார்.

ஸ: ஆம்.

அ. ப. அதனால் இப்போதிருந்து பாரஸீக ரோஜாப்பூதான் முகலாய ராஜசின்னம்.

ஸ: ஓஹோ!

அ. ப: இத்தன்மையுள்ள ரோஜாப் பூக்களைப் புறக்கணித்துவிட்டு அந்த இடத்தை மாதுளை மொட்டுக்களைக்கொண்டு மூடிவிட்டீர்களே.

ஸ: அதற்காக! (கவலையுடன் அபுல் பஸலைப் பார்க்கிறான்.)

அ. ப: பாரஸீக ரோஜா எவ்வளவு மதிப்புள்ளதோ அவ்வளவு துச்சமானது மாதுளைமொட்டு. எளிதில் கிடைக்கும். (ஸலீம் ஏதோ எண்ணிக்கொண்டு மறுபுறம் திரும்பிப் பார்க்கிறான். அபுல்பஸல் ஏதோ யோசனைசெய்துவிட்டுப் பேசுகிறார்) இதுமட்டுமல்ல. ஏனைய சாதாரண பூக்களுக்குள்ள மதிப்புக்கூட மாதுளை மொட்டுக்கில்லை. பாரஸீகரோஜா அரசர்குலச் சின்னமானால் மாதுளைமொட்டு அடிமைச் சின்னம் ஆகும்!

ஸ: [ஸலீம் சட்டென்று தலையைத்திருப்பிக்கொண்டு] காவிய நடையில் மறைபொருளாய்ப்பேசுவதைவிட்டுப் பட்டவர்த்தனமாய்ப் பேசலாம், மந்திரி ஸாஹப்! நான் அனார்கலியைக் காதலிப்பது உண்மையே. அவள் அடிமை. நான் இளவரசன். ஆயினும் என் மனதில் உள்ள அன்பை வெளிக்காட்டவே *மாதுளை மொட்டை ரோஜாப்பூவுடன் வைத்துக் கௌரவிக்கிறேன். நான் அவளை விடமுடியாது. அவள் என் உயிர். ஸலீம் எந்தப் பதவியிலிருந்தாலும் அனார்கலிக்கு அவன்மீது பாதி—இல்லை முழு—உரிமையும் உண்டு. ஸலீம் அனார்கலியுடையவன் என்பதில் எனக்குச் சந்தேகமே இல்லை. இதனால் என்ன ஏற்பட்டாலும் சரியே; நான் பொறுத்துக்கொள்கிறேன்.

அ. ப: இளவரசே விவாஹத்தைப்பற்றிப் பேசுவது............

ஸ: மந்திரி ஸாஹப், நீங்கள் கவிதானே? சில நிமிஷம் இதயமற்ற அரசியலை மறந்துவிடுங்கள். புனிதமான கவியுள்ளத்துடன் யோசித்துச் சொல்லுங்கள். தூய அன்பை இழிவாகவும் ஏளனமாகவும் பேசலாமா? தூய அன்பை அறிந்தும் அதை ஏற்க முன்வராதவன் இருக்கிறதைக் காட்டிலும் இறந்து விடலாம். எந்த அன்பின் குறைவால் ஆகாசமும் பூமியும் தன் நிலைமையை இழந்து விடுமோ சிருஷ்டி சிருஷ்டியாயிராமல் போய்விடுமோ, எந்த அன்பில்லாவிட்டால் பஞ்ச பூதங்களால் ஆன உடல் தன் உருவை இழந்துவிடுமோ அந்தத் தன்மை வாய்ந்த பந்தத்தை அறுத்துவிட்டால் மனிதன் மனிதனாய் இருப்பதில்லை. சிருஷ்டியில் கேவலத்திலும் கேவலமான மிருகமாகிவிடுகிறான். அவ்வளவு வன்மை கொண்ட அன்புப் பிணைப்பை அறுத்தெறிய ஸலீமினால் இயலாது. அனார்கலிக்கும் ஸலீமுக்கும் இடையே உள்ள அன்பை யாராலும் தடுக்கமுடியாது. தடைகளை மீறியோ அல்லது உடைத்துக் கொண்டோ காதல் பெருக்கு எடுத்து ஓடும். அது எந்தக் கடலில் விழுந்தாலும் பாதகமில்லை. ஆனால் பாலைவனத்தில் சோர்ந்து வற்றிவிட முடியாது. காதலை எதிர்ப்பவர்கள் எதிர்காலத்தைப் பற்றியும் நன்றாக நினைத்துப் பார்க்கவேண்டும்.

அ. ப: (கொஞ்சம் தயங்கிவிட்டு) பார்ஸி, ஸம்ஸ்கிருதம் இரண்டின் இலக்கியங்களி

* அனார்கலி=மாதுளை மொட்டு.

லுள்ள தத்துவங்களையும் ஒரே வாக்கியத்தில் அடக்கிவிட்டீர்கள் நீங்கள்.

ஸ: (சட்டென்று எழுந்து மந்திரி அருகே போகிறான் கவலையுடன்) மந்திரி ஸாஹப், நீங்கள் கவி, உங்களுக்கு இதயமுண்டு. இங்கே வாருங்கள். (மந்திரியின் கையைப் பிடித்து அறையின் மத்தியில் அழைத்துக்கொண்டுபோய் வாசற்கதவை விரலால் சுட்டிக்காட்டிக்கொண்டு, ஒவ்வொரு வார்த்தையையும் அனுபவித்துக்கொண்டு) இந்த வாழ்க்கையில் முதன் முதலில் அனார்கலி இவ்வழியாய்த்தான் வந்தாள். அவளுடைய மடமையையும் அழகையும் ஸலீம் பிரமையுடன் கண்டான். அனார்கலியின் அழகும், மெல்லிய உடலும், இளமையின் அங்கப் பூரிப்பும், ஒடுங்கிய இடையும், முத்தின் ஒளிபோன்ற முகத்தின் ஜோதியும்—அப்பா! அந்த அமுதவேளையை.........மந்திரி ஸாஹப், நான் அதைச் சொல்லத் திறமையற்றவன். பேசப்பேச முடிவுறாது. (கண்களை மூடிக்கொண்டு சோபாவில் உட்காருகிறான்.)

அ. ப: (தயங்கிக்கொண்டு மெதுவாய்) இளவரசே, காதலில் மலர்ந்த உங்கள் மனதின் உணர்ச்சிகளை அறிய, கவி அபுல்பஸல் பிரமித்துப்போய்விட்டான்.

ஸ: (தலை அசைக்கிறான். கண்களைத் திறந்துகொண்டு) சரி, இப்பொழுது அரசியல் நிபுணர் மந்திரி சாஹப் பேசுவார்போலிருக்கிறது.

அ. ப: [தலை குனிந்து] மகாராஜ்—

ஸ: அன்பில்லாத அரசாட்சியை நான் விரும்பவில்லை.

அ. ப: ஆனால் ஒரு அடிமையை இளவரசர் மணந்துகொள்ளமுடியுமா? பிரஜைகள் இதை ஏற்றுக்கொள்வார்களா? மாட்டார்கள்.

ஸ: என்ன? பிரஜைகளுக்கு என்மேல் என்ன அதிகாரம்? என் சுக துக்கங்களையும் மனச்சாட்சியையும் சீர் தூக்கிப் பார்க்க இவர்களுக்கு என்ன உரிமை? நான் பிரஜைகளுக்கு அடிமையா? ராஜகுமாரன் என்பதால் இதயம் கல்லால் செய்யப்பட்டதாகிவிடுமோ? அவன் இதயத்தில் ஓடும் ரத்தம் சூடுள்ளதல்லவா? பிரஜைகள் இவ்விஷயத்தை அறிந்துகொள்ளவில்லையா?

அ. ப: நீங்கள் சற்று யோசனை செய்து பார்க்கவேண்டும். ஹிந்து முஸ்லீம்களிடையே இருந்த விரோதத்தை அகற்றி, தேசத்தில் அமைதியை நிலைநாட்டுவதற்காக,


# இந்தியன் பாங்க்
## லிமிடெட்

இந்தியன் பாங்க் பில்டிங்ஸ்
நார்த் பீச் ரோட், **மதராஸ்.**

●

மதராஸ் ஆபீஸ்கள்:
எஸ்பிளனேட், மவுண்ட் ரோடு, திருவல்லிக்கேணி, தியாகராயநகர், மயிலாப்பூர், புரசைவாக்கம், எழும்பூர்.

●

தென் இந்தியாவில் எல்லா முக்கியமான இடங்களிலும் பம்பாயிலும் கிளை ஆபீஸ்கள் உள்ளன

●

வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம் - ரூ. 69,96,600
செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 50,79,613
ரிஸர்வ் நிதி - - ரூ. 56,87,200
டிபாஸிட் ரூ. 17 கோடிக்குமேல்

●

எல்லாவித பாங்கு அலுவல்களும் கவனிக்கப்படும்.

**N. கோபால அய்யர்.**
செக்ரெடரி.

சக்கிரவர்த்தி ஆமேர் தேசத்து அரசகுமாரியை மணந்துகொள்ளத் துணிந்தார். இதனால் சில இந்துக்களுக்கும் முஸல்மான்களுக்கும் கசப்பு இன்னும் இருக்கத்தான் இருக்கிறது. இந்த வேளையில் நீங்கள் ஒரு அடிமையை மணந்துகொண்டால்?

ஸ: இதையெல்லாம் யோசித்த பின்தான் நான் முடிவுக்கு வந்திருக்கிறேன் மந்திரி சாஹப். முஸல்மான்களுடைய எதிர்ப்பைப் பொருட்படுத்தாமல் ஹிந்துப்பெண்ணை மணந்து கொண்டதால் அக்பர் எதிர்காலத்து ஒரு வழிகாட்டியாகியிருக்கிறார்; புதிதாகச் சகோதர உணர்ச்சியை நிலைநாட்டியிருக்கிறார். இதேபோல் ஹிந்துக்களின் எதிர்ப்பைப் பொருட்படுத்தாமல் அன்னிய மதத்தைச் சேர்ந்த கணவனைத் தேடிக் கொண்டதால் என் தாய் காதலில் ஜாதி மதங்களுக்கு இடமே இல்லை என்று நிரூபித்துவிட்டாள். ஹிந்து முஸ்லீம் இருவருடைய கலப்பின் பலனான, அக்பருக்கும் ஆமேர் ராஜகுமாரிக்கும் இடையேயுள்ள அன்பின் பலனான ஸலீம் எந்தக் காதல் உலகைச் சிருஷ்டிக்கப் போகிறானோ அதில் அடிமையானால் என்ன, அரசனானால் என்ன, இருவருக்கும் இடையே வேற்றுமையே கிடையாது என்ற உண்மையை நிரூபிக்கப்போகிறான். உலக சகோதரத்துவம், அன்பு, ஒற்மை இவற்றைத்தான் அங்கே காணலாம். நான் யாவரும் அறிய அனார்கலியை மணம் செய்துகொள்ள விரும்புகிறேன். இதில் தடை ஏற்படவே ஏற்படாது. என்னவானாலும் சரி என்று நீங்கள் சொல்லிவிடுங்கள். (நிறுத்திவிட்டு மறுபடியும் மெதுவாய்) நீங்கள் அவரிடம் இதையே சொல்லுங்கள்; நான் உங்களுடைய கவியுள்ளத்தை மெச்சுவேன்.

அ. ப: மகராஜ், நீங்கள் அபுல்பஸலை இரண்டாகப் பிரித்துவிட்டீர்கள், நீதி, ஒழுங்கு, அன்பு. ஆனந்தம் இவைகளைப் பிரதானமாய்க் கருதும் கவி, தேசத்தை ஆள்வதில் அரசனுக்கு யோசனை கூறும் அரசியல் நிபுணனான மந்திரி இருவரிடையேயும் சண்டை மூட்டிவிட்டீர்கள். இந்தச் சண்டையைத் தீர்த்து இதற்குச் சரியான மறுமொழி கூற என்னால் முடியாது. சக்கரவர்த்தியிடம் சொல்கிறேன்.

ஸ: ஆனால், என் சங்கற்பத்தை நான் அணுக்கூட மாற்றவில்லை. இப்பொழுது ................(மேஜையருகே போய் மாதுளை மொட்டுக்களை நிமிர்த்து வைக்கிறான். நீர் நிரம்பிய கண்களுடன் அந்த இதழ்களையே பார்த்துக்கொண்டு நிற்கிறான். அபுல்பஸல் இதைப் பார்த்துக்கொண்டே சென்றுவிடுகிறார்.)

காட்சி 2.

(நடுப்பகல். அக்பருடைய ஆலோசனை மண்டபம்; அக்பர் உலாவிக்கொண்டிருக்கிறார். அபுல்பஸல் நிற்கிறார்.)

அக்பர்: அபுல்!

அ. ப: மகாராஜ்!

அக்: மனித இயற்கையை விழுங்கும் இந்த ராஜதர்மம் எதற்காக?

அ. ப: இந்தக் கேள்விக்குப் பதில் கிடைப்பது எளிதல்ல.

அக்: ஆமேர் ராஜகுமாரியை மணம் செய்துகொண்ட நாட்களில்கூட எனக்கு இவ்வளவு மனக்குழப்பம் ஏற்பட்டது கிடையாது? ஒன்றும் மூளைக்கு எட்டவில்லை, அப்பா! இந்த ராஜதர்மம் மிகக் கொடியது. கூலி வேலைக்காரன் பாடு இதைவிட எவ்வளவோ மேலானது. அவனால் மனித இயற்கையைத் தழைக்கச் செய்து உயிர்வாழ முடிகிறது.

அ. ப: அனார்கலிக்கும் இளவரசருக்கும் அனுமதி கொடுத்தால்?

அக்: எப்படிக் கொடுக்கமுடியும்? நான் ராஜபுத்திரியை மணம் செய்துகொண்டதற்காக முகலாயர் இன்னும் என்னை இகழ்கின்றார்கள்; என்னைப் பகைக்கிறார்கள். ஆனால் இதை ஏதோ அரசியல் தந்திரம் என்று கருதி வாயை மூடிக்கொண்டிருக்கிறார்கள். குலத்தின் கௌரவத்தைப் பெரிதாய்க் கருதும் ராஜபுத்திரர்களோ தன் மகளை முகலாயனுக்குக் கொடுத்த விஹாரிமல்லிடம் கோபம் கொண்டிருக்கின்றார்கள். நான் செய்த சீர்திருத்தங்களே இவ்வளவு சச்சரவுகளை விளைவித்திருக்கும்போது இளவரசனுக்கும் அடிமைப் பெண்ணுக்கும் மணம் நடந்தால் தேசத்தில் என்ன நடக்கும் என்று நீங்கள் யோசித்துப் பாருங்கள். அவள் காதலின் உருவாயிருக்கலாம். ஆனால் அடிமைப் பெண்ணை மணந்துகொள்ளும் அரசகுமாரனை யாரும் மதிக்கமாட்டார்கள். இது மட்டுமா? அக்பரின் சீர்திருத்தங்களின் வருந்தத்தக்க பயன்தான் இது என்று யாவரும் இகழ்வார்கள். ஸலீம் அனார்கலியை மணப்பதை என் இதயம் ஆதரிக்கிறது. ஆனால் மூளை அதைச் சரியென்று ஒப்புக்கொள்ள மறுக்கிறது.

அ. ப: மனித சமூகத்தின் பிரகாசத்திற்குத் தேவையான பொருள்கள் இவை

இரண்டும்தான். ஆம், இதயமும் மூளையுமேதான். இவை இரண்டுக்கும்இடையே என்று கூட்டுறவு ஏற்படுகிறதோ அன்றுதான் மனிதவர்க்கம் உயர் நிலை அடையும். இவை இரண்டிற்கும் இடையே வேற்றுமையிருக்குமளவு மனிதன், வேறு விலங்குகளைப் பார்த்துப் பொறாமைப் படும் நிலைமையில் தான் இருக்கமுடியும்.

அக்: இந்தப் பிரச்னைக்கு நீங்கள் தெளிவாய் விடை கூறுகிறீர்கள். காதலின் உயர்வை உணர்ந்த அக்பருடைய உள்ளம் அனார்கலியுடையவும் ஸலீமுடையவும் தூய அன்பை வணக்கமுடன் வரவேற்கிறது. ஆனால் அரசியலின் வல்லமையை அனுபவத்தால் அறிந்துள்ள அக்பரின் மூளை இச் சம்பந்தத்தை மறுக்கிறது.

அ. ப: ஆம், அரசே! உண்மையான பகுத்தறிவுக்கு இடம் மூளையிலா அல்லது இதயத்திலா என்று இன்றளவும் யாராலும் நிர்ணயிக்க முடியவில்லை. இதயத்தைப் பாழடையவிட்டு மூளையை ஓங்கச்செய்த சங்கராச்சாரியார் வழிகாட்டியா, அல்லது தம் உள்ளத்தை மானிட அறிவும் பிரேமையும் நிரம்பிய சுரங்கமாகச் செய்துகொண்ட புத்தர் நமது வழிகாட்டியா? இந்தக் குழப்பத்தில் சிக்கிக்கொள்வது நமக்கு இசைந்ததல்ல. யார் இதில் இறங்குகிறாரோ அவர் தமக்குத் தாமே அழிவு தேடிக்கொண்டவராகிவிடுகிறார். இந்தப் பிரச்னை மனிதத் தன்மையைக் கொடியதாகவும் தீயதாகவும் மாற்றிவிடுகிறது.

அக்; நான் ஒரு முடிவுக்கும் வரவில்லை, அபுல்!

சேவ: (பிரவேசித்து) அனார்கலி, மகாராஜ்............

அக்: அவளைத் தனியாய் அழைத்து வா!

[அனார்கலி வருகிறாள். வணக்கத்துடன் தலை குனிந்து ஸலாம் செய்துவிட்டு நிற்கிறாள். அக்பர் ஒன்றும் பேசமுடியாதவராய் அறையில் உலாவுகிறார்]

அ. ப: அனார்கலி! நீ அழைக்கப்பட்டதன் காரணம் என்னவென்று உனக்குத் தெரியுமா?

அனார்; தெரியாது மந்திரி ஸாஹப்!

அக்: அனார்கலி! [அவளை நெருங்கி உற்றுப் பார்க்கிறார். பிறகு திரும்பிப் போய் விடுகிறார். பின் பெருமூச்சுடன் அவள் அருகே போய்க்கொண்டே சொல்கிறார்] அனார்கலி, அரசாட்சி மிகக் கடினமான வேலை. சில சமயங்களில் மனித சுபாவத்தை எதிர்த்துங்கூட—

அனார்: மகாராஜ்!

அக்: [அங்குமிங்கும் நடந்துகொண்டே] அனார்கலி, அக்பருடையசாம்ராஜ்யம்எங்கே இருக்கிறதென்று தெரியுமா? அரசருக்கும் பிரஜைகளுக்கும் எதிரே சாம்ராஜ்யம் வைரம்போல் நிற்கிறது. அதில் கண்ணைப் பறிக்கும் மின்னொளியிருக்கிறது. ஆனால் அக்பர் கல்நெஞ்சு படைத்த சக்கரவர்த்தி மட்டுமல்ல, அவன் மனிதனும்தான். அக்பர் உன் காதலை நன்கு அறிகிறான். ஆனால் வேறு வழியில்லை. நான் என் தீர்ப்பைத் தெரிவித்தேயாகவேண்டும். நீ ஸலீமைக் காதலிப்பதும் ஸலீம் உன்னைக்காதலிப்பதும் நிஜமாயிருந்த போதிலும் அதன் வளர்ச்சியை நான் தடுக்கத்தான் வேண்டியிருக்கிறது. நீ உன் காதலனைக் காண்பது இறுதியில் உன் உயிருக்கே ஆபத்தாய் முடியும் என்பதைச் சொல்லிவிடுகிறேன். (ஸோபாவில் உட்காருகிறார்,)

அ. ப: அனார்கலி, உலகில் நீதி என்பதே கிடையாது. சமூகத்தின் விளைவாய் ஏற்பட்ட உயர்வு தாழ்வுகளை மதிக்காதவனை உலகம் என்றுமே மதிப்பதில்லை, மன்னிப்பதில்லை. அவன் மிகமிக உயர்ந்தவனாயினும் சரி, மிகத் தாழ்ந்தவனானாலும் சரி.

அனார்: மந்திரி ஸாஹப், எனக்கு ஒன்றும் தெரியவில்லை!

அக்: (அதிகார தோரணையில்) நீ ஸலீமை விரும்பலாகாது.

அனார்: மகாராஜ், உங்கள் கட்டளைக்கெதிராய் நான் மூச்சுக்கூட விடமுடியாதே! நேசிக்காதிருக்கப் பலம் மட்டும் இருந்தால் நான் நேசிக்கவே மாட்டேன். நான் வேண்டுமென்றே உங்கள் மகனை நேசிக்கவில்லை. நான் பயந்துகொண்டேதான் இருக்கிறேன். இளவரசன் எங்கே? அடிமையான நான் எங்கே? மகாராஜ், என்னைக் காப்பாற்றுங்கள். மனதைக் கட்டுப்படுத்த எவ்வளவோ முயன்றும் முடியவில்லை. பிறனுக்குக் கீழ்ப்படிந்தே இருந்து வந்திருப்பதால் மனதைக் கட்டுப்படுத்திக் கொள்ளப் பலமில்லாமல் போய் விட்டதுபோலிருக்கிறது.

அ. ப: ஐயோ! இனியாவது முயல்வாயா?

அனார்: மந்திரி சாஹப், நான் அதிகம் படித்தவள் அல்ல. நான் விரிவாய்ச்சொல்ல விரும்புகிறேன்; என்றாலும் என்னால் சொல்லமுடியவில்லை. என்னை மன்னியுங்


2000 வருஷங்களுக்குமுன்
முன்னோர்கள் சந்தனத்தை குறைவற்ற தன்மைக்கு ஒப்பிட்டார்கள். இன்று நாம், ஒரு நல்ல பொருளை அந்த வர்க்கத்தின் "ரோல்ஸ ராய்ஸ்" என்று சொல்லுகிறோம். அதேபோல முன்னோர்கள் ஒவ்வொரு உயர்ந்த பொருளையும் சந்தனத்திற்கு சமமாகச் சொல்லுவார்கள். ஸ்நானத்திற்கு அனுகுணமான வாசனைத் திரவியங்களின் சேர்க்கைக்கு சந்தனத்தைலம் இன்றியமையாததாக இருப்பதின் காரணம் அதன் சுகந்த மணமும் குளிர்ச்சியளிக்கும் குணமுமேயாம். அசோகனாண்ட காலத்தின் உண்மை என்றும் உண்மையே.
மைசூர்
சந்தண சோப்
BANGALORE
சந்தணம் குறிப்பது குற்றமற்ற குணமே
மைஸூர் கவர்மெண்டு தயாரிப்பு

கள். இமயமலையைத்தாண்டி வருகிறவழியில் ஒரு குன்றிலிருந்து கீழே இறங்கிக்கொண்டிருந்தேன். குனிந்து கீழே பார்த்ததும் ஆழ்ந்த பள்ளத்தாக்குக் கீழே தெரிந்தது. பயங்கரமான ஆழம். நான் கதிகலங்கிப் போனேன். மனம் பதைபதைத்தது. ஆனால் அந்தப் பள்ளம் துடித்துக்கொண்டிருந்த என் மனதை இழுத்தது. அந்த வசீகரத்தை என்னால் எதிர்க்கவும் முடியவில்லை, குதிக்கவும் முடியவில்லை. 'குதித்துவிடுவேன்' 'குதித்துவிடுவேன்' என்று வெறிபிடித்துக் கத்தத் தொடங்கினேன். கண்களைத் துணியால் கட்டி என் அம்மா என் கையைப் பிடித்துக் கீழே அழைத்துக்கொண்டு வந்தாள். மந்திரிஸாஹப், நிஜமாகவே இளவரசனைப் பார்க்கும்போது இதே மாதிரிதான் அவஸ்தைப்படுகிறது என் மனம். [அக்பருடைய கால்பக்கத்தில் மண்டியிட்டு உட்கார்ந்தவண்ணம்] மகாராஜ், மன்னித்துவிடுங்கள். என்னைக்கட்டுப்படுத்த முடியவில்லை. அவர் கண்முன் அவர் ஆலிங்கனத்தில் நிற்கும் வரை நான் எப்படி



மாறிப் போகிறேன் என்று எனக்கே தெரியவில்லை. அவரைவிட்டு அகன்றவுடன் நான் பாழ்பட்டுப்போகிறேன். நான் ஒளிக்கவோ மறைக்கவோ இல்லை. உண்மையைச் சொல்கிறேன். அவரைக் காதலிக்காமல் இருக்கமுடியாது. மகாராஜ், என்னைக் கொன்றுவிடுங்கள், என்னால் அப்படி இருக்கவே முடியாது.

(தேம்பித்தேம்பி அழுகிறாள். அக்பர் கண்களை மூடிக்கொள்கிறார். அபுல்பஸல் ஒரு நிமிஷம் செயலற்று நிற்கிறார். அக்பர் மிகச் சாந்தமாய் அனார்கலியின் கையைப் பிடித்துத் தூக்கி நிற்கவைக்கிறார்.)

அக்: குழந்தாய், உன் காதல் களங்கமற்றது. உன் தூய உள்ளத்திற்குத் துயரளித்து, கபடற்ற காதலை அறுத்து எறிந்துவிட்டு என்னால் எந்த முடிவுக்கு வரமுடியும்? (தயங்கி அனார்கலியைப் பிடித்துக்கொண்டு) அனார், நானும் என் அடிமையாய்ப் பிறக்கவில்லை? அப்படி நேர்ந்திருந்

தால் நான் பெருமையுடனும் ஆவலுடனும் உன்னை என் மகனுக்கு விவாகம் செய்து வைத்திருப்பேனே! அனார், உன் மாமனருடைய இந்த சாம்ராஜ்யத்தை.........

அனார்: மகாராஜ், மகாராஜ், நான் உயிருடனிருக்க ஆசைப்படவில்லை. எனக்கு உயிர்வாழ்வுவேண்டாம். (கதறி அழுகிருள். அபுல்பஸல் ஜாடை காட்ட வேலைக்காரன் வந்து அனார்கலியைத் தாங்கி வெளியே எடுத்துச் செல்கிருன்—சில நிமிஷம் மௌனம்.)

அக்: (பெருமூச்சுடன்) அபுல்!

அ. ப: மகாராஜ், என் வாழ்வின் சுதினம் இன்று. நான் மனித உலகிலேயே இப்பொழுது நிற்கவில்லை. இவ்வண்டத்தின் மூண்டெரியும் ஊழித்தீயின் பேரொளியில் விலையற்ற இரத்தினங்களைக் காண்கிறேன். ஊழித்தீயின் ஜ்வாலையை—அலைகளின் மோதுதலை—என் மூளையால் சகிக்கமுடிகிறதில்லை. இதயத்தினுள் சுழன்றடிக்கும் பெரும் புயலுக்குமுன் வெளியுலகை ஆட்டி வைக்கும் புயல் எம்மாத்திரம்? அப்பா!

அக்: என்னல் ஒருமுடிவையும் காண முடியவில்லையே அபுல்! சாம்ராஜ்யம் எக்கேடு கெட்டுப்போகட்டும்! அடிமை அனார்கலி விரும்பியதைப் பெருதுபோனது அவள் வல்வினையாலல் மனச்சாட்சிக்கு ஒவ்வாமல் உயிர்வாழச் செய்யும் சாம்ராஜ்யப் பித்து அக்பருடைய தலைவிதி. அபுல், பரிஷத்தினுடைய முடிவை நான் கண்மூடிக்கொண்டு ஏற்கத் தயார். சரி, என் மனம் கலங்கி விட்டது! [சட்டென்று எழுந்து போகிருர்]

திரை விழுகிறது

## காட்சி 3.

[மாலைப்பொழுது. ஆறடி உயரமுள்ள சுவர். ஸலீம் மின்னலைப்போல் தாவிச் சுவரில் போய்விழுகிருன். கையை விரித்துக் கொண்டு சுவரில் சாய்கிருன். பைத்தியம் போல் சுவரில் சாய்ந்துகொண்டு மார்பில் அடித்துக்கொண்டு அழுகிருன்]

ஸலீம்: அனார்! அனார்!! அனார்!!! [மண் பொம்மைபோல் செயல் அற்றுச் சுவரில் போய்ச்சாய்கிருன். தலைகவிழ்ந்துவிடுகிறது. சேவகன் ஓடி வருகிருன். அவன் பிரமித்துப் போகிருன். திடீரென்று ஸலீம் எழுந்து பைத்தியத்தைப்போல் சுவரின் செங்கலைப் பிடுங்குகிருன்.] அனார்! அனார்!! இப்போதும் உயிருடனிருக்கிருயா? காதல் உன் அருமை உயிரைக் கட்டி வைத்துக் கொண்டிருக்கிறதா?

சேவகன்: மகாராஜ்!

ஸ: சுவருக்குள்ளிருந்து மனிதக்குரல் வருவது காதில் விழுகிறதா?

சேவ: [பயந்து கொண்டே] உங்களுக்கு அப்படித் தோன்றுகிறது. இதுவரை உயிருடன் இருக்கமுடியாது.

ஸலீம்: முடியாதா? காதலால் முடியாதது ஒன்றுஉண்டா? இல்லை. பார், உள்ளே உயிர் துடிக்கிறது.

சேவ: அவளுடைய பிராணன் போகும் வரை வேலைக்காரர்கள் இங்கே இருந்தார்கள் மகாராஜ். அரசர் அப்படித்தான் கட்டளையிட்டிருந்தார்.

ஸ: ஐயோ! [உடல் பதறுகிறது. நெடு மூச்சுடன், ஏதோ நினைத்துக்கொண்டு சுவரைப் பார்க்கிருன்] அனார்! [கட்டாரியை மார்பில் தேய்த்துக்கொள்கிருன். சேவகன் பயந்துபோய் கையைப்பிடிக்கப் போகிருன்] நீ பயப்படாதே. நான் தற்கொலை செய்துகொள்ளமாட்டேன். [உடலிலிருந்து சட்டையை அகற்றி மார்பில் கட்டாரி முனையை வைத்துக் தோலைக் கிழித்துக் கொள்கிருன். கட்டாரிமுனையில் இரத்தம் தோய்கிறது]

சேவ: [பயந்துபோய்] மகாராஜ்!

ஸ: பயப்படவேண்டாம். கட்டாரியைச் சக்கரவர்த்தியிடம் எடுத்துக்கொண்டு போய் அவரிடம் பின் வருமாறு சொல்லு. "அனார்கலியின் கல்லறைக்கருகே நின்றுகொண்டு ஸலீம் கற்றுக்கொண்ட பாடம் இது தான்——சாம்ராஜ்யம்தான் நமது பெருமை. பிரஜைகளே நமது துயரம். இயற்கையான மனிதத்தன்மை நம்மிடத்தினின்று வெகுண்டோடிவிட்டது. இது அனார்கலியின் சாபம். அனார்கலி சுவருக்குள் துடித்துச் சாகவில்லை. ஆனல் அக்பருடைய மகன்தான் அவளைக் கொன்ருன்." இந்த இரத்தத் துளியைப் பார்த்துச் சக்கரவர்த்தி இன்பமெய்தட்டும். [கட்டாரியை அவனிடம் கொடுத்துவிட்டு] ஸலீமினுடைய நரம்புகளில் ஓடும் இரத்தம் அனார்கலியின் இரத்தமே. இந்த இரத்தத்தினுடைய சிகப்பு அனார்கலியிட்ட கொடிய சாபம், ஒருபொழுதும் மாயாத ஸலீமினுடைய தூய அன்பின் களங்கம், இந்த இரத்தக்கறை தந்தைக்கும் மகனுக்கும் இடையே இருந்த தூய அன்பை அழித்து விட்டது. நாம் மனிதர் அல்லர், உண்மையான சுத்த இதயத்தை நாம் வைத்துக்கொள்ளவே கூடாது என்றுதான் அக்பர் தமக்குப்

பின்னால் வரும் சக்கரவர்த்திகளுக்குப் பாடம் கற்றுக் கொடுக்கிறார். கபடமறியாத அனார்கலியின் மரணம்—ஒரு அனாதையான அடிமைப்பெண்ணின் பலாத்காரக் கொலை—முகல் வமிசத்திற்குக் கிடைத்த நிரந்தரமான சாபம். அனார்கலியிட்ட சாபம் கட்டாயமாய் முகல் வமிசத்தைப் பாதிக்கத்தான் செய்யும். பாதுஷாவையும் அடிமையையும் சமமாகப்பார்க்கும் ஒரு நீதிக்கண் முகலாய வமிசத்தின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் விதியாய் அனார்கலியின் சாபத்தை ஏற்றுக்கொண்டுள்ளது. போ, அனார்கலியின் முடிவையும் முகல்வமிசத்தின் எதிர்காலத்தையும் குறிக்கும் என் காதலாகிய இரத்தம் தோய்ந்த இந்தக் கட்டாரியை என் சிம்மாசனத்துக்கு எதிரில், நீதிமன்றத்தில் சலவைக் கல்லால் கட்டப்பட்டுத் தங்கம் பூசப்பெற்ற சமாதியில்வைக்கும்படி சொல்லு. [பின் புறம் திரும்பி] இந்தச்சுத்த அன்பின் அமைதி பரவிய புண்யஸ்தலத்தில் நான் தனியாய் வாழ்வேன். இவ்விடத்துக்கு யாரும் வராமலிருக்க ஏற்பாடு செய், போ. [சேவகன் மெதுவாய் நகருகிறான். ஸலீம் மண்டியிட்டு உட்கார்ந்துகொண்டு. தலை குனிந்து கைகளை மேலே தூக்குகிறான். சுவரில் தலையைச் சாய்த்துக்கொண்டு] அனார்! அனார்!! அனார்!!! [துக்கம் பொங்கத் தேம்பி அழுகிறான்]

(திரை விழுகிறது)

[தெலுங்கு நாடகத்திலிருந்து
எஸ். கிருஷ்ணன் மொழிபெயர்ப்பு]


## நின்றுபோன மாதவிடாய்



குமாரி (TABLETS) மாத்திரையின் உபயோகத்தினால் நின்றுபோனது நீங்கும். வருங்காலத்திலும் கஷ்டங்கள் நேரிடா. கெடுதலின்றி விரைவில் நலம் கிட்டும். இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் ஆயிரக்கணக்கானவர்கள் உபயோகிக்கின்றார்கள்.

| | | |
|---|---|---|
| சாதாரண கேஸ்களுக்கு | ... | ரூ 3 |
| நீண்டநாளைய கேஸ்களுக்கு | ... | ரூ 5 |
| மிக ஆபத்தான கேஸ்களுக்கு | ... | ரூ 8 |
| கர்ப்பத்தடை (6 மாத உபயோகத்திற்கு) | ... | ரூ 4 |

(வி. பி. அணா 12 கூட)

—: தயாரிப்பவர்கள் :—

**Mrs. P. DEVEE, F. D. S. (C. M.)**
Tollygunge, CALCUTTA.

கீழ்க்கண்டவர்களிடமும் கிடைக்கும்:—

(1) HARRY & SONS, 93, China Bazaar Road, Madras.
(2) RAGHAVAN & Co., Sri Narasimharaja Road, Bangalore City.
(3) Miss D. D. PANDE, Harinivas, Kingsway, Dadar, Bombay.
(4) J. TIRATH & Co., Mahatma Gandhi Road, Karachi.
(5) NATHAM & Co., Mattancheri, Cochin.
(6) L. M. MOOKERJEE & Sons Ltd., 167, Dharmatola Street, Calcutta.

# மூட நம்பிக்கை

ச. பாஷ்யம்

நாகரிகம் முன்னேற்றமடைந்துவிட்டால், மூடநம்பிக்கைகள் மறைந்துவிடும் என்று சொல்வது தவறு. கல்வி வளர்ச்சியும் ஓரளவுதான் மூடக்கொள்கைகளை ஒழிக்கமுடியும். மூடநம்பிக்கைகளுக்கு மனித இதயத்தில் எக்காலத்தும் நிரந்தரமான இடம் உண்டு. மனித சமூகத்தில் நிறைந்துள்ள மூடநம்பிக்கைகளைப் பார்க்கும்போது, ஆதாம் (Adam) உண்டது அறிவுக்கனி அல்ல; அறியாமைக் கனி என்றே தோன்றுகிறது. ஒவ்வொரு மனிதனும் அகத்தே ஒரு பழங்குப்பையைச் சுமந்து செல்கிறான். என்று மனித இதயம் இப் பழங்குப்பையை உதறித் தள்ளி விடுதலை பெறுகிறதோ, அன்றே மனிதன் உண்மையான விடுதலை அடைந்தவன் ஆவான். நாகரிக முன்னேற்றம் மூட நம்பிக்கைகளை அழிக்க முடியாது; பழைய மூடக் கொள்கைகள் போனால், உடனே புதிய மூடக் கொள்கைகள் தோன்றிவிடுகின்றன. ஒவ்வொரு காலத்துக்கும் அதற்கு ஏற்ற மூடக் கொள்கைகள் உண்டு.

நமது முன்னோர்கள் தீட்டாகிவிட்டதாகக் கருதிய பொருள்களை மந்திர நீர் தெளித்துப் புனிதமாக்கினார்கள் என்றால், விஞ்ஞானம் படித்து முன்னேறிய நவீன இளைஞன் கிருமிகள் ஒட்டிக் கொண்டிருப்பதாகக் கருதும் பொருள்களையெல்லாம் விஞ்ஞானப் புனித நீராகிய 'லோஷன்' தெளித்துச் சுத்தமாக்குகிறான். பண்டைய மக்கள் புனித நீரும் பிராயச்சித்தமும் ஆன்ம நோய்களையெல்லாம் தீர்த்துவிடும் என்று நம்பினார்களென்றால், நவீன மனிதன் உடல் நோய்களெல்லாம் டாக்டருடைய 'மிக்ஸ்சரை' உட்கொண்டு அவருக்கு உரிய 'தட்சிணை'யைக் கொடுத்த மாத்திரத்திலேயே நீங்கிவிடும் என்று நம்புகிறான். குணந் தெரியாத ஒரு மருந்தை இனந் தெரியாத ஓர் உடலுக்குள் செலுத்துவதுதான் டாக்டர் செய்வது என்று காந்திஜீ கூறுகிறார். மருந்தினால் எந்த வியாதியையும் குணப்படுத்த முடியாது என்பதை டாக்டர்கள் உள்பட எல்லோரும் அறிவர். இயற்கையோடு இயைந்த சிகிச்சைகளே நோயைப் போக்க வல்லவை. தங்களுடைய மருந்துகள் வியாதிகளைப் போக்கமுடியும் என்று ஒரு பொய்யை உண்டாக்கி அதில் மக்களை நம்பும்படி செய்வதே டாக்டர்களின் தொழில் என்று பேரறிஞர் 'பெர்னார்டு ஷா' (Bernard Shaw) கூறுகிறார். தனது முன்னோர்களின் மூடப் பழக்க வழக்கங்களைக் கண்டு நகைக்கும் நவீன மனிதன் நோய் வந்து விடப் போகிறதே என்று பயந்து முன் கூட்டியே நோயை உள்ளே செலுத்திக் கொள்ளுகிறான். பழங்கால மனிதனுக்குப் பார்க்குமிடமெல்லாம் பேயும் பிசாசும் துர்த்தேவதைகளுமாகத் தோன்றிற்று என்றால், முன்னேற்றமடைந்த நவீன மனிதனுக்கு நோக்கும் பொருளெல்லாம் நோய்க் கிருமியால் நிறைந்ததாகக் காணப்படுகிறது.

மனிதனுடைய மூட நம்பிக்கைகளைச் சொல்லி முடியாது. முற்காலத்து மக்கள் மதத்தின் பெயரால் மக்களைக் கொன்றொழித்து உலகை நரகமாக்கி வந்தார்களென்றால், இக்காலத்து மக்கள் அரசியல் கொள்கைகளின் பெயரால் அவற்றைவிடக் கொடிய செயல்களைப் புரிந்து வருகிறார்கள். பண்டை நாட்களில் மக்கள் சரித்திரச் சந்தடிகளிலும் கோத்திரச் சண்டைகளிலும் வீணே காலத்தைக் கழித்தனர். என் தெய்வம் பெரிதா, உன் தெய்வம் பெரிதா என்று வாதாடினார்கள். தத்தம் மதத்தின் உயர்வை நிரூபிப்பதற்காகச் சண்டைகள் செய்து பாதகங்கள் இழைத்தனர். இன்று நிலைமை மாறி விட்டதா? இல்லை. இன்றைய உலகம் அரசியல் சண்டைகளில் காலத்தையும் சக்தியையும் வீணாக்குகிறது. சமாசாரப் பத்திரிகையை வேத வாக்காகக் கருதுகிறது. அச்சில் வருவதெல்லாம் உண்மை என்று நம்பி அதற்காகச் சண்டைகளிலும் ஈடுபடுகிறது.

என்று இந்த உலகம் திருந்தி நேராக வாழப் போகிறதோ, தெரியவில்லை.

நமது மண விதிகளும் ஒழுக்க விதிகளும் மூடத்தனத்தின் உறைவிடம். மணமற்ற செய்கையை மணமென்று அழைக்கிறோம். அன்புச் சுனையில் தோன்றும் இன்ப ஊற்ருய் இருக்க வேண்டியதோர் தொடர்பைச் சாத்திர விதிகள் வகுக்கும் ஒரு தளையாக மாற்ற முயலுகிறோம். பரஸ்பர அன்பை அடிப்படையாகக் கொண்டு நிகழ வேண்டிய இல்லறத்தைக் குறுகிய விதிகள் கொண்டு கட்டுப்படுத்த முயலுகிறோம். மணத்தின் பெயரால் நிகழும் அக்கிரமங்களைச் சமூகம் சகித்திருக்கிறது. ஆனால் மணவிதிகளுக்கு உட்படாத தொடர்பு எவ்வளவு பரிசுத்தமானதாயினும் அதைப் பழிக்கவும், ஏன் அழிக்கவுமே சமூகம் தயங்குவதில்லை. "நாடகத்தில், காவியத்தில் காதலென்றால் நாட்டினர் வியப்பெய்தி நன்று மென்கிறார்; ஆனால் ஊடகத்தே, வீட்டினிலே, கிணற்றோரத்தே காதலென்றால் உறுமுகிறார்" என் அருமை வாசகரே, இதிலிருந்து நான் 'காதல்' என்று சொல்லப்படுவதில் நம்புகிறேனென்று நினைத்துவிடவேண்டாம். உண்மையை உள்ளபடி அறிய முயலும் எவனும் 'காதல்' கட்டுக்கதை என்பதை அறிவான். ஆம். 'காதல்' என்பது கவிஞனின் கற்பனை, கதாசிரியனின் கட்டுக்கதை. இயற்கையின் விதி ஆணையும் பெண்ணையும் சேர்த்து வைக்கிறது என்ற உண்மையை உள்ளபடி ஒப்புக்கொள்ள மனிதனுக்கு முடிவதில்லை. எளிதில் விளங்கும் இந்நிகழ்ச்சியை விளக்குவதற்கு அவன் 'காதல்' என்று ஒரு பொருளைப் புனைந்து அதன் புகழைப் பாடுகிறான். இப்புனை பொருளுக்காக மனிதன் உயிரையும்விடச் சித்தமாய் இருக்கிறான் என்பது உண்மையே. ஆனால் இதை மனிதன் 'தேச பக்தி' என்னும் மற்றொரு புனை பொருளுக்காக நாடு நகரங்களை அழித்து மக்களைக் கொன்று குவித்து, உலகை ஒரு பிணக்காடாக்கி விடவில்லையா?

நமது ஒழுக்க விதிகள் மூடத்தனத்தின் மற்றொரு கோட்டை. மனிதன் நல்லவனாய் இருப்பதற்கு அடிப்படையில் இரண்டே காரணங்கள் தான் உண்டு. ஒன்று பயம்; மற்றொன்று புகழில் விருப்பம். இவ்விரண்டில் பயமே முக்கியமானது. நல்லவர்களாய் இருப்பவர்களிற் பெரும்பாலோர் உலகத்துக்குப் பயந்தோ, புகழை விரும்பியோதான் நல்லவர்களாயிருக்கிறார்கள். மற்றவர்கள் கடவுளுக்குப் பயந்து நல்லவர்களாய் இருக்கிறார்கள். சென்ற ஐம்பது வருஷ காலமாக மூடக் கொள்கைகளை எதிர்த்து இடைவிடாத போராட்டம் நடத்தி வந்திருக்கும் பேரறிஞர் 'பெர்னார்டு ஷா' அவர்கள் இயற்றிய 'சாத்தானின் சீடன்' என்னும் நாடகத்தில், சாத்தானின் சீடன், "சாத்தானின் எதிரியாகிய கடவுளிடம் உலகம் கைகட்டி நிற்பதற்குக் காரணம் பயம் தான்" என்று கூறுகிறான். 'ஷா'வின் கூற்றுக்கள் எல்லாவற்றையும் போல், இதுவும் மிகையாகத் தோன்றினாலும், பொதுவாக இது உண்மை என்பதை யாரும் மறுக்கமுடியாது. தர்ம நியாயத்தைப் பற்றியும் பாவ புண்ணியத்தைப் பற்றியும் கதை கதையாகப் பேசுகிறோம்.


## காவேரி புதிய சந்தா விகிதம்

| சந்தா விபரம் | உள்நாடு | ஸிலோன் பர்மா & மலேயா முதலிய வெளிநாடுகளுக்கு |
|---|---|---|
| ஒரு வருஷம் | 6 0 0 | 7 8 0 |
| அரை வருஷம் | 3 0 0 | 3 12 0 |
| தனிப்பிரதி ஒன்றுக்கு | 0 8 0 | 0 10 0 |

ஏஜன்ஸி இல்லாத இடங்களில் டிபாஸிட் கட்டி நாணயமும் பொறுப்புமுள்ள ஏஜண்டுகள் தேவை.

ஸர்குலேஷன் மானேஜர்,
பெஸன்ட் ரோடு, கும்பகோணம்.

ஆனால் இவற்றால் பசியால் வாடும் மனிதனுக்குப் பயன் ஏதாவது உண்டா என்று நாம் நினைத்துப் பார்ப்பது கிடையாது. பசித்திருக்கும் மனிதனுக்குப் பாவம் இல்லை, புண்ணியம் இல்லை, மதம் இல்லை. அவனுக்கு ஒரே ஒரு மதம்தான் உண்டு. வறுமையை அகற்ற வேண்டியதே அவன் முதற் கடமை. “பொருளில்லார் பொருள் செய்தல் முதற் கடன்” என்று கூறினார் வறுமையால் வாடிய வரகவி பாரதியாரும். பொருளில்லார்க்கிவ்வுலக மில்லை, அவ்வுலகமு மில்லை. மனிதனுடைய நன்மையைவிட எந்த விதியும் மேலானதல்ல. வறுமையில் உழலும் மனிதனுக்கு நவீன உலகின் பொய்யாமொழிப் புலவர் ‘பெர்னார்ட் ஷா’ வின் உபதேசம் இதுதான்: “வறுமையில் உழலும் மனிதனே, விழித்தெழுந்திரு. உன் வறுமையைப் போக்கு. கொலைசெய், கொள்ளையடி, திருடு, மோசம்செய், யாது செய்தாயினும் உன் ஏழ்மையை அகற்று, அடிமையையும் ஏழ்மையையும் போக்குவதே உன் முதற் கடமை.” அன்பார்ந்த வாசகரே, கோபித்துக் கொள்ளவேண்டாம். என்னை நாஸ்திகனென்று தூற்ற வேண்டாம். “தனியொருவனுக் குணவில்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம்” என்று பாடிய மகாகவி நாஸ்திகரல்ல. ஆஸ்திக தர்மத்தில் அளவற்ற நம்பிக்கை கொண்டவரேனும், கடவுளரும் பார்த்து அழக்கூடிய உலகின் வறுமை நிலையை அவரால் சகிக்க முடியவில்லை. வாழ்க்கையின் நிலைமைகளுக்குப் பொருந்தாத ஒழுக்க விதி அர்த்தமற்றது. தயவு செய்து கண்ணைத் திறந்து பார்த்து, மூளையை உபயோகித்து நான் கூறுவது தவறு என்று சொல்லும். ‘ஷா’ போன்ற மேதாவிகள் கத்திக் கொண்டிருக்க வேண்டியதுதான். உலகம் தன் குருட்டுப் போக்கிலேயே போய்க்கொண்டிருக்கும். உலகத்தைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்.


பாத்ருடுவின்

**பால சஞ்சீவினி (Regd.)**

(இது ஒன்றுதான் அசல் விஜயநகர மருந்து)

**குழந்தைகளின் ஈரல்குலைக்கட்டி வியாதிகளுக்குச் சிறந்த மருந்து**

**சொற்ப காலத்திலேயே நிச்சய குணமளிக்கும்**

48 வருஷகாலமாகப் பல்லாயிரக் கணக்கான குழந்தைகளை இக்கொடிய குலைக் கட்டி வியாதியினின்று காப்பாற்றியிருப்பதனால் பல பிரக்யாதி பெற்ற டாக்டர்கள் இச்சஞ்சீவினியை உபயோகித்துக் கொண்டிருக்கிறார்கள்

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

போலி மருந்துகளைக்கண்டு ஏமாறாதீர்கள்

**டாக்டர் பிள்ளா பாபய்ய பாத்ருடு & பிரதர்,**

1, தெற்கு மாடவீதி, மயிலாப்பூர், மதராஸ்.

கும்பகோணம் கிளை :—
7, சாரங்கபாணி கோவில்
கீழவீதி.

திருச்சி கிளை :—
15, புகழியபிள்ளை தெரு,
தெப்பக்குளம் போஸ்டு.

# இறுதி நாள்

இரா. சந்திரகுப்தன்

கிறிஸ்துவின் ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எண்பத்து இரண்டாவது பிறந்தினக் கொண்டாட்டம். 1982ஆம் ஆண்டு, உலகத்து மகாஜனங்கள், இருபதுகோடிக்கு மேற்பட்டவர்கள் தனக்கு மனமுவந்து அளிக்கும் வரவேற்புடன் பிறந்தது. அவ்வாண்டு உலகத்துக்கு விமோசனத்தையும் தன்னுடன் அழைத்துக்கொண்டே புவியில் பிறந்தது என்று மக்களினத்தார் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்ந்தனர்.

அவர்களுடைய மகிழ்ச்சிக்கு அக்கால நிலைதான் காரணம். ஐக்கிய நாடுகளின் ஸ்தாபனத்து அங்கத்தினர்கள் அத்தனை பேரும், அந்த ஸ்தாபனத்தின் சரித்திரத்திலேயே முதன் முதலாக ஐக்கிய மனப்பான்மையுடன் காரியங்கள் செய்யத் தொடங்கினர். எல்லோராலும் கொண்டுவரப்பட்ட எல்லாத் தீர்மானங்களுக்கும் எல்லோருமாகச் சேர்ந்து ஆதரவுகாட்டத் தொடங்கி விட்டார்கள்! இந்தியாவில் கட்சி, சாதி, மத வேற்றுமைகளுக்குச் சமாதி கட்டப்பட்டு, 'எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் ஓரினம், எல்லோரும் இந்நாட்டு மக்கள்' என்ற கவிஞரின் வாக்கை நடைமுறையில் கடைப்பிடிக்கத் தொடங்கிவிட்டார்கள். இந்தியாவின் (1981-ஆம் ஆண்டு சென்ஸஸ் கணக்குப்படி) ஐம்பத்தைந்து கோடி மக்களும்! சைனாவின் உள்நாட்டுப் போருக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு விட்டது; உலக முழுவதிலுமே நிறத் திமிருக்கு ஒரு முடிவு கட்டிவிட்டார்கள், அந்தக் காலத்து மக்கள்; குறைந்தோ, கூடியோ ஏதோ ஓர் அளவில் பொதுவுடைமையை அடிப்படையாகக் கொண்டு உலகத்துச் சகல அரசாங்க அமைப்புக்களும் வேலை செய்யத் தொடங்கி விட்டன; சர்வதேச நீதி மன்றத்திற்கே வேலையில்லாமல் பழைய ரிகார்டுகளைச் சரிபார்த்து, தூசி துடைத்துவைக்கும் வேலையிலீடுபட்டது அம்மன்றம்!

"இது கலியுகமப்பா! சண்டையும், சச்சரவும், பஞ்சமும் வறுமையும் இந்த யுகத்து லட்சணங்கள்!" என்று சொல்பவர்களின் வாயை அடைத்துப் பேச ஆரம்பித்தார்கள் முன்னேற்ற வாதிகள்.

பழமை விரும்பிகளைப் பார்த்து அவர்கள் "எல்லாம் மனிதனின் கையில்தானையா இருக்கிறது; இயற்கையை வென்று தன் வழி செலுத்தக் கூடியவன் மனிதனே" என்று இறுமாப்புடன் கூறினார்கள். அவர்கள் கூற்றுக்கும் காரணமிருக்கத்தான் செய்தது; அப்பொழுதுதான் முதன் முதலாகச் சந்திரமண்டலத்திற்கு அபாயமில்லாமல் ஒரு விமானகோஷ்டி போய் வெற்றியுடன் இறங்கி விட்டதென்று விஞ்ஞானிகள் ஓர் அறிக்கை விட்டிருந்தார்கள்.

ஆனால் பழமை விரும்பிகளா விடுபவர்கள்? அவர்கள் "எல்லாம் செய்யலாமப்பா செய்யலாம்; ஆனால் இவைகளெல்லாம் எந்த அனர்த்தத்தில் கொண்டுபோய்ச் சேர்க்கப்போகின்றனவோ?" என்று உதட்டைப் பிதுக்கிக்கொண்டார்கள்.

புராணீகர்களின் நம்பிக்கை, விஞ்ஞானிகளின் ஆராய்ச்சி முடிபுடன் ஒன்று சேர்ந்து உலகத்தின் இறுதிநாளைக் கூடிய சீக்கிரம் வரையறுக்கப் போகிறது என்பதை அந்த இருசாராரும் அப்பொழுது அறிந்திருக்க மாட்டார்கள்.

* * *

1982ஆம் ஆண்டு பிப்ரவரி மாதக் கடைசி நாளன்று உலகத்துப் பல்வேறு வானாராய்ச்சிக் கழகங்களும் (Observatories) சுறுசுறுப்பாய்க் காணப்பட்டன. அன்றுதான் வெளிவந்த, ப்யூனஸ் அயர்ஸின் கிழ விஞ்ஞானி ப்யூக் என்பவர் வெளியிட்ட அறிக்கையொன்றும், அதற்கேற்றாற்போல் வானிலையில் ஏற்பட்டுவந்த வெப்பக் குறைவுந்தான் அந்தப் பரபரப்புக்குக் காரணம்.

எல்லா வானாராய்ச்சிக் கழகங்களும் செய்த சோதனைகளிலிருந்து பூமியைச் சூழ்ந்துள்ள சீதோஷ்ண நிலை இனிமேல் குளிர்ச்சி அடைந்து கொண்டேதான் வருமென்று முடிவு செய்தனர். அதன்படி அறிக்கைகளும் வெளியிடப்பட்டன; இன்னும் சமுத்திரம் பூமியின் எல்லாப் பாகங்களிலும் கொந்தளிக்கக் கூடுமென்றும். கூடியவரை கடற்கரைப் பிரதேசங்களிலும், தீவுகளிலும் குடியிருப்பவர்கள் உள்நாட்டிலே வந்து குடியேறுவதே உசிதமென்றும், அவ்வறிக்கைகளில் முன்னெச்சரிக்கை செய்யப்பட்டிருந்தது.

ஐக்கிய நாடுகளின் ஸ்தாபனமே இந்தப் பாதுகாப்பு வேலைகளைக் கவனிக்கத் தொடங்கியது. பல்வேறு நாடுகளுக்கும் திட்டங்கள் அனுப்பி, இந்தக் குடியேற்ற வேலையைப் பதினைந்து நாட்களில் கூடிய வரை முடித்து விட்டனர்; நாளுக்கு நாள் அதிகமாகிக்கொண்டு வந்த குளிரையும், நிலப் பரப்பை ஆக்கிரமிக்கத் தொடங்கிய நீர்ப் பரப்பையும் கண்ட மனிதர்கள், தாங்கள் விட்டுவிட்டு வந்த வீடு, நிலம், மாடு மற்றவைகளை மறந்து ஒருவாறு கவலை நீங்கினர் தம்முன் நிற்கும் அபாயத்தை நினைத்து. இந்தக் குடியேற்ற வேலையில் ஆகாய விமானங்களுக்குத்தான் அதிகமான பங்கு; அவைகள் இராப் பகலாய் வேலை செய்தன. இந்தக் குடியேற்றத்திற்குப் பிறகு மத்திய ஆசியா, ஆப்பிரிக்கா, வட அமெரிக்கா இவைகளின் மத்திய பாகங்கள் இம்மூன்று இடங்களிலும் மக்கட் கூட்டம் நெருக்கமாகிவிட்டது. ஆனால் விஞ்ஞானத்தின் உதவியாலும், தொழிற்சாலைகளின் இராப் பகல் உழைப்பாலும் அந்தப் பெரிய ஜன சமுத்திரத்திற்கு ஒருவாறாகத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டன. குளிர் தாங்கும் சாதனங்களும் உஷ்ண முண்டாக்கும் கருவிகளும் ஏராளமாக உற்பத்தி செய்து வினியோகிக்கப்பட்டன.

எல்லா இடங்களிலும் ஆங்காங்கே யிருந்த வானாராய்ச்சிக் கழகங்களில் வேலை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுவிட்டபடியால், முடிந்த அளவு சில கழகங்களை மாத்திரம் வைத்துக்கொண்டு மற்றச் சாதனங்களையும், விஞ்ஞானிகளையும் மத்திய ஆசியாவில் பெரிதாக நிர்மாணிக்கப்பட்டிருந்த வானாராய்ச்சிக் கழகத்திற்குக் கொண்டு வந்து சேர்த்தனர். அதற்குத் தலைமை வகிக்கக் கிழ விஞ்ஞானி ப்யூக்கும் வந்து சேர்ந்தார் மத்திய ஆசியாவுக்கு என்பதை நேயர்கள் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டியது அவசியமாகும்.

*       *       *

1982 மார்ச்சு, ஏப்ரல் மாதங்கள் வேகமாக ஓடி, வரப்போகும் துயர முடிவுக்கு விரைவாக வழி கோலின. அதுவரை வெள்ளத்தாலும், குளிராலும் சுமார் இருபத்தைந்து கோடி மக்கள் உயிர் துறந்தனர் என்று கணக்கிடப்பட்டது. எவ்வளவோ விஞ்ஞானத்தின் துணைகொண்டு செயல்கள் நிகழ்த்தினாலும் இயற்கையின் அழிப்புத் திட்டத்தின்முன் மனிதனின் பாதுகாப்புகள் பயனற்றுப்போயின.

ஆனால் அந்தத் துன்ப நாட்களில் மனிதர்களின் ஒற்றுமை அதிகரிக்கத் தொடங்கியது; வீண் சண்டைகள் குறைந்தன; உணவும், மற்றத் தேவைப் பொருள்களும் குறைவாக இருந்தாலும் ஒருவருக்கொருவர் அவைகளுக்காக அடித்துக்கொள்ளவில்லை. அந்தக் காலத்தில் வெள்ளையன் கருப்பனோடு கலந்துறவாடினான்; வெள்ளைப் பெண் மஞ்சள் பெண்ணைச் சமமாகக் கருதினாள். சாவின்முன் மனித சமுதாயம் ஒரு லட்சிய சமுதாயமாகிவிட்டது. ஒவ்வொருவரும் தியாக உணர்ச்சியால் நிறைந்திருந்தனர். அழிவு நாளை எல்லோரும் இன்முகத்தோடு வரவேற்கத் தயாரானார்கள். ஆனால் அந்த லட்சிய சமுதாயத்தைக் கண்டு அந்தச் சமயத்தில் பூரிக்கவோ, பாராட்டவோ யாருக்கும் நேரமே யில்லை!

*       *       *

1982, மே, 15. நிலைமை மிக நெருக்கடியாகிவிட்டது. இறந்தவர்களின் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டே வந்தது. இதுவரை புவியின் ஜனத்திரளில் மூன்றிலொருபங்கு அழிந்து போயிருக்கும் என்று கணக்கிடப்பட்டது! ஆ! அந்தக் குளிர்! அது குளிரல்ல; உலகத்து உயிர்களுக்கு முடிவுகட்ட வந்த கூரிய கொடுவாள்! அந்தத் தாங்க முடியாத குளிரால் ஓரளவாவது மிஞ்சியிருந்த மனிதர்களின் இரத்தத்தை உறையாமல் பாதுகாத்து வந்தவை விஞ்ஞான சாதனங்கள்தான். மனிதர்களுக்காவது இந்தச் செயற்கைப் பாதுகாப்புகள்; மற்ற பறவை மிருகம் முதலிய உயிர்களில் நீரிலும் குளிரிலும் உயிர் வாழக் கூடியவை தவிர, மற்ற உயிர்கள் நசித்துப் போய்விட்டன, வான ஆராய்ச்சியாளர்கள்தான் தகுந்த சாதனங்களால் உஷ்ணமுண்டாக்கிக்கொண்டு சுறுசுறுப்பாக வேலை செய்து வந்தனர். மற்ற மனிதக் கூட்டம் குளிரினால் ஒடுங்கிக் கிடந்தது; ஆண்களும் பெண்களும் வேற்றுமையின்றி நெருங்கிக் கிடந்தனர். இறுதிநாளின் முன்னே கேவல எண்ணங்களுக்கு இடமேது?

*       *       *

மே 23உ. இருளிடை ஒரு துகள் போன்ற ஒளி வானத்தில் காணப்பட்டது, மணிக்கு மணி அதன் அளவு பெரிதாகிக்கொண்டே வந்தது. அதற்கேற்றாற்போல் குளிரும் குறைந்துகொண்டே வந்தது புவியின்மேலே. இழந்த உயிர் மீண்டும் கிடைக்கப்பெற்றால்! ஆம், அத்தகைய அடங்கா மகிழ்ச்சியுடன்தான் அந்த ஒளிக்கோளத்தை மக்கள் நோக்கத் தொடங்கினர். அதனிடம் அவர்கட்கு

# MEHTA'S SPECIALITIES

*Well-known for their efficacy and Medicinal values*

1 **SUNDARI ELIXIR**
For all kinds of female irregularities in menses and a great uterine tonic.

2 **PHOSPHORUS OIL**
A great pain relieving oil ever prepared in annals of medicine.

3 **MASTANA PILLS**
Unique in the field, combining both Allopathic & Ayurvedic systems, curing general debility, Rheumatic pains, Hay fever & what not.

4 **DRAKHYASAVA WITH GOLD & MAKARDHWAJA**
A great Blood Purifier & digestive & Potential Tonic.

*Stocked by all important Chemists & Druggists of South India*

## K. S. MEHTA & CO.

**250, China Bazaar, MADRAS.**

# இண்டோ கமர்ஷியல் பாங்க் லிமிடெட்

ரிஜிஸ்டர்டு ஆபீஸ்: மாயவரம் ★ ஸெண்ட்ரல் ஆபீஸ்: மதராஸ்.

வாக்களிக்கப்பட்ட மூலதனம் ரூ. 25,00,000
செலுத்தப்பட்ட மூலதனம் ... ரூ. 18,75,000
ரிஸர்வ் பண்டு ... ரூ. 7,75,000
மொத்த ஆஸ்தி ... ரூ. 5 கோடிக்குமேல்

ஸிட்டி ஆபீஸ்கள்:

ஸைனுபஜார், மாம்பலம், மயிலாப்பூர், பேரியமேட், திருவல்லிக்கேணி

| | | | |
|---|---|---|---|
| அமதலவால்ஸா | கும்பகோணம் | திருநெல்வேலி ஜங்ஷன் | ராமநாதபுரம் |
| அனகாபள்ளி | சாலூர் | திருச்சினுப்பள்ளி | மதுரை |
| அம்பாசமுத்திரம் | சிதம்பரம் | திருவாரூர் | மாருடேரு |
| ஆம்பூர் | சித்தூர் (கொச்சி) | தென்காசி | விழுப்புரம் |
| ஈரோடு | சீயாழி | நாகப்பட்டணம் | விருதுநகர் |
| கடலூர் N. T. | தஞ்சாவூர் | பரமக்குடி | விஜயநகரம் |
| கடலூர் O. T. | தாடபள்ளிக்கூடம் | பாலக்காடு | வேலூர் |
| காஞ்சீவரம் | திலாரு R. S. | பார்வதிபுரம் | வேதாரண்யம் |
| காரைக்குடி | திருநெல்வேலி டவுன் | புதுக்கோட்டை | |

பிக்ஸட் டிபாஸிட்கள்:- ஒரு வருஷம் நூற்றுக்கு வட்டி ... ... $2\frac{3}{4}$% விதம்
இரண்டு „ „ ... ... 3% „
சேவிங்ஸ் பாங்கு கணக்கு வாரம் ரூ. 250/வாங்கக்கூடியது ரூ. 5000/வரை வட்டி $2\frac{1}{2}$% „
கரண்ட் கணக்கு .. .. .. .. $\frac{1}{4}$% „

தங்கம், வெள்ளிபார், கவர்மெண்ட் பாண்டு, கடன் பத்திரங்கள், ஷேர்கள், வியாபாரச் சரக்குகள் முதலியவைகளின் பேரில் கடன்கள் கொடுக்கப்படும்.

எல்லாவிதமான பாங்கு நடவடிக்கைகளும் நடத்தப்படும்

எஸ். என். என். சங்கரலிங்க அய்யர்,
மானேஜிங் டைரக்டர்.

நன்றி பிறந்தது. கைகளை மேலே தூக்கி அந்தப் புதிய சூரியனை நோக்கி வணங்கினர் மக்களெல்லோரும். எல்லோருக்கும் ஒரே கடவுளாக அந்தச் சூரியன் காட்சியளித்தான். அந்த ஏகதெய்வ மதந்தான் மானிட ஜாதியின் கடைசி மதம் போலும்!

சாதாரண மக்களைப்போல் பெரும்பாலான விஞ்ஞானிகள்கூட அந்தப்புதிய தீக்கோளத்தின் தோற்றத்தினால் மகிழ்ச்சியடைந்தனர். ஆனால் கிழ விஞ்ஞானி ப்யூக் மத்திய ஆசிய விஞ்ஞான கழகத்தில் உட்கார்ந்து கொண்டே தமது தாடியை உருவிக் கொண்டிருந்தார். அவநம்பிக்கை அவரது முகத்தில் தெளிவாகத் தெரிந்தது. ஆராய்ச்சியாளர்களின் புருவங்கள் மேலேறின; அவரை நோக்கி எல்லாவிஞ்ஞானிகளும் 'ஏன்' என்ற வினாவை எழுப்பினர்.

அவர் அவர்களுக்குப் பதில் சொன்னார்: ''இப்பொழுது உஷ்ணமும் வெளிச்சமும் கொடுத்துக்கொண்டு வரும் ஒளிக்கோளம் எது தெரியுமா? அதுதான் சூரியனிலிருந்து வெடித்துப் பிரிந்து பூமியை நோக்கி வரும் ஒரு பகுதி. அது வெகு வேகமாக நமது பூமியை நோக்கி வந்த கொண்டிருக்கிறது. என்னுடைய கணக்குப்படி பார்த்தால் இன்னுமிருக்கும் 3600007 மைல் தூரத்தை இந்தக் கோளம் மூன்று நாட்களில் தாண்டிவிடும். பிறகு அது பூமியைச் சந்தித்தால்? ஆம், நாம் இத்தனைநாளாக ஒத்திப் போட்டுக்கொண்டு வந்த புவியின் இறுதி நாள் சந்திப்புத்தான் அது ஒரே ஒரு நம்பிக்கையிருக்கிறது, அதாவது இந்த மூன்று நாட்களுக்குள் வான வெளியிலுள்ள மற்ற கிரகங்கள் ஏதாவதொன்றால் ஈர்க்கப்பட்டு அந்தத் தீக்கோளம் திசை மாறிச் சென்றாலும் செல்லலாம், அப்படிச் சென்றால் நாம் தப்பிப் பிழைத்தோம்.

உலகத்தின் இறுதிநாள் இன்னும் மூன்று நாட்களுக்குள் நிர்ணயிக்கப்படும் என்றே நிச்சயம் செய்து விட்டனர் விஞ்ஞானிகள் யாவரும். அவர்களது முகத்தில் சிலையின் முகத்தில் தோன்றும் அமைதி தென்பட்டது.

விஞ்ஞானி ப்யூக் பின்னும் சொல்லத் தொடங்கினார்:- ''இன்னும் மூன்று நாட்களுக்குள் ஆபத்து நேரிட்டால் மக்கள் மரணாவஸ்தையை அநுபவிப்பதைத் தடுக்க ஒரு வழி செய்யவேண்டும். அதோடு இன்றே தாங்க முடியாத உஷ்ணம் பூமியைச் சூழ்ந்துகொண்டு விடும் மாலை நேரத்திற்குள். இதற்கு மயக்க மருந்து முறை ஒன்று திட்டமிட்டிருக்கிறேன். அந்த மயக்க மருந்தை எஞ்சி உயிரோடிருக்கும் மனிதக் கூட்டத்திற்கு வினியோகித்து விடவேண்டும். அந்த மருந்தை உட்கொண்டால் அவர்கள் மூன்று நாளைக்கு ஆழ்ந்த நித்திரையில் ஆழ்ந்து விடுவார்கள். இறந்தால் அவஸ்தையில்லாமல் இறப்பார்கள். தப்பிப் பிழைத்தால் புத்துலகத்தைக் காண மூன்றும் நாள் விழிப்பார்கள்'' என்று முடித்தார் ப்யூக்.

அவருடைய திட்டப்படி விஞ்ஞானிகள் உள்பட எல்லோரும் மயக்க மருந்தினால் ஆழ்ந்த நித்திரையிலாழ்ந்தனர். தானாக வேலை செய்யும்படி வைக்கப்பட்டிருந்த கால நிலைக் குறிப்பெடுக்கும் சாதனங்கள் மாத்திரம் வேலை செய்துகொண்டிருந்தன வானாராய்ச்சிக் கழகங்களில்.

* * *

1982 மேமீ 29.ஆம் தேதியன்று வான வெளியாகிய பெருத்த ஒரு நாடக அரங்கில் பின்வரும் அழிவு நாடகம் நடித்துக் காட்டப்பட்டது. நடிகர்கள் பூகோளமும், சூரியனிலிருந்து பிரிந்த ஒரு தீக்கோளமும். நாடகம் பார்ப்பவர் இப்பிரபஞ்சத்து வானத்தில் நிறைந்து கிடக்கும் எண்ணிலா நட்சத்திரக் கூட்டங்களும் அவைகளின் உபகிரகங்களும்.

தீக்கோளம் வெகு வேகமாகப் பூமியினருகில் நெருங்கிக் கொண்டிருந்தது. தீக்கோளத்தின் ஒளி பூமியின்மேல் பிரதி பலித்தது. தீக்கோளம் இன்னும் நெருங்கியது. பூமியும் கொஞ்சம் முன்னால் நகர்ந்தது. ஒரு பிரம்மாண்டமான மோதல். தித் துகள்கள் வானவெளியில் நாலா புறமும் சிதறின. ஒரு கணம். பிறகு அவ்விடத்தில் ஒரு புகைப் படலம்தான் காணப்பட்டது. கோடாநுகோடி வருஷங்களாகச் சித்திரிக்கப்பட்டு, சூரிய குடும்பத்தில் உயர்ந்த ஸ்தானம் பெற்றிருந்த பூமி இருந்த இடம் இப்பொழுது சூன்யமாகிவிட்டது!

* * *

பூமி யழிந்தது என்றால் பூமி மாத்திரமா அழிந்தது? பூமியில் பரிணாம தத்துவ திட்டத்தினால் உருவாக்கி யிருந்த எண்ணிறந்த உயிர்க்கூட்டம் அழிந்தது. உயிர்க்கூட்டத்தின் சிகரம்போல் விளங்கிய, எண்ண முடியாத, இனி ஒருகாலும் உருவாக்க முடியாத மேதைகளடங்கிய மனித வர்க்கமல்லவா அழிந்துவிட்டது. இயற்கைக்கு இந்த நஷ்டத்தைப்பற்றிக் கவலையில்லை—ஆனால் மனிதர்களுக்கு. மனிதர்

கள் அழிந்துபோனாலும் அவர்களது ஆவிகளாவது வான வெளியில் திரிந்து திரிந்து இந்தப் பெரிய அநியாயத்தை எடுத்து உரக்கக் கூவித்தான் தீர்க்கும், இயற்கையின் காது அடைத்துப்போகும்படி, என்பது மாத்திரம் நிச்சயம்.

* * *

கற்பனையுலகின் திரையை நீக்கிக்கொண்டு நனவுலகிற்கு வந்தேன். கற்பனை யுலகில் கண்ட காட்சியினால் கலவரமடைந்திருந்த நான் என்னையே கொஞ்சம் கிளைப் பாற்றிக்கொண்டு எதிரே பார்த்தேன். மேஜையின் மேல் தினசரித்தாள் விரிந்து கிடந்தது. அதில் கீழேகண்ட செய்தி காணப்பட்டது:—

"உலகத்தின் ஆயுள் இன்னும் 36 வருஷமே-1982 ல் உலகம் வெள்ளம், கடுங்குளிர் வெடிப்பு இவைகளால் அழியப் போகிறது என்று ப்யூநஸ் அயர்ஸின் விஞ்ஞானி ப்யூக் என்பவர் கூறுகிறார்"

இந்த முன்னறிவிப்புப்படி ஒருகாலும் நடக்கவே போவதில்லை என்று மனதைத் திடப்படுத்திக் கொண்டு, பத்திரிகையை மூடிப் போட்டுவிட்டு, எழுந்தேன்.


## பொதுஜன ஆதரவுக்கு நமது முன்னேற்றமே சான்று

ஏராளமான பாலிஸிகள், இடைவிடாத மகத்தான முன்னேற்றம் அதிகரித்துக்கொண்டே வரும் புகழ், பொதுஜன ஆதரவு — இவைகளுக்குப் போதிய அத்தாட்சி அடியிற் காணப்படும் புள்ளி விபரங்கள்:-

| வருஷம் | புதியபாலிஸிகள் | மொத்த ஆஸ்தி | நடை முதலிலிருக்கும் பாலிஸிகள் |
|---|---|---|---|
| 1941 | 1 கோடி 1 லக்ஷத்திற்குமேல் | 1 கோடி 95 லக்ஷத்திற்குமேல் | 8 கோடி 36 லக்ஷத்திற்குமேல் |
| 1943 | 2 கோடி 20 லக்ஷத்திற்குமேல் | 2 கோடி 50 லக்ஷத்திற்குமேல் | 10 கோடி 53 லக்ஷத்திற்குமேல் |
| 1945 | 3 கோடி 75 லக்ஷத்திற்குமேல் | 3 கோடி 41 லக்ஷத்திற்குமேல் | 14 கோடி 87 லக்ஷத்திற்குமேல் |

1945 புதிய பாலிஸிகள் பெருக்கு:— 1 கோடி 15 லக்ஷத்திற்குமேல்

**போனஸ் விகிதம் :-**

ஆயுள் பாலிஸிகளுக்கு வருடம் 1-க்கு ரூ 1000-க்கு ரூ 10

எண்டௌமெண்ட் பாலிஸிகளுக்கு வருடம் 1-க்கு ரூ 1000-க்கு ரூ 8

# லக்ஷ்மி இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

(தலைமை ஆபீஸ்:- லாகூர்)

மதராஸ் பிராஞ்சு:- 4/105, அரண்மனைக்காரத்தெரு, ஜி. டி. சென்னை.

# இளமையின் மனப்புயல்

சாரி

"முத்து......! அடே முத்தையா........! வாரியாடா பலகாரஞ் சாப்பிட? உங்கய்யா காத்திருக்காருடா."

கன்னியம்மாவின் குரல் செவியில் விழுந்ததாக முத்தையன் காட்டிக்கொள்ளவில்லை. குடிசையின் திண்ணையில் அவன் படுத்திருந்தான். தாயின் கூப்பாட்டைக் கேட்டதும், குளிரினுல் உடம்பை ஒடுக்கியவன்போல், சுவரின் பக்கம் திரும்பிக்கொண்டான்.

"ஏ, குட்டி, நீ வா இங்கே. முதல் சங்கு ஊதியது காதிலே விளல்லே? எம்மா நேரமாச்சு? வேலைக்குப் போகத் தேவையில்லை? உன் மகனை அப்புறம் எழுப்பலாம்," என்று கூச்சல் போட்டான் அழகப்பன்.

அவன் வார்த்தையில் தொனித்த கோபத்தைக் கண்டு கன்னியம்மா பயந்துபோனுள். பரக்கப் பரக்க உள்ளே ஓடி ஒரு குவளையில் பனை வெல்லம் போட்ட காப்பியையும், ஒரு தாலத்தில் சூடாக அப்பொழுதே சுட்டெடுத்த நான்கு ஆப்பங்களையும் கொண்டு வந்து புருஷனுக்கு எதிரில் வைத்தாள். அவள் பேசவேயில்லை.

மௌனமாக ஆகாரம் செய்தான் அவனும். தட்டில் கையைக் கழுவிவிட்டு எழுந்திருக்கும்பொழுது மனைவியைப் பார்த்தான், அவள் நின்றபடியே தலைகுனிந்து கண்ணீர் விட்டுக்கொண்டிருந்தாள். கீழே தரையில் சொட்டிய கண்ணீரைத் தன் கால் பெருவிரலால் அங்குமிங்கும் கோலம்போல் இழுத்துக்கொண்டிருந்தாள். நினைவு வேறெங்கோ சென்றிருந்தது.

அழகப்பன் திடுக்குற்றுன். "ஏ குட்டி, நான் என்ன சொல்லிப் போட்டேன்னு, இப்படி நீ அளுவரே?" என்று பரிவுடன் கேட்டு அவள் கையைப் பற்றினுன்.

கன்னியம்மா விசிக்க ஆரம்பித்தாள். "இல்லே......அத்தான்......இந்தப் புள்ளே இனி என்னவாகப் போகுது என்று அளுவறேன். பலகாரம், காப்பி ஒண்ணு தொடறதில்லே. சதா நேரமும் படுத்தே கிடக்கு. போதாக் குறைக்கு மாலை மசங்கற வேளைக்கி "சோ" கொட்டகைக்குப் போயிடருன். அந்தப் பாழாப்போன கொட்டகையிலே ஒரு ராவு தீ வச்சிப்பிடலாமான்னு வருது..."

"ஏண்டி, இன்னமுமா முத்து அங்கே போருன்? நீ ஏன் என்னிடம் சொல்லலை? அவனுக்கு காசு ஏது? கடன் வாங்கருனு?"

"ஐயோ......அத்தான், ஒருநாள் சொன்னத்துக்கு புள்ளையைப் போட்டு நீ அடிச்சுப்போட்டே. ஒருவாரம் கண்ணைத் திறவாமே கடந்துச்சு......"

"பிறகு மறுபடியும் போக ஆரம்பித்து விட்டானுக்கும். இந்தப் பாவி மகனை என்னு செய்யறது? உடம்பாவது நல்லா ஆனுல் பழையபடி மில்லிலே கொண்டு போய்ச் சேர்க்கலாம்......"

"அத்தான், வேண்டவே வேண்டாம். நமக்கு இருப்பதெல்லாம் ஒரே கருக்காய், மில்லு பஞ்சு நெஞ்சிலே அடைத்து அவன் வயித்து வலியால் உயிர் துடிச்சு இப்பத்தான் பிழைச்சிருக்கான். இனிமே அந்த வேலையே ஒதவாது......"

"சரி, நீ குட்டிச்சுவராக்கு அவனை. 22 வருசமா மில்லிலே வேலை பார்க்கிற எனக்கு வயித்து வலியும், நெஞ்சு வலியுமா வந்தது? ஓம் புள்ளைக்கு கலெக்டரு உத்யோகம் வாராப்பிலே பேசறியே புத்தி இருக்கா?"

இவர்கள் விவாதம் முடியுமுன் இரண்டாவது சங்கு ஊதத் தொடங்கிற்று. அவசர அவசரமாய்ச்சட்டையை மாட்டிக்கொண்டு. அழகப்பன் பஞ்சாலையை நோக்கிப் புறப்பட்டான். திண்ணையில் முடங்கிக்கிடந்த முத்துவை அவன் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை.

* * *

"பாரிஸ் கார்னிவல்"......ப்பூருக்கு வந்து ஆறுமாதமாகிறது. அவர்களுடைய டேராவைப் பஞ்சு ஆலைகள் மிகுந்த அவ்வூரின் பரந்தவெளியில் அடித்தார்கள்.

அக்கம் பக்கத்தில் கிராமங்கள் பதினைந்து உண்டு. அந்த ஜனங்களில் பெரும்பாலோர் பஞ்சு ஆலைகளில் வேலை செய்பவர்கள். ஆலை முதலாளிகள் இவர்களுக்கென்று அமைத்துத் தந்த சிறு வீடுகள் ஒன்று சேர்ந்து அந்தப் பொட்டலுக்கு

அருகில் ஒரு பட்டணம்போல் தோற்ற மளித்தது.

இவ்வேழை மக்களின் வரும்படி யெல்லாம் நாளடைவில் ''பாரிஸ் கார்னிவல்' சொந்தக்காரரான ஒரு வடக்கத்தியாரின் பைக்குள் போய்ச் சேர்ந்தது. தொடக்கத்தில் இவருக்கு லாபம் அதிகம் கிட்டவில்லை.

ஒருநாள் திடீரென்று அவ்வூர் கலெக்டரிடமிருந்து ஒரு அவசர உத்தரவும் பிறந்தது. ஜனங்களின் பணத்தை மோசடியில் பிடுங்கிக் கொள்வதாகத் தெரிய வந்ததினால், 24 மணிநேரத்திற்குள் அவ்வூரைவிட்டுக் கிளம்பவேண்டுமென்று அவ்வுத்தரவு ஆக்ஞாபித்தது!

கார்னிவலின் சொந்தக்காரர் விழுந்தடித்துக்கொண்டு கலெக்டர் பங்களாவிற்கு ஓடினார். ¾ மணிநேரத்திற்குப் பின், மலர்ந்த முகத்துடன் அவர் திரும்பி வந்தபொழுது, அவருடைய ஜேபியில் கலெக்டர் கை ஒப்பமிட்ட புதிய உத்தரவு ஒன்று பத்திரமாய்த் திகழ்ந்தது.

அதில், பழைய அவசர உத்தரவு ரத்து செய்யப்பட்டு, 'பாரிஸ் கார்னிவல்' சொந்தக்காரரின் தர்ம சிந்தனைக்கு நன்றி பாராட்டி, அவர்கள் வாடகையில்லாமல், நிரந்தரமாக, பூர்ண சுதந்திரத்துடன்——ப்பூர் மைதானத்தில் காட்சிகளை நடத்தலாமென்று அனுமதித்திருந்தது.

கொடிப் பொழுதில் ஒரு லக்ஷ ரூபாயை நோட்டுக்களாய் எண்ணி, யுத்த நிதிக்கு நன்கொடையாக, கலெக்டர் முன்னிலையில் அளித்த தனிப் பெருமை கார்னிவலின் சொந்தக்காரருக்கு உரித்தாயிருந்ததின் பயனே மேற்கண்ட உத்தரவு!

அன்று தொடங்கிற்று அவர்களுடைய நற்காலம். கொட்டகையினுள் பிரவேசிக்க டிக்கெட்டுகள் என்றால் அதற்கு லாட்டரிப் பரிசு. உள்ளே நடக்கும் களியாட்டங்கள், சூதாட்டம், நடனம், டிராமாக்கள் இவை ஒவ்வொன்றிலும் அதிர்ஷ்டப் பரிசு. இந்த ஏற்பாட்டில் ஒரே மாதத்தில் யுத்த நிதிக்கு நன்கொடை யளித்த லக்ஷ ரூபாயும், அவர் கைக்குத் திரும்பி வந்தது அதிசயமில்லை.

இனி அவர்கள் ஏன்—ப்பூரை விட்டுக் கிளம்புவார்கள்? 'நிரந்தரமாக' 'பூர்ண சுதந்திரத்துடன்' ஏழைகளின் பணத்தைக் கொள்ளையடித்துக் கொண்டிருந்தார்கள்.

பாவம், ஆலைத் தொழிலாளிகளின் பாடு மிக்க கஷ்டமாகிவிட்டது. அதிலும், இது காறும் கள்ளுக்கடைக்குச் செல்லாமல் தங்கள் புருஷன்மாரைக் காப்பதே பெருங் காரியமாக நினைத்த பெண்களுக்கு, இப்பொழுதோ இந்தப் பாழும் லாட்டரிப் பரிசின் மோஹத்திலிருந்து அவர்களை மீட்பது தர்ம சங்கடமாகிவிட்டது.

600 008

கூலி போடும் சனிக்கிழமைகளில், அங்கே பெரியதொரு சண்டை நடக்கும். ஆனால் அந்தச் சனிக்கிழமைகளில் அல்லவா பாரிஸ் கார்னிவலில் விசேஷ அதிகப்படி பிரேஸ்கள் ஏற்படுத்தி யிருந்தார்கள்? பெண்களின் வார்த்தைக்கிணங்கி எந்தப் புருஷனும் தன்னுடைய அதிர்ஷ்டத்தை அன்று சூதாட்டத்தில் சோதிக்காமல் விட்டதேயில்லை.

தொழிலாளர் பாதுகாப்புச் சங்கம் இதில் தலையிட்டு, அவ்வூர்ப் பெரிய மனிதர் சிலரின் கை ஒப்பம் வாங்கி, ஊரை விட்டு இந்தக் காட்சி துரத்தப்படாவிட்டால் மக்களுக்குப் பெரும் கெடுதி விளையுமென்று, பணிவுடன், ஒரு மனுவை எழுதி அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தார்கள். ஆனால், நமது காருண்ய சர்க்காருக்கு, இந்த யுத்த நெருக்கடி சமயத்தில், இம்மாதிரி சில்லறை விஷயங்களை யெல்லாம் கவனிக்கப் பொழுதா இருந்தது?

* * *

அழகப்பன் நேரான நடத்தையுள்ளவன் என்று இதுவரையில் பெயரெடுத்தான். ஆனால் அவன்கூட, தொடக்கத்தில் தன் ஒரு மாதத்திய வரும்படியை, இன்று இல்லாவிட்டால் நாளைக்கு நமது அதிர்ஷ்டம் நிச்சயம் திரும்பிவிடும் என்கிற நம்பிக்கையில், பாரிஸ் கார்னிவலுக்கு அர்ப்பணம் செய்தான் என்றால் பாருங்களேன். அதற்குமேல் கன்னியம்மாவா பொறுத்துக் கொண்டிருப்பவள்? இந்த ஒரு மாதமும் வயிறு வாடாமல் அவர்கள் சாப்பிடுவதற்கு எவ்வளவு கஷ்டப்பட வேண்டி யிருந்ததென்று அவளுக்கல்லவா தெரியும்? ரேஷன் அரிசியை வாங்க மீதம் பிடித்த காசுதான் லாட்டரிக்கு அர்ப்பணம் செய்யப்பட்டதே.

அவளால் இதைச் சகிக்க முடியவில்லை. ஓர் இரவெல்லாம் தன் அருமை அத்தானின் கழுத்தைக் கட்டிக்கொண்டு அவள் புலம்பிய புலம்பலில் மனம் கலங்கிப் போன அவனும் இனிமேல் அந்தப் பக்கமே எட்டிப் பார்ப்பதில்லை என்று தங்கள் தெய்வம் பாலையம்மாவின் மீது ஆணையாக, மனைவிக்குக் கையடித்துக் கொடுத்தான்.



விமானமூலம் பிரிட்டிஷ் கவர்மெண்டின் அழைப்பிற்கிணங்க, பண்டித நேருவும், ஸர்தார் பல்தேவ் சிங்கும் இங்கிலாந்து வந்து சேர்ந்தபொழுது மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது. ஸெகரட்டரி ஆப் ஸ்டேட் லார்ட் பெதிக்லாரன்ஸ் அவர்கள் வரவேற்க வந்திருந்தார். போலீஸார் விமான நிலயத்தில் கூட்டத்தைச் சமாளிக்க முயலுகின்றனர்.



ஐக்கிய நாடுகளின் கூட்டத்திற்கு இந்திய கோஷ்டியின் தலைவியாகச் சென்றிருந்த விஜயலக்ஷ்மி பண்டிட் நியூ யார்க்கில் தமது கையெழுத்தை அன்பர்களுக்கு அளிக்கிறார்.

அதே பிரகாரம் அழகப்பன் இன்று வரையிலும் நடந்துகொண்டான். தன் மகன் முத்துவும் அங்கே செல்லக்கூடா தென்று கண்டிப்பாக உத்தரவிட்டான்.

முத்துவுக்கு அப்பொழுது பதினன்கு வயது. தன் தகப்பனுடன் ஆலையில் அவனும் வேலை செய்துகொண்டிருந்தான். சாதாரண குடியான ஜனங்கள் வீட்டுப் பிள்ளையைப்போல் இல்லாமல் முத்து நல்ல களையாக இருப்பான். தலை நிறையச் சுருண்ட மயிர் நெற்றியிலும் கழுத்திலும் புரளும். நல்ல புத்திசாலி.

அன்று தகப்பனரின் ஆக்ஞைக்குக் கட்டுப்பட்டு அவனும் காட்சிக்குச் செல்வதை நிறுத்திக்கொண்டான்; என்ருலும் ஏதோ ஏக்கம் பிடித்த மாதிரி ஆகிவிட்டான். நாளடைவில் வியாதிக்காரனுய், அன்ன ஆகாரம் செல்லாமல் படுக்கையில் விழுந்தான்.

முத்து வேலைக்குச் செல்வதும் நின்றது. இதனல் குடும்பத்தின் வருவாய் குறைந்ததென்ருலும், கன்னியம்மாள் இதைப் பாராட்டவில்லை. மகன் உயிர்பிழைத்து எழுந்தால் போதுமென்று வைத்தியம் செய்தாள்.

மாதம் நான்கு சென்றது; என்ருலும் வியாதி இன்னதென்று ஒருவரும் திடமாய்ச் சொல்லவில்லை. பயந்தகோளாருக இருக்கலாமென்று ஒரு சாயபுவிடம் சென்று ரக்ஷை கட்டினள். தனக்குத்தெரிந்த பச்சிலை மூலிகைகளைக் கிஷாயம் வைத்துக் கொடுத்துப் பார்த்தாள், கன்னியம்மாள். ஒன்றும் பலனைத்தரவில்லை.

ஒரு நாள் ஆலைவைத்தியர் நாராயணய்யரை அழகப்பன் அழைத்து வந்தான். அவர் மாத்திரம் இந்தப் பையனுக்கு ஆலைப் பஞ்சின் தூசி உட்சென்று வயிற்றிலும், சுவாசப்பையிலும் ஆழ்ந்த ரணத்தை உண்டாக்கியிருக்கிறதென்று தெரிவித்து, தகுந்த மருந்தும் கொடுத்துச் சென்ருர். போகும் சமயம் கன்னியம்மாவைத் தனியே அழைத்து, இவனை ஆலைவேலைக்கு அனுப்ப வேண்டாமென்று எச்சரித்துச் சென்ருர்.

இரண்டு மாதங்கள் கடந்தன. முத்தையன் இனி பிழைத்துக்கொள்வான் என்கின்ற நம்பிக்கை அவன் தாயின் மனதில் பிறந்தது. ஒரு நாள் மாலை அவனும் அவளும் பேசிக் கொண்டிருந்தார்கள்,

"அம்மா, எனக்கு உடம்பு இனி ஒன்றுமில்லை. நாளைமுதல் நான் வேலைக்குப் போறேன்." என்ருன் முத்து.

"ஐயோ மகனே, கூடவே கூடாது. இனிமேல் நீ பள்ளிக்கூடம் போய்ப் படித்து நல்ல வேலைக்கு வரணும். பஞ்சாலை வேலை உனக்கு வேண்டவே வேண்டாம்." என்ருள் அவன் தாய்.

பேச்சு வாக்கிலே எப்படியோ அவள் மனதைத் திருப்பி அன்று ஒரு இரவு மாத்திரம் காட்சிக்குச் சென்றுவர உத்தரவு பெற்றுக்கொண்டான். பிள்ளையை உற்சாகமூட்டக் கன்னியம்மா அவன் கையில் நான்கு அணவைத் தந்து அனுப்பிவைத்தாள். அனர்த்தமும் விளைந்தது.

அன்றிரவு இரண்டு மணிக்கு அவன் வீடு திரும்பி வந்தபொழுது, ஏற்கனவே இந்தச் செய்தியைக்கேட்டு, கோபத்தோடு, இவனை எதிர்பார்த்து விழித்திருந்த அழகப்பன், முத்துவை முதுகுத் தோல் உரியும் வரையில் அடித்துப் போட்டான்.

வாயே திறவாமல் வலியைப் பொறுத்துக் கொண்ட முத்தையன் அன்று படுக்கையில் விழுந்தவன் மீண்டும் நோயாளி ஆனன். இந்தத் தடவை வியாதியின் கடுமை அவ்வளவு இல்லையென்ருலும், முத்துவின் முகத்தில் சிரிப்பைக் காண்பது அரிதாயிற்று.

விழித்திருப்பதும், தூங்குவதும் ஒன்றுபோலிருக்கும். கண்ணைத் திறந்தால் ஏக்கம் பிடித்து ஆகாயத்தைப் பார்த்துப்படுத்திருப்பான். இந்த நிலைமையில் தன் மகனைக் காணும் நேரம் கன்னியம்மாவுக்கு நெஞ்சை யள்ளிப் பிடுங்கும். அவனிடம் சிறிது சுறுசுறுப்புக் காண அவள் எடுத்துக்கொண்ட பிரயாசை யெல்லாம் வீணுயிற்று.

அவனுடைய சிறிய விருப்பத்திற்கும் அவள் தடை செய்வதில்லை. இப்போதெல்லாம் முத்தையனுக்குத் தேவை யென்பதே கிடையாது. பிரதி தினமும் இரவு ஒன்பது மணிக்குக் களியாட்டக் கொட்டகைக்குச் செல்வதில் மாத்திரம் ஒரு துடிப்பு இருந்தது.

தாயிடம் தனக்கிருந்த சலுகையை அவன் பயன்படுத்திக் கொண்டு, அவளுக்குத் தெரிந்தே போய்வர ஆரம்பித்தான். இந்த அலைச்சலினல், அவன் உடல் இன்னமும் வாட்டமுற்றது. கன்னியம்மா இதைக் கவனித்தாலும், வாய் திறக்கவில்லை; புருஷனிடமும் அவள் இப்பேச்சை எடுப்பதேயில்லை.

பிள்ளைக்கு அடிவாங்கி வைக்க எந்தத் தாய் விரும்புவாள்?

* * *

பாரிஸ் கார்னிவல் கம்பெனியில் அனேக சிறந்த நடிகர்கள் இருந்தார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் வெவ்வேறு தனிப் பயிற்சிகளில் தேர்ந்தவர்கள்.

கார்லா என்கிற ஒரு ருமேனியப் பெண் அச்சமயம் கம்பெனியில் இருந்தாள். அவளுக்கு வயது முப்பதுக்குள் இருக்கும். நல்ல இளமையோடு களை பொருந்திய முகம். கறுத்து அடர்ந்த கூந்தலைப் பின்னி முகத்திற்கு இருபுறமும் தோளில் தொங்கவிட்டிருப்பாள். அதுவே அவளுக்கு ஒரு தனி அழகைக் கொடுத்தது. சிரித்த முகமும் கூர்ந்து நோக்கும் கண்களையும் கொண்டவள்.

கம்பிமீது ஒய்யாரமாக நடனமாடுவது, ஐந்து பந்துகளைத் தவறவிடாமல் அம்மானையாடல், எரியும் வளையத்திற்புகுந்து வெளியில் தாவுவது—இம்மாதிரி செயல்களில் அவள் புகழடைந்திருந்தாள்.

தாமரைப்பூ நிறப் பட்டினால் உடலை ஒட்டிச் சல்லடம் தரித்துப் பளபளவென்று அவள் மேடைமீது தோன்றும் சமயம் முத்தையன் அவளை ஒரு தேவதையென்று நினைக்கலானான்.

நெருப்பு வளையத்திற்குள் அவள் நுழைந்தால், மீண்டும் அவள் வெளியில் தாவும் வரை, முத்தையனுக்கு உயிரே இராது. பந்துகளை அவள் ஆகாயத்தில் எறிந்து உல்லாசமாகத் தாவிப் பிடிப்பதைக் காணும் போதோ, தன் உள்ளத்தையும் அப் பந்துகளைப்போல் அவள் வீசி யெறிந்து விளையாடுகிருளென்று நினைத்துக்கொள்வான்.

முப்பது பிராயமுள்ள அவளை அவன் பதினைந்து வயது மங்கையென்று மதிப்பிட்டான். அவளது இரண்டு குழந்தைகளை அவன் சந்திக்கும்போதோ, அவளை உலகமாதாவென்றும் தானும் அவளுடைய செல்வப் பிள்ளையென்றும் கனவு காண்பான்; வாஸ்தவமாக, அச்சமயம் அவன் மனதில், அவள்பால் ஒரு பிள்ளையின் அன்பு பெருகும்.

இவ்விதம் முத்தையன் அந்த ருமேனியப் பெண்ணைத் தன் தெய்வமென்றும், தாயென்


# நான்கோ பிரிண்ட் இங்கி

●

இந்தியா, சென்னை, பீஹார், மைசூர், திருவாங்கூர் சர்க்கார்களாலும், சென்னையிலும், வெளியூர்களிலும் உள்ள பிரிண்டர்களாலும் மிகவும் உபயோகிக்கப்படுகிறது.

●

அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதவும்:

## S. நாராயணன் & கம்பெனி,

1. கிண்டி ரோடு, அடையாறு, சென்னை.

றும், அருமைக் காதலி யென்றும் மாறி மாறிப் பாவித்து, இன்பக் கனவுகள் கண்டு மனது உருகினான். இதனால் அவனது மெலிந்த உள்ளம் பட்டபாடு விவரிக்க இயலாதது.

பதினான்கே வயது நிரம்பிய பிள்ளை, இம்மனோ வெழுச்சிகளை யாரிடம் சொல்லிக் கொள்வான்?

அவனிடம் மனம் விட்டுப் பழகியவர் இதுவரையில் அவன் தாயைத் தவிர வேறொருவருமில்லை. பிள்ளையின் மனதை வருத்திய விஷயம் என்னவா யிருக்கலாமென்று கன்னியம்மாவின் மூளைக்கு எட்டவேயில்லை. அவனும் சொல்லவில்லை. ஒருவேளை சொல்லி யிருந்தாலும், இவ்வளவு நுட்பமான சங்கதியை ஆராய்ந்து அறியக்கூடிய சக்தி அவளுக்கு இருந்ததா வென்பதும் சந்தேகமே.

ஒருநாள் அவன் தோழன் கந்தனிடம் இதைப் பிரஸ்தாபித்து அவன் என்ன சொல்கிறானென்று கவனித்தான். கந்தன் ஒரே ஒரு நாள் காட்சிக்குச் சென்றிருந்தான். கார்லாவை அவனுக்குச் சரியாக நினைத்துப் பார்க்கவும் முடியவில்லை, இப்பொழுது.

எனவே அவளைத் தன் தோழனுக்குக் காண்பிக்கும் சாக்கில் அன்றிரவு அவர்களிருவருமாய் இரவு $8\frac{1}{2}$ மணிக்குக் கொட்டகை வாயிலுக்குச் சென்று காத்திருந்தார்கள்.

உள்ளே பிரவேசிக்கலாமென்றாலோ கையில் காசு கிடையாது! எப்படியும், தன்னுடைய விடுதியிலிருந்து இரவு ஆட்டத்திற்கு வருபவள் இந்த வாயில் மூலமாகத்தானே உள்ளே பிரவேசிக்கவேண்டும்? பொறுமையுடன் காத்திருந்தால் போச்சு என்று முத்து எண்ணிக்கொண்டான்.

அவன் நினைத்தபடியே நிகழ்ந்தது. சரியாக ஒன்பதரை மணிக்குக் கார்லா நடந்து வந்தாள். தன் இஷ்ட தெய்வத்தைப் பிரத்யக்ஷமாக எதிரில் கண்டதுபோல் முத்துவுக்கு மெய் சிலிர்த்தது. செய்வது இன்னதென்று தெரியவில்லை. கண்கள் ஆனந்தக் கண்ணீரை வடித்தன.

தன் தோழன் அருகிலிருப்பதை மறந்தான். கார்லா இவர்களைக் கடந்து செல்லும்போது, உணர்ச்சி வேகத்தில் தன்னையே மறந்தவனாய், இரு கைகளையும் இந்த ஏழைப் பையன் அவள் பக்கம் நீட்டினான்.

அவள் இதைக் கவனித்ததும் அப்படியே நின்று இவனை உற்று நோக்கினாள். முத்துவின் முகத்தில் அவள் கண்டது என்னவென்று எனக்குத் தெரியாது. சொல்லற்கரிய ஓர் அற்புத உணர்ச்சியை அவன் முகம் பிரதிபலித்திருக்கக்கூடும்.

ஏனென்றால், "பாவம் பையா" என்ற சொல்லுடன் கார்லா அவனை யணுகி, தன் மேன்மையான கரங்களால் அவன் மெலிந்த கையைப் பற்றி அதில் ஒரு வெள்ளி நாலணாவை வைத்து மூடி, ஒரு புன்னகையுடன் நடந்து சென்றாள்.



இதெல்லாம் ஒரே விநாடியில் நடந்தது. கந்தன் வாயைப் பிளந்துகொண்டு இவர்களையே மாறிமாறி நோக்கி விழித்தான். பிறகு, "அடே முத்து. நீ அதிர்ஷ்டக்காரப் பயலடா, அவளை உனக்கு எப்படியடா தெரியும்? ஏண்டா முழிக்கிறே? வாடா, அந்த நாலணாவுக்கு, டிக்கெட் வாங்கி உள்ளே நுழைவோம்." என்று முத்துவின் கையைப் பிடித்து இழுத்தான்.

சுய அறிவை மீண்டும் பெற்ற முத்தையன் கந்தனின் பிடிப்பை உதறித் தள்ளிவிட்டு ஓட்டமாய் ஓடித் தன்வீட்டை யடைந்தான். அன்றிரவு முழுவதும் அவன் இமைகள் தூக்கத்தில் மூடவேயில்லை. இன்பக் கனவு கண்டு கொண்டிருந்தான்.

* * *

அன்றுமுதல் முத்துவின் மனத்தில் பெரியதொரு புயலடிக்க ஆரம்பித்தது. கார்லா

வைத்தான் காதலிப்பது நிச்சயமென்றுஅவனுக்குத் தோன்றிற்று. அவளும் தன்பேரில் உள்ளன்பு கொண்டிருந்தாள் என்பதில் அவனுக்குச் சந்தேகமே யிருக்கவில்லை. அதற்கு அத்தாட்சியாகத்தான் அன்று நிகழ்ந்த சம்பவம் இருந்ததே? அவளின் அன்பு அடையாளத்தையே அவள் பத்திரமாகப் பையில் வைத்திருந்தானே.

தன் அதிர்ஷ்டத்தை நினைத்து ஆனந்தித்தான். அந்த நான்கு அணு நாணயத்தைக் காலையில் கண் விழித்ததும் எடுத்துப் பார்த்துக் கண்ணில் ஒற்றிக்கொள்வான்.

தினமும் அவளை ஒரு முறை கண்ணால் காணுவது அவனுக்கு அவசியமாயிற்று. கொட்டகை வாயிலில் இரவு 9 மணிக்குப் போய் நிற்கத் தவறியதில்லை.

அவளும் அதே வழி வருவாள். ஆனால் அதன் பிறகு ஒருநாளும் அவள் முத்துவைக் கவனிக்கவே யில்லை. நேரே பார்த்த வண்ணம் அவனைக் கடந்து சென்றுவிடுவாள்.

முத்துவுக்கு முகம் சுண்டிப் போகும். தான் எண்ணியபடி அவள் தன்பேரில் அன்பாக இல்லையோ வென்கிற சந்தேகம் மனதைப் புண்ணாக்கிற்று.

ஆனால் எவ்வளவு அன்பு இருந்தாலும், பலர் முன்னிலையில் அதைக் காண்பித்துக் கொள்ள வெட்கமாக இராதா என்று எண்ணித் தன் மனதைத் தேற்றிக்கொள்வான்.

சில நாட்களில் அவளை ஒருமுறை கண்டதில் திருப்தி கொள்ளாமல், ஆட்டம் முடிந்து இரவு மூன்று மணிக்கு அவள் அவ்வழியே திரும்பிச் செல்லும்வரை காத்திருந்து, மீண்டும் அவளைத் தரிசித்த பிறகு வீடு திரும்புவான். நாளடைவில் இதைத்தினசரிப்பழக்கமாக்கிக் கொண்டான்.

பனியிலும் மழையிலும் நின்றதினால், சரீரம் அரை உடம்பாயிற்று. உள்ளமும் வேதனைப்பட்டு உருகிற்று.

* * *

இதெல்லாம் உண்மை நிகழ்ச்சிகள் அல்லவென்று யாரும் நினைக்கலாம். ஆனால் இந்த விசித்ர நாடகம் நடந்ததைக் கவனித்த பலர் இப்பொழுதும் இருக்கிறார்கள்.

முத்து நல்ல படிப்பாளியாக இருந்திருந்தால், தன் உணர்ச்சிகளைப் பக்கம் பக்கமாக எழுதித் தள்ளியிருப்பான். பாவம் அவனுடைய கல்வி யறிவெல்லாம் ஆலையைச் சேர்ந்த இராப் பள்ளிக்கூடத்தில் எண்ணெழுத்துக்களைக் கற்றதுடன் முடிவுற்றது.

குளிர் காலத்தின் மத்திய பாகத்தில் ஒரு நாள் முத்துவைக் காண அவன் தோழன் கந்தன் வந்திருந்தான்.

பேச்சுக்கிடையில், "கேட்டியா முத்து? நாளையோடு "சோ" கொட்டகை வேறே ஊருக்குப் போகுதாம். இன்றுதான் கடைசி ஆட்டமாம்." என்ற செய்தியைப் பதறாமல் சொன்னான்.

முத்துவுக்கு இதைக்கேட்ட அதிர்ச்சியைத் தாங்க முடியவில்லை. "நிசமாகவா" என்ற சொல் அவன் வாயினின்று பிறந்தது. பிறகு கல்லாய்ச் சமைந்துபோனான். கந்தன் சிறிது நேரம் நின்று பார்த்துவிட்டு மெள்ள அவ்விடத்தைவிட்டு நழுவினான்.

பாவம், முத்துவின் வேதனையை யாரால் வருணிக்க முடியும்? கார்லா இவ்வூரைவிட்டுப் போய்விட்டால், அவளைத்தினமும் காண்பது எப்படி? அவளைப் பாராமலும் உயிர் வாழ இயலுமா? இதை எண்ணும்போதே, களுக்கென்று கண்களில் நீர் துளிர்த்தது.

தன் மனதை அவளுக்குச் சொல்லாமலேயா அவளை யிழந்து விடுவது? முடியவே முடியாது.

இன்று அவளைப் பார்த்து, எவ்விதத்திலும் அவளோடு பேசித் தன் உள்ளத்தைத் திறந்து காட்டவேண்டும்; தன் காதலை அவள் அங்கிகரிப்பது நிச்சயம். மறுநாள் கம்பெனிக்காரருடன் தானும் ஊருக்குக் கிளம்பிவிடுவது என்று முத்து ஒரு முடிவிற்கு வந்தான்:

இந்த யோசனைக்குப்பிறகு சிறிது நிம்மதி ஏற்பட்டது. வழக்கம்போல் 9 மணிக்குக் கிளம்பினான். தன் தாயிடம் மாத்திரம் போய் விடை பெற்றுக்கொள்வோமா வென்கிற எண்ணத்தினால் ஒரு சிறிது தயங்கினான்.

ஆனால் உள்ளே யிருந்த தன் தகப்பன் இதைக்கேட்டால் முதுகுத்தோலை உரித்துப் போடுவாரே என்கிற பயமும் கூடவே எழுந்தது. சரி சரி, இதெல்லாம் யோசிக்க நேரமில்லை, இப்பொழுது. 'யாரும்' பார்க்கு முன்னர் கிளம்ப வேண்டும்.

என்ன பிரமாதம்? இன்னும் பத்து வருடங்கழித்து, கம்பெனி முதலாளியாக, தன் மனைவி கார்லாவுடன் இங்கே வரும்போது ஐயாவும், அம்மாவும் சந்தோஷிக்கமாட்டார்களா? அவர்கள் கோபம் அப்பொழுது பறந்து போய்விடாது? என்று மனதைத் திருப்தி செய்துகொண்டான்.

அவன் புறப்பட்ட சமயம் மழை "சோ" வென்று பெய்தது. அம்மம்மா! அந்தப் பொல்லாத இரவை நினைத்தாலும் பயமாக இருக்கிறது. பெரிய பெரிய மரங்களெல்லாம் காற்றின் வேகத்தினால் அடியோடு சாய்ந்தன.

கொட்டகையில் மின்சார விளக்குக்கள் நின்றுபோயின. எல்லாப் பக்கமும், ஒரே கூக்குரலும், மழையின் பேரிரைச்சலும் நிறைந்தது.

மெல்ல மெல்ல நடந்து முத்தையன் கொட்டகையை அடைந்தபொழுது, தொப்பலாக நனைந்திருந்தான். குளிர்காற்று மேலே வீசியதும். உடல் வெடவெடவென்று நடுங்கிற்று.

என்ன செய்வதென்று தெரியாமல் சற்று யோசனை செய்தான். காட்சி ஆரம்பமாக இன்னும் அரைமணி இருந்தது. விளக்குக்கள் அதற்குள் பொருத்தப்படுமென்று காவற்காரன் தெரிவித்தான்.

எப்படியாவது இன்று தன்னை உள்ளே செல்ல அனுமதிக்கும்படி முத்து ஒரு நிமிஷம் அவனைக் கெஞ்சினான். மழையில் நனைந்ததால் அவனுக்கு நல்ல காய்ச்சலடித்தது. கால்கள் சோர்ந்து போயின; நிற்க முடியவில்லை.

பாராக்காரன் முத்துவைக் கேலிசெய்ய ஆரம்பித்தான். "போ பையா! காசில்லாமல் உள்ளே விட நீ என்ன என் மவனா? நாலணா இருந்தால் எடு, இல்லாட்டி, நல்லவனா லட்சணமா வூட்டைப் பார்க்க நட, ஏன் இந்த மழையிலே அவதிப்படறே?" என்றான்.

இதைக் கேட்க முத்துவுக்குப் பொல்லாத கோபம் வந்தது. கார்லாவின் நாலணாவை அவன் கைக்குள் கெட்டியாகப் பிடித்திருந்தான்; அதை இவன் முகத்தில் வீசி எறிந்துவிட்டு உள்ளே போனால், மழைக்காவது தப்பலாமே என்று ஒரு வினாடி நினைத்தான்.

ஆனால் உடனேயே, "ஐயோ, இந்த அன்பு அடையாளத்தையும் விட்டுப் பிரிய எனக்குப்புத்தி தோன்றிற்றே! உயிர்போனாலும் இதை எவர்க்கும் கொடேன்!" என்று தனக்குத் தானே மனதிற்குள் சொல்லிக் கொண்டான்.

மாதவிடாய் நின்றுபோன மாதவிடாய்
கவலைவேண்டாம் ஸ்திரீகளின் துயரத்தைப் போக்க
தேவி பில்ஸ்



எங்களுடைய (Devi Pills) உபயோகித்தால் அதிக சுலபமாகவும் அதிசீக்கிரமாகவும் எக்காரணத்தாலும் நின்றுவிட்ட மாதவிடாயைச் சரியாக்கும். உதர சம்பந்தமான வியாதிகளுக்கு உயர்ந்த ஒளஷதம், நம்பத்தகுந்தது, அபாயமில்லாதது. வெளிநாடுகளிலும், இந்தியாவிலும் ஏராளமான ஸ்திரீகள் குணமடைந்து இருக்கிறார்கள். சிறந்த அனுபவத்தின்பேரில் விஞ்ஞான முறைப்படி தயாரிக்கப்பட்டது

சாதாரண கேஸ்களுக்கு ரூ. 6—0—0 நாள்பட்ட கோளாறுகளுக்கு ரூ. 7—8—0
(தபால் செலவு பிரத்தியேகம்)

SEENU & Co.,
325, MINT STREET, MADRAS.
எங்கும் ஸ்டாக்கிஸ்டுகள் தேவை

சிலோன் சோல் ஏஜண்ட்ஸ்:—
சிவானந்தா சித்தர் மெடிகல் ஹால்
92, கடல்தெரு. — கொழும்பு

சகிக்க முடியாத உடல் வேதனையும் மனோ வேதனையுமுண்டாயிற்று. அம்மா வென்று ஒரு கூச்சல் போட்டான்.

முத்தையனுக்கு வேறொன்றும் நினைவில்லை. பாவம், மயக்கமுற்றுச் சுருண்டு போய் அங்கேயே கீழே விழுந்துவிட்டான்.

*   *   *

பாரிஸ் கார்னிவல்—ப்பூரை விட்டுக் கிளம்பி அடுத்த பட்டணத்தில் அமர்க்களமான ஆரம்ப விழாக்கள் நடத்திற்று.—ப்பூருக்கு அவர்கள் வந்தவேலை பூர்த்தியாகி விட்டதுபோலும். ஏழை முத்தையனின் உயிரும் அதற்குப் பலியாயிற்று. ஆறு மாதத்தில்,—ப்பூரில் அவர்களுடைய மொத்த வரும்படி நான்கு லக்ஷ ரூபாய்.

கார்லா? அவளுடைய செய்தி ஒன்றும் நமக்குத் தெரியாது. முத்தையனின் இளம் உள்ளத்தில் பெரும் புண்ணை உண்டாக்கிய குற்றம் அவளைச் சாருமா? அப்படிச் சொல்லிவிட முடியாது. ஆனால் ஒன்று நிச்சயம். அவள் எங்கே யிருந்தாலும் முத்துவின் ஆவி ஸதா காலமும் அவளைச் சூழ்ந்து நிற்கும் என்பதில் சந்தேகமில்லை.

முத்துவின் கடைசி நிமிடங்களைப்பற்றிச் சில செய்திகள் சொன்னால்தான் உங்களுக்குத் திருப்தியாக இருக்கும். ஸ்மரணையற்ற அவன் உடல் குடிசைக்குக் கொண்டுவரப் பட்டது.

மூன்று நாட்கள் பேத்தலும் பிதற்றலும் ஆகப் புரண்டான். தாயும் தகப்பனும் அருகிலிருந்து வேண்டிய சிகிச்சை செய்தார்கள். பயனில்லை. ஜன்னி கண்ட பிறகு மீள்வதும் உண்டா?

மூன்றாம்நாட் காலை ஒரு நிமிடம் தெளிந்த பார்வையுடன் அன்னையை நோக்கினான். கன்னியம்மா ஆவலுடன் தன் காதை அவன் முகத்தருகில் கொண்டுபோனாள்.

உதடுகள் அசைந்தன. ஆனால் சப்தம் வெளிக்கிளம்பவில்லை. தாயைப் பார்த்துப் புன்னகை புரிந்தபடியே முத்து சோர்ந்து போன தன் வலது கையைத் திறந்தான்.

அதில் அவள் கண்டது ஒரு வெள்ளி நாலணா! ஆச்சர்யம் மேலிட முத்துவைக் கவனித்தாள்.

அவன் கையும் கண்களும் மூடிக்கொண்டன. மெதுவாய். மீண்டும் முத்துவின் கண்கள் திறந்து, இவ்வுலகைப் பார்க்கவில்லை.

கன்னியம்மாவின் தாயுள்ளம் தேற்றுவாரின்றிப் பரிதவித்தது, 'என் ராசாவே'' என்று அவள் நீண்ட புலம்பலை ஆரம்பித்தாள், அழகப்பனால் அதைக்கேட்டுச் சகிக்க முடியவில்லை.

''ஏ குட்டி—அழுவாதே—அழுதா முத்து இனி வரவா போறான்?'' என்றான் கம்பிய குரலில்.

வாஸ்தவம்தான், முத்து இனி உயிருடன் வரவா போகிறான்?

*   *   *

# விஞ்ஞானத்திலே - - - - புரட்சி செய்த வீரர்

நா. கி. நாகராசன்

பதினேழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் புரூனோ (Bruno) என்னும் கிறிஸ்தவப் பாதிரியா ரொருவர் சமயப் புரட்சி செய்த குற்றத்திற்காகக் கொடிய மரணதண்டனையை யடைந்தார். அவர் செய்த குற்றம், அதுவரை கருதி வந்தது போல் புவியைக் கதிரவனும், மற்றக் கோள்களும் சுற்றி வருவதில்லை யென்றும், பகலவனையே மையமாகக்கொண்டு புவியும், கோள்களும் சுற்றுகின்றன என்னும் புதுக் கொள்கையே சரியானதென்றும் அவர் எங்கெங்கும் கூறி வந்ததுதான். அவர் இறக்குந் தறுவாயிலும் உண்மையையன்றிப் பிறிதொன்றைக் கூற மறுத்தார். உலக வரலாற்றில் இத்தகைய சம்பவங்கள் எவ்வளவோ நடந்துள்ளன. கடவுள் வாக்கென அதுவரை நம்பி, மக்களது மனத்தோடு ஒட்டியுள்ள கொள்கைகளுக்கு எதிராகப் போராடும் விஞ்ஞானிகளின் வேலை மிகக் கடினமானது.

உலக அறிஞரில் முதலிடம் பெறும் ஆல்பர்ட்டு ஐன்ஸ்டீன் மட்டும் சில நூற்றாண்டுகளுக்கு முன்னர்ப்பிறந்து, தம் சார்புக் கொள்கை (Relativity Theory)யை உலகுக்கு ஈந்திருப்பாராயின்; புரூனோ, கலிலியோ முதலியோரின் கதியையே அடைந்திருப்பார் என்பது திண்ணம். ஏனெனில் சர் ஆர்தர் எட்டிங்டன் (Sir Arthur Eddfngton) கூறுவதுபோல் "பூதநூற் கருத்துக்களில் ஐன்ஸ்டீன் தம் கொள்கையினால் ஒரு புரட்சியை யுண்டுபண்ணிவிட்டார்." அறிவியற் கடலின் கரையையே கண்டுவிட்டோம் என இறுமாந்திருந்த சென்ற நூற்றாண்டைய விஞ்ஞானிகளுக்கு, "கற்றது கைம்மண்ணளவு கல்லாதது உலகளவு" என்ற பொன்மொழியின் உண்மையை உணர்வித்து, அதுவரை வழங்கிவந்த பல கருத்துக்களின் தவற்றை எடுத்துக் காட்டியது ஐன்ஸ்டீனின் கொள்கை. சிக்கலான கணிதநூல் முறைகளாலல்லது இவரது கொள்கை எளிதில் விளங்காது.

நின்றிருக்கும் ஒரு ரயில்வண்டியில் நாம் இருந்தால், சிலசமயம் அருகே இன்னொரு வண்டி நகரும்போது நம் வண்டிதான் நகருகிறதோ என்னும் ஐயம் நமக்குத் தோன்றாமலிருப்பதில்லை. ஆனால் வண்டிக்கு வெளியே நிற்கும் ஒருவருக்கு நகரும் வண்டி எது என்பது எளிதில் விளங்கும். அவர் வண்டியின் வேகத்தைக்கூடக் கணக்கிட்டுவிடலாம். ஆகையால் அசையாமலுள்ள ஓரிடத்திலிருந்தே ஒரு பொருளின் வேகத்தைக் கணக்கிடல் இயலும். ஆனால் அண்டத்திலுள்ள எல்லாப் பொருள்களும் எப்போதும் ஓடியவண்ணமாகவே உள்ளன. ஆகையால் அண்டத்தில் பொருள்களின் தனி வேகத்தை அறிய முடியாது. அவற்றின் சார்பு வேகத்தையே அறியலாம் என்பது தெளிவு. இதுவே ஐன்ஸ்டீனின் கொள்கையில் முதற்படி.

அண்டத்திலே நெடுந்தூரங்களிலுள்ள விண்மீன்களிலிருந்தும் ஒளி நம்மை வந்தடைகின்றது. அது அலைவடிவு கொண்டது. தண்ணீரில் அலைகள் வருவதுபோல் வான வெளியிலும் ஒளியலைகள் விசும்பு (Ether) என்ற இடவெளியில் தவழ்ந்து வருகின்றன என்று விஞ்ஞானிகள் எண்ணி வந்தனர். நம்மை எங்கெங்கும் காற்றுச் சூழ்ந்துள்ளதுபோல், விசும்பும் அண்டமெங்கும் பரவியுள்ளது. ஆகையால் காற்றில் நாம் வேகமாகச் சென்றால் நமக்கு எதிராகக் காற்று வீசுவதுபோல், வான வெளியில், புவி விநாடிக்குப் பதினெட்டு மைல்வீதம் தன் பாதையில் செல்லும்போது, எதிரான 'விசும்புக்காற்று' அடித்தே தீரவேண்டும். அதனால் புவிசெல்லும் திசையில் ஒளியின் வேகம் மாறும். இவ்வாறு எண்ணிய மிக்கல்ஸன் (Michelson) என்னும் விஞ்ஞானி ஒரு நுண்ணிய கருவியில் புவி செல்லும் திசையிலும், அதற்கு நேர் குறுக்காகவும் இரு ஒளிக்கதிர்களை யனுப்பி, அவை ஒரே தூரத்தையடைய வெவ்வேறு நேரங்கள் பிடிக்கின்றனவா எனச் சோதித்தார். நீரோட்டத்திற்கு எதிராகவும் அதன் குறுக்கேயும் ஒருவன் சமதூரம் நீந்திச் செல்ல வெவ்வேறு நேரங்கள் செல்லுமல்லவா? அதேபோல் ஒளிக் கதிர்களும் ஒரே தூரத்தைக் கடக்க வெவ்வேறு




## 1947 வாழ்த்துக்கள்

"மனிதனில் சிறந்ததெலாம் நீடூழி வாழ்க" வெனும் மங்கள ஆசிகளுடன், நாம் பழைய ஆண்டைச் செல்ல விடுத்து, புதியதை மகிழ்ச்சியுடன் வரவேற்போமாக! சமாதானமும், செழிப்பும், சந்தோஷமும் 1947-க்கு நற்செய்தியாக விளங்குக!

**தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமிடெட்**

காலங்கள் பிடிக்கின்றனவா என அவர் அறிய விரும்பினர். ஆனல் நுணுக்கம் மிகுந்த அவர் கருவியில் இரு திசைகளிலும் ஒளி ஒரே சமயத்தில் குறிப்பிட்ட ஒரு தூரத்தை யடைந்தது கண்டார். ஆகையால் விசும்பில் ஒரு பொருள் செல்வதால் அது பொருளிலிருந்து செல்லும் ஒளியைப் பாதிப்பதில்லை என்பது தெளிவாயிற்று. ஒளி யலைகள் செல்லவெனவே விஞ்ஞானிகளால் ஆக்கப்பட்ட விசும்புக் கொள்கைக்கு இது சாவுமணி அடித்துவிட்டது.

ஆனல் இச் சோதனையின் முடிவை பிட்ஸரால்டு(Fitzerald)என்னும் விஞ்ஞானி, நூதன முறையில் விளக்கினர். ஒரு பொருள் செல்லும் திசைக்கு எதிரே அதன் நீளம் சிறிது குறுகிவிடு மென்றும், மிக்கல்ஸனின் கருவியும் புவி செல்லும் திசையில் குறுகி விட்டதால்தான் ஒளிக்கதிர்கள் ஒரே காலத்தில் குறிப்பிட்ட இடங்களை யடைந்தன என்றும் அவர் முடிவுகட்டினர். ஆனல் கருவி குறுகியதை மிக்கல்ஸன் அளவிகளைக் கொண்டு அறிய இயலுமோவெனில் அது தான் இல்லை. ஏனெனில் புவியின் திசைக்கு எதிரேவைக்கப்படும் அளவியும் அதே அளவுக்குக் குறுகும். இவ்வினைவை பிட்ஸரால்டு சுருக்கம் என்பர். இதனல் ஒரு பொருளின் நீளம் அதன் வேகத்தைப் பொறுத்துள்ளது தெளிவாயிற்று. இதுவே ஐன்ஸ்டீனின் கொள்கையில் இரண்டாம்படி.

இதன் பயனைச் சிறிது ஆராய்ந்தால் நம்பத் தகாத விந்தைகள் புலப்படும். புவிக்கு வெகு உயரத்தில் விநாடிக்கு 50,000 மைல் வேகத்தில் ஒருவன் பறந்து செல்வதாகக் கொள்வோம். அவன் இப்போது உலகத்தை நோக்கின் தான் செல்லும் திசைக்குக் குறுக்கே அது குறுகியும், அவன் செல்லும் திசையில் நீண்டும் முட்டை போன்று காணப்படும். அவன் சென்னை நகரின்மேல் பறந்து வந்து, தொலைக்கண்ணாடி கொண்டு சைனபஜார் வீதியை நோக்கின், திகைத்து விடுவான். ஏனெனில் வீதிக்கு நேரே அவன் பறந்தால் அத்திசையில் வீதியில் செல்லும் டிராம் வண்டிகள் நீண்டு ரயில் வண்டிகளைப்போல் காணப்படும். அதில் நடக்கும் மனிதர்களோ நீண்டகைகால்களைக் கொண்டு சப்பையாய் இரப்பர் பொம்மைகளைப் போல் தோன்றுவர். சைனபஜாரின் குறுக்கே யுள்ள பிராட்வேயை நோக்கின் அதில் செல்லும் டிராம் நீளம் குறுகி, வெகு அகலமாகக்காணப்படும். அதில் நடக்கும் மானிடர் சப்பையாகவும், அகலமாகவும் பலகைகளைப் போல் தோன்றுவர். ஆகையால் நீளம், அகலம், உயரம் என்னும் அளவுகள், அளப்போனது வேகத்தைப் பொறுத்துள்ளன என்பது தெளிவு. ஆகையால் இவ்வளவுகள் காலத்துடன் சார்புடையவை என ஐன்ஸ்டீன் கூறினர்.

இதேபோல் காலத்தை அளத்தலிலும் பிழையேற்படலாம் என்னும் அவர் கொள்கையைப் புரிந்துகொள்ளுதல் அவ்வளவு எளிதல்ல. நாம் காலத்தை அளப்பது புவியின் சுழற்சியைக்கொண்டே. புவி ஒரு முறை தன்னைத்தானே சுற்றினல் அதை நாம் ஒரு நாள் என்கிறோம். ஆனல் இக் காலம் புவியின் சுழற்சி வேகத்தைப் பொறுத்துள்ளதே ஆகவின், காலமும் வேகமும், அதனல் காலமும் தூரமும் சார்புடையன என்னும் உண்மை வெளியாகிறது. அதனல் காலத்தையும், இடவெளியையும் நாம் தனித்தனியே அளந்தறிதல் இயலாத செயல். அவ்விரண்டையும் சேர்த்துச் செய்யப்படும் அளவுகளே உண்மையானவை. இத்தகைய அளவுகள் இடவெளிக்கால அளவுகள் (Space-time measurements) எனப்படும்.

இவற்றைத் தவிர ஐன்ஸ்டீனின் கொள்கையால் இன்னெரு உண்மையும் தெளிவாயிற்று. அதாவது ஒரு பொருளின் வேகம் ஒளியின் வேகத்தைவிட அதிகமாயிருக்க முடியாது என்பது. (ஒளியின் வேகம் விநாடிக்கு 1,86,000 மைல்கள்.) இவ்வாறின்றி ஓரிடத்தில் ஒருவன் துப்பாக்கி கொண்டு சுட்டால், அதிலிருந்து வரும் குண்டு ஒளியின் வேகத்தைவிட விரைவாய் நம்மை நோக்கி வருவதாகக் கொள்வோம். அப்போது குண்டு சுடப்பட்டபோது அங்கிருந்து புறப்பட்ட ஒளி நம்மை யடையு முன்னரே குண்டு நம்மை வந்தடையும். ஆகையால் குண்டு சுடப்பட்டு அது நம்மை வந்தடைந்த பின்னரே நாம் குண்டு சுடப்படுவதைக் காண்போம். ஆகையால் நாம், குண்டு துப்பாக்கியை விட்டுக் கிளம்பு முன்னரே நம்மை வந்தடைந்த விந்தையைக் கண்டு திகைப்போம்! இது காரண—காரிய விதிக்கே முரணுய் இயற்கைக்கு விரோதமானது. ஆகையால் அண்டத்திலேயே மிக வேகமானது ஒளியே என்று தெளிவாகிறது. தவிர, வேகத்தினல் காலம் மாறுவதால்,ஒருவன் ஒளியின் வேகத்தில் சென்றுகொண்டே இருந்தால் அவன் காலக் கிழவனது சகடத்தையே நிறுத்தி விட்டவனுவான். ஆகையால் அவன் இளமையில் இத்தகைய பிரயாணம் செய்யப் புறப்பட்டால் எப்போதும் இளமை மாருத

வனாகவே வானத்தில் விரைந்தோடிக் கொண்டிருப்பான்!

விஞ்ஞானிகளின் கருத்துக்கள் என்னும் குதிரையைப் புத்தம் புதிய பாதைகளில் செலுத்தத் தூண்டிய ஐன்ஸ்டீனின் கொள்கையால் மாறுபாடுகள் அடையாத அறிவியல்துறையே இல்லை. பொதுவாய் வழங்கும் வடிவகணித (Geometry) விதிகள் யூக்லிட் (Euclid) என்னும் எகிப்திய அறிஞரால் கண்டு பிடிக்கப்பட்டன. அவர் புவியில் நிலங்கள் முதலியவற்றை அளவிடவே இவைகளை வகுத்தார். ஆனால் ஐன்ஸ்டீனின் கொள்கை இவ்விதிகளையே தலைகீழாக்கி விட்டது. ஏனெனில் அண்டத்திலுள்ள பொருள்களெல்லாம் பிட்ஸரால்டு சுருக்கத்திற்குட்பட்டன. நிலையான பொருள்களே அண்டத்தில் இல்லை. ஆகையால் அளவிடும் தூரங்களை அளப்போனது இயக்கம் மாற்றுவதையும் கணக்கெடுத்துப் பல வடிவ கணிதவிதிகளை இப்போது மாற்றியமைத்துள்ளனர். இத்தகைய புது விதிகளின்படி ஒரு முக்கோணத்தின் மூன்று கோணங்களின் கூட்டுத்தொகை எப்போதும் 180° ஆகாது! ஆயினும் சிறு அளவுகளைப்பொறுத்தமட்டில் அவை யூக்லிட்டின் விதியை யொட்டியே உள்ளன. (ஆகையால் இதைப் படிக்கும் பள்ளிச் சிறுவன் தன் வடிவகணிதப் புத்தகத்தைக் கடையில் பொட்டலங்கட்டக் கொடுத்துவிட்டு, மிட்டாய் வாங்கிச் சாப்பிட்டு விடலாம் என எண்ணிவிட வேண்டாம்!)

பூதநூலிலும், வானநூலிலும் நெடுநாளாக வேதவாக்கென மதிக்கப்பட்ட நியூட்டனின் கவர்ச்சி விதியை ஐன்ஸ்டனின் கொள்கை பெரிதும் மாற்றிவிட்டது. அண்டத்திலுள்ள ஒவ்வொரு பொருளும் மற்றப்பொருள்களைக் கவருகின்றது. இக் கவர்ச்சி பொருள்களின் நிறைகளையும், அவற்றிடையே யுள்ள தூரத்தையும் பொறுத்துள்ளது. இதுவே நியூட்டனின் கவர்ச்சி. ஆனால் பொருள்களின் நிறை அவற்றின் வேகத்தால் மாறும் என்பது ஐன்ஸ்டீனின் கொள்கையால் தெரியவந்தது. தூரமோ அளப்போனது வேகத்தைப் பொறுத்தது. இவ்விரு காரணங்களால் நியூட்டனின் விதி திருத்தமற்றதாய்விட்டது. இதுதவிர, கவர்ச்சியின் காரணமென்ன என்று இதுவரை புலப்படவில்லை. இக்குறைகளைத் தவிர்க்க ஐன்ஸ்டீன் தம் கொள்கையைப் பயன்படுத்தினார். ஓரிடத்தில் பொருளொன்றிருந்தால் இடவெளியானது அங்கே வளைந்திருக்குமெனவும். இடவெளியின் வளைவினால்தான் அவ்விடத்தில் பொருள் இருப்பதை நாம் அறிகிறோமென்றும் ஐன்ஸ்டீன் கூறினார். இடவெளியிலுள்ள மேடுகளையே இதுவரை கவர்ச்சி என நாம் (தவறாக) அழைத்து வந்ததாக அவர் முடிவுகட்டினார். இது எளிதில் விளங்காதுதான். ஆனால் ஒரு மேற்கோளினுதவியால் இதை விளக்க முயல்வோம். ஒரு சரிவில் குழந்தையொன்று கோலிகளை ஒவ்வொன்றாகக் கீழே உருட்டுவதாகக் கொள்வோம். அப்போது கீழே உருளும் கோலிகள் வழியில் உள்ள ஒரு மேட்டை அடைந்தால், நேரே செல்லாது அம்மேட்டைச் சுற்றி வளைந்தே செல்லும். ஆனால் இதைத் தொலைவிலிருந்து காணும் ஒருவன் வழியில் மேடிருப்பது தெரியாமல், ஒரு குறிப்பிட்ட இடத்தை அடைந்ததும், கோலிகள் ஒருவித கவர்ச்சிச் சத்தியினால் சுற்றிச் செல்கின்றன என எண்ணக்கூடுமன்றோ? இதைப்போல்தான் இடவெளியின் மேடுகளை நாம் கவர்ச்சியென அழைக்கிறோம்,

சமதளமான இடவெளி பொருள்களினருகே வளைந்திருந்தால், இடவெளியில் வரும் ஒளிக் கதிர்களும் அதைப்போன்றே வளைந்து திரவேண்டுமன்றோ? இத்தகைய வளைவு உள்ளது என்று சோதனையால் அறியப்பட்டது. கதிரவன் பிழம்பினருகே வரும் ஒளி வளைந்துள்ளதாயின் கதிரவனுக்குப் பின்புறமுள்ள விண்மீன்களையும் நாம் காண இயலும். ஆனால் பொதுவாய்ப் பகலவனது ஒளியில் விண்மீன்களை நாம் காணமுடியாது. ஆனால் முழு மறைவின்போது நாம் அதன் பின்புறத்தே விளிம்பிலுள்ள விண்மீன்களைக் காணலாம் என 1819-ஆம் ஆண்டில் ஸொப்ரால் (Sobral) என்ற இடத்தில் செய்த சோதனையில் வெளியாயிற்று, இது ஐன்ஸ்டீனின் கொள்கை அடைந்த வெற்றியில் முதலாவதாகும்.

செவ்வாய்க்கோளின் பாதையில் உள்ள சில சிறு மாறுதல்களை வான நூலோர் வெகு நாட்களாகவே அறிந்திருந்தும், அதை நியூட்டனின் விதியால் விளக்க இயலவில்லை. அது இதுவரை கண்டுபிடிக்கப்படாத ஒரு கோளினால் ஏற்படுகிறது எனப் பலர் முடிவுகட்டி, அதன் பாதையையும் கணக்கிட்டிருந்தனர். ஆனால் அத்தகைய கோள் வான வெளியில் தெரியவில்லை. ஆனால் ஐன்ஸ்டீனின் கொள்கை இதற்கான காரணத்தை விளக்கி, அது கோளின் பாதையில் இயற்கையாகவே ஏற்படும் மாறுதலே தவிர, வேறு கோள் ஒன்றினால் ஏற்படுவதன்று என்பதைத் தெளிவாக்கியது.

ஒளிக்கதிர் பொருள்களினருகே வளைவதிருந்து ஒளியும் நிறையுள்ளது என ஏற்படுகிறது. கதிரவனிடமிருந்து நாம் ஒரு நாளில் பெறும் ஒளியின் நிறை 160 டன்கள்! இதிலிருந்து அடுத்தபடியாக ஐன்ஸ்டீன் பொருளும், ஒளிபோன்ற ஆற்றலும் ஒன்றே என முடிவுகட்டி, பொருள் அழிவுற்றால் அளவற்ற ஆற்றல் தோன்றும் என எடுத்துக்காட்டினார். அதன்படி ஒரு ராத்தல் நிறையுள்ள பொருளிலுள்ள ஆற்றல், ஒரு பெரிய தொழிற்சாலையிலுள்ள எந்திரங்களை இரண்டு ஆண்டுகள் ஓட்டப் போதுமானது! பல்லாயிர ஆண்டுகள் ஒளிதரும் விண்மீன்களிலும் பொருள் அழிவுற்றே ஒளியாற்றலாகிறது என இதனால் ஊகிக்கப்பட்டது. உலகத்துக்கே அழிவு தேடுமோ என அஞ்சுமாறு உள்ள அணுகுண்டிலும், பொருள் சிதைந்தே போவதால் வெளிவருகின்றது.

வான வெளியில் நெடுந்தூரத்திலுள்ள விண்மீன் தொகுதிகள் (Nebulae) ஒன்றையொன்று வெகு விரைவில் விலகிச் செல்கின்றன, என ஐன்ஸ்டீனின் கொள்கைப்படி கணக்கியலால் தெரியவந்தது. இத்தகைய விளைவு உள்ளது என அமெரிக்காவில் வில்ஸன் மலையிற் செய்த சோதனைகளால் தெரியவந்தது. இதையொட்டி நம் அண்டம் பெருங்கோளம் போன்றது என்றும், அதில் ஆங்காங்கு விண்மீன்கள் உள்ளனவென்றும், சோப்புக் குமிழிபோல் அண்டமும் விரிகின்றது எனவும் தற்காலத்தில் கருதுகின்றனர். இத்தகைய விரியும் அண்டம் வான நூலுக்கே யொரு புதுமையாகும்.

இவ்வாறு பல நூல்களைப் பாதித்து, பல விதிகளை ஒன்றாக்கி, அண்டத்தில் நிகழும் பல விளைவுகளை விளக்கி, அறிவியல் துறைகளில் பலவற்றை எளிதாக்கி, விஞ்ஞானிகளுக்குப் பேருதவி புரிந்துள்ளது, ஐன்ஸ்டீனின் கொள்கை. இதன் பயனை எட்டிங்டன் வெகு அழகாகப் பின் வருமாறு கூறுகின்றார்:

"அறியாமை யென்னும் கடற்கரையில் நாம் ஒரு புது அடிச்சுவட்டைக் கண்டோம். அது யாருடையது என்பதை விளக்க ஆழ்ந்த கொள்கைகளை வகுத்தோம். கடைசியில் அடிச் சுவட்டுக்குக் காரணமான பிராணியை நாம் கற்பனை செய்வதில் வெற்றியும் பெற்றோம். சுவடு நம்முடையதே!"





Agent for Tanjore Dt.

K. ராகவேந்திர ராவ்,

சந்திர விலாஸ்,

கும்பகோணம்.

தொடர் கதை

# சித்ரா

கே. சுந்தரம்மாள்

## 11

காரிலிருந்து இறங்கி உள்ளே நுழையும்பொழுதே "அம்மா சித்ரா எங்கே?" என்று கேட்ட வண்ணம் வந்தார்கள் இருவரும்.

விஷயம் வீட்டிற்கு வந்தபின் தெரிந்தால் போதும் என்பதற்காக ஸ்டேஷனுக்கு வண்டியை மட்டும் அனுப்பிவிட்டு, டிரைவரிடம் ஒன்றும் சொல்லவேண்டாமென்று எச்சரித்திருந்தாள். இவர்கள் வரும்பொழுதே கேட்டவுடன் என்ன சொல்லுவது என்று புரியாமல் திரு திருவென்று விழித்தாள்.

"அம்மா! சித்ரா எங்கிருக்கிறாள்?" என்றாள் ஸௌதா.

"முதலில் காப்பியைச் சாப்பிடு; பிறகு சொல்லுகிறேன்"

"அம்மா! போதும் உன் சூழ்ச்சி. எனக்கு எல்லா விஷயமும் தெரியும். நீ தேடிய மாப்பிள்ளையின் பிள்ளையாண்டான் வந்தானே சேகர், அவனும் நானும் ஒரே அறையில் இருக்கிறோம். அவனும் மெடிகல் காலேஜில் என்னுடன்தான் படிக்கிறான். முந்தாநாள்தான் சௌதாவின் தந்தி வந்த சமயம் அவனும் வந்துசேர்ந்தான். அவள் எங்கே சொல்லு சீக்கிரம்" என்று அதட்டினான்.

"நான் எவ்வளவு சொல்லியும் கேட்க மாட்டேனென்று அவள் வீட்டிலேயே இருக்கிறாள். ஏதோ நான் ஒன்று செய்யப்போக ஒன்றாக முடிந்தது." என்று அவள் சொல்லி முடிக்குமுன்னமேயே இருவரும் சித்ராவின் வீட்டை நோக்கி நடந்தார்கள்.

காலை எட்டு மணி. சித்ரா தன் அறையில் நார்க்கட்டிலில் சுருட்டி வைத்திருக்கும் படுக்கையின்மீது தலைவிரித்த வண்ணம் சாய்ந்துகொண்டு, கண்ணீர் தளும்ப, பிரபாகரன் படத்தைக் கையில் வைத்துப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

"சித்ரா!" என்ற சப்தத்தைக் கேட்டுத் திரும்பினாள். எழுந்து உட்கார்ந்து படத்தைப் பக்கத்தில் கவிழ்த்து வைத்துவிட்டு, "சௌதா!" என்றாள். இருவரும் மேலே பேசவில்லை. ஒருவரையொருவர் அணைத்துக்கொண்டு விம்மினார்கள். கட்டிலின் தலைப் பக்கமாக நின்றுகொண்டிருந்த பிரபாகரன் கண்ணில் ததும்பும் நீரைத் துடைத்த வண்ணமிருந்தான். கால்மணி நேரம் இவ்விதம் சென்றது. பிறகு சித்ரா தலைநிமிர்ந்து பிரபாகரனைப் பார்த்தாள். தன்னைப் பார்க்கும் பார்வையைத் தாங்கச் சக்தியற்றவள் போல் உட்கார்ந்தபடி படுக்கையில் சாய்ந்தாள். அவள் மாரின் பக்கத்தில் உட்கார்ந்து அவளை அணைத்த வண்ணம், "சித்ரா! அண்ணாவிடம் ஏன் பேசவில்லை? நேற்று வண்டியில் நாங்கள் இருவர்மட்டுமிருந்ததினால் சரியாகப் போய்விட்டது இல்லையேல் அவனைப் பைத்தியம் என்றே சொல்லுவார்கள். அப்படிப் புலம்பினான்."

"நான் என்னவென்று பேசுகிறது" என்று சொல்லிவிட்டு நிமிர்ந்து பிராபகரனைப் பார்த்து, "ஏன் நிற்கவேண்டும், நாற்காலியில் உட்காரக் கூடாதா?" என்றாள்.

தலைப்பக்கத்தில் கட்டிலையொட்டினாற் போல் நாற்காலியை இழுத்துக்கொண்டு உட்கார்ந்தான்.

"சௌதா, எப்பொழுது இருவரும் வந்தீர்கள்? விஷயம் எப்படித் தெரியும்?" என்றாள்.

"சற்றுத் தள்ளாமையாக இருந்தது. இந்த மாதம் முழுவதும் அவருக்குச் சற்றுப் பிரயாணம் செய்யவேண்டும், தனியே விட்டுப்போகப் பயந்து. தக்க துணை வந்ததினால் திடீரெனத் தந்தி கொடுத்துவிட்டுப் புறப்படும்படி ஆயிற்று. பட்டணம் வந்த பின்புதான் அண்ணா விஷயம் சொன்னான்."

"உங்களுக்கு எப்படித் தெரிந்தது?"

"திருச்செந்தூர் வந்த சேகரும் நானும் ஒரே அறையில் வசிக்கிறோம். ஒரே காலேஜில் படிக்கிறோம். முந்தாநாள் இரவு அவன் வந்து சேர்ந்தான்"

"ஐயோ! அப்படியிருந்தும் விதி ஏமாற்றி விட்டதே" என்றாள் சித்ரா.

"அதிருக்கட்டும் சித்ரா! நான் போகும்பொழுது எவ்வளவு துயரமடைந்தேன், எவ்வளவு சொன்னேன், நீ ஏன் இப்படி அகப்பட்டுக்கொண்டாய்" என்றான் பிராபகர்.

"என் அம்மாவும் சேர்ந்து வஞ்சித்து விட்டார்கள். எப்படித் தெரியப்படுத்துவது? தப்ப வழியில்லையே?"

"ஏன் சித்ரா, சிவகாமி சொன்னதுமே, சொல்லாமல் கால் நடையாக எங்காவது நடந்துசென்று தங்கிவிட்டு, காலை ரயிலில் ஊருக்குவந்து அடுத்த வண்டியில் பட்டணம் வந்திருக்கலாமே" என்ருள் சௌதா.

"அப்படிப் புறப்பட மனம் தோன்றவில்லை. அம்மாவிடம் சொல்லிப் பார்க்கலாம் என்று நினைத்தேன்" என்று தனக்கும் தாய்க்கும் நடந்த விஷயத்தைச் சொல்லிவிட்டு, "பின்பு அந்த ஜடத்தினிடமே சொல்லிப்பார்க்கலாம் என்று நினைத்தேன்"

"உங்கள் சம்பாஷணை முழுவதும் சேகர் கேட்டுக்கொண்டிருந்தான். தகப்பனிடம் சண்டையிட்டான்" என்று விபரம் சொல்லி முடித்தான் பிரபாகர்.

"அப்படி ஏன் ஒப்புக்கொண்டாய்?" என்ருள் சௌதா.

"காதல் ஒன்றிற்காகக் குடும்பத்தில் சச்சரவும் விரோதமும் உண்டாக்குவதை விட, இந்தவிதம் கல்யாணம் செய்து கொள்ளும் ஜடங்களுக்குப் புத்தி கற்பித்து, பெண்களைத் துச்சமென்று நினைத்த அவருக்குப் "பெண்கள் கிடைப்பதற்கரிய தங்கம்" என்று எண்ணும்படி செய்து, கடைசிவரையில் என் நகக்கண்ணைக்கூட அவர் பார்க்க முடியாமல் செய்து, கவலையின்றிப் படித்து, குழந்தை குட்டிகளைப் பெற்றுப் பந்தத்தினுழலாமல் தேசசேவை செய்யலாமென்ற நினைப்புடன் தான் ஒப்புக்கொண்டேன். உன் தாயார் இதற்காகத்தானே இந்தப்பாடு பட்டாள். தியாகத்தின் பாதையாக வாழ்க்கையின் ஜோதியைப் பார்த்தேன்" என்று கடைக்கண்ணுல் பிரபாகரனைப் பார்த்த வண்ணம் கூறினுள்.

"துரோகத்தின் தியாகம் எதில் முடிந்தது?" என்ருன்.

"அதுசரி. இன்னும் மாங்கல்யம் இருக்கிறதா" என்று அவன் கழுத்தைத் தடவினுள், சௌதா.

"இல்லை, அன்றே சமுத்திரத்தில் போட்டு விட்டேன்."

"நல்லவேளை. இனிமேல், நீ வழக்கம் போல் பொட்டு முதலியவைகள் வைத்துக் கொள்ள வேண்டும். கல்யாணம் நடக்கவில்லை, தெரிந்ததா?" என்ருள் சௌதா.

"இல்லை. விதவை என்ற பட்டத்தை ஏற்றுக்கொண்டால் கல்யாணத் தொந்தரவு ஏற்படாது. உன் அம்மா நிம்மதியாக இருப்பார். சுகன்யாவின் விருப்பமும் பூர்த்தியாகும்" என்று பிரபாகரனைக் கடைக்கண்ணுல் பார்த்த வண்ணம் சொன்னுள்.

"அப்படி விருப்பமானுல் இன்றிரவே பூர்த்திசெய்து விடுகிறேன். கையில் வைர மோதிரமிருக்கிறது. வேண்டுமானுல் எனக்கு நல்ல விஷம் கிடைக்கும்" என்ருன் அவளைப்பார்த்த வண்ணம் பல்லைக்கடித்தவாறு.

"ஐயோ! வேண்டாம், மன்னித்து விடுங்கள். என் மனக்கொதிப்பில் ஏதோ உளறி விட்டேன்." என்று சொல்லியவண்ணம் படுக்கைமீது வைத்திருந்த அவன் கையை எடுத்து முகத்தை அதில் பார்த்துக் கண்ணீர் விட்டாள். அந்தச் சமயம் வாசலில் ஹாரன் சப்தம் கேட்கவே ஜன்னல்பக்கம் திரும்பிப் பார்த்தாள் சௌதா. ஸீதாலக்ஷ்மி இறங்கிவருவதைக்கண்டு "அம்மா வந்துவிட்டாள்" என்ருள்.

"காப்பிகூடச் சாப்பிடாமல் வந்துவிட்டீர்களே! சித்ரா, சௌதாவிற்காக நீ அவ்விடம் வரவேண்டும்" என்ருள் அவ்விடம் வந்த ஸீதாலக்ஷ்மி.

"பிரபாகரனின் கையை விட்டு எழுந்து உட்கார்ந்த சித்திரா, "வேண்டாம் மாமி, நான் இவ்விடமே இருக்கிறேன்" என்ருள்.

ஏதோ சொல்ல வாயெடுத்தாள் ஸீதாலக்ஷ்மி, அதற்குள் 'ஸீதாலக்ஷ்மி!' என்று பாட்டி கூப்பிடவே 'வந்துட்டேன்' என்று சொல்லிய வண்ணம் கூடத்துப் பக்கம் சென்ருள்.

"சித்ரா! நீ என்னுடன்தானிருக்கவேண்டும் வா" என்ருள் சௌதா.

"வேண்டாம் சௌதா! அவ்விடம் எங்கம்மா நினைவு என்னை மிகவும் வாட்டும்" என்ருள்.

"கொஞ்சம் இரு. பின்பக்கம் சென்று வருகிறேன்" என்று சொல்லி எழுந்தவள் பிரபாகரன் காதில் ஏதோ சொல்லிவிட்டு வெளியே சென்ருள்.

உட்காரச் செயலற்று மறுபடி படுக்கைமீது, கையில் தலையைத் தாங்கியவண்ணம் சாய்ந்துகொண்ட சித்ரா "நீங்கள் எழுந்து சென்றுவிடுங்கள். உங்கள் அம்மா ஏதாவது........."

"அதைப்பற்றி அக்கரையில்லை" என்று சொல்லியவண்ணம், அவனும் படுக்கையின் மீது, இரண்டு முழங்கைகளேயும் ஊன்றி, கைகளால் கன்னத்தைத் தாங்கியவண்ணம், சித்ராவின் முகத்தருகில் குனிந்து, "சித்ரா!" என்ருன்.

"ஏன்" என்ருள் ஈனஸ்வரத்தில்.

"நான் புறப்படும் பொழுது பயந்ததற்குச் சரியாக நடந்துவிட்டதே. கல்யாணத்தைப்பற்றி எனக்குத் தேவையில்லை. உன் தாயாரை இழந்து விட்டாயே! எனது உண்மையான காதலின் தன்மையை அறிந்து கொண்டாயா? எந்தக் கண்ணனது அன்பானது, உத்தரையின் கர்ப்பத்திலுள்ள சிசுவை நாசம் செய்ய ஏவின அஸ்திரத்தைக் கிட்ட வரவொட்டாமல் தடுத்ததோ அதே மாதிரியான மாசற்ற என் காதல் உன்னருகில் அவனை நெருங்க வொட்டாமல் செய்தது; உன் உணர்வின்றி மாங்கல்யதாரணம் நடந்தது. பிறருக்காக என் அன்பை நிராகரித்தாயானுல் என் நிலைமை என்ருகும்? நீதான் சுகத்தைக் காண்பாயா?"

"சுகம்! அந்தப் பதத்தை உச்சரிக்கக்கூட நான் பிறக்கவில்லையே. நீங்களே சற்றே சிந்தனை செய்து பாருங்கள்' தோட்டக்காரன் அனுமதியின்றி, பழத்தை அருந்த முடியுமா? அவன் இஷ்டப்படாவிடில், திருடித்தான் ஆகவேண்டும். திருட்டு வெளியாகாமலிருக்க முடியுமா? அப்பொழுது தண்டனை நிச்சயமல்லவா? ஆனுல் எனக்குக்கிடைத்த தண்டனை? நிர்க்கதியாக விடப்பட்டேன். இந்த நிலைமையில் மனம் சலித்து வாழ்க்கையில் வெறுப்பேற்படுவது அதிசயமல்லவே. பிரபூ, தாங்கள் என்னை மறந்தால் தான் இருவருக்கும் நன்மை. நான் அனுதையாக நிற்பதற்குக் காரணம்?" என்ற சொல் தேம்பலுடன் வெளிவந்தது.

"சித்ரா, நானிருக்கும்பொழுது நீ எப்படி அனுதையாவாய்? இன்னொருதடவை இந்தச் சொற்களை என்முன் சொல்லாதே. உன்னை நினைந்து நான்படும் வேதனை? சித்ரா! வருந்தாதே, உன்கண்ணீர் என் ஹ்ருதயத்தைப் பிளக்கின்றது" என்று அவள் கன்னத்தின்மீது தனது கன்னத்தை வைத்துத் தலையைத் தடவியவாறு சொன்ஞன். இருவரின் சோகக்கண்ணீரும் ஒன்ருகக் கலந்தது.

"நிமிர்ந்து உட்காருங்கள். அம்மா வரப் போகிருர்கள்" என்ருள் அவன் கண்ணீரைத் துடைத்தவாறு.

"வந்தால் வரட்டும். இனி பயமென்ன? அது போகட்டும். இப்பொழுது நீ என்னுடன் நம்ம வீட்டிற்குப் புறப்படவேண்டும்"

"தயவு செய்து நான் சொல்லுவதைக் கேளுங்கள். உங்கள் நன்மைக்கே சொல்லுகிறேன். அவ்விடம் வந்தால், நீங்கள் அடிக்கடி என்பக்கம் வருவீர்கள். உங்கள் அம்மாவின் கோபத்திற்கு இருவரும் ஆளாக வேண்டிவரும்"

"அதைப்பற்றி யெல்லாம் எனக்கு அக்கரையில்லை. நீ வராது போனுல் நானும் இவ்விடம் விட்டுப் போகப் போவதில்லை" என்று நிமிர்ந்து உட்கார்ந்தான்.

அவ்விடம் வந்த செளதா "சித்ரா, எழுந்திரு போகலாம் "என்ருள்.

"செளதா, என்னை மன்னித்துவிடு. துரதிருஷ்டம் பிடித்த நான் அவ்விடம் வர வேண்டாம்."

"என்ன அண்ணு, பேசாமலிருக்கிருய்? உன் காதலோ? மேடைப் பிரசங்கமோ? எல்லாம் சொல்லளவில்தானே?" என்ருள்.

"பதருதே செளதா! அவள் வராவிட்டால் நானும் இந்த இடத்தில் இப்படியே உட்காரப் போகிறேன். இதனுல் எது வந்தாலுமே அக்கரையில்லை. அப்பா அம்மா இருவரும் வந்து சொன்னுலுமே என் உறுதிமட்டும் மாருது" என்ருன்.

"ஐயோ! இதென்ன கொடுமை! இன்னும் என்மீது அவர்களுக்கு ஆத்திரம் உண்டாக்கவா? பெண் சுதந்திரம் இந்த விதமான ஆயுதத்தினுல்தான் பிரிக்கப்படுகிறது. வேண்டாம் நான் வருகிறேன்" என்று எழுந்திருந்தாள்.

இவர்கள் வரும்பொழுது பாட்டி ஸீதாலக்ஷ்மியிடம் தர்க்கம் செய்துகொண்டிருப்பதைக் கேட்க ஆவலுடன் நின்ருர்கள்.

"நீ சொல்கிறதெல்லாம் சரி. ஆனு அந்தப் பொண்ணுகிட்டே ஒரு வார்த்தை கேட்டிருக்கவேண்டும். வீணு அப்பெண்ணின் வாழ்வே சீர்குலேந்துட்டது."

"என்னமோ பாட்டி, விதி வழியே மதி என்பது போலாயிற்று. நல்ல இடம். சிறிசு ஏதோ சொல்லுகிறது. கடும் வியாதிக்குக் கசப்பான மருந்தைக் குழந்தைக்குத் தாய் அமுக்கிவைத்துப் போட்டுவதற்கு, குழந்தையின் நன்மையும் தாயின் அன்பும் தானே காரணம்? பின்னுல் நன்ருக, மேன்மையாக வாழும்போது நமது

நன்மை தெரியும் என்றே செய்தேனே தவிர அக்குழந்தையைப் பாழாக்கி, காமுவின் உயிரைக் கொள்ளை கொள்ள வேண்டுமென்று நினைத்துச் செய்யலை.''

''ஏண்டிம்மா அது போகட்டும், ஊரிலே என்னவெல்லாமோ பிரஸ்தாபம் பண்ணரு. சித்ராவைக் கேட்டா ஒண்ணுமே சொல்ல மாட்டேனென்கிரு. முதல் நாள் பேப்பரிலே கல்யாணமாயிடுத்துன்னு போட்டிருந்ததாம். மத்தாநா பேப்பரிலே அது பொய். தாலியே கட்டவில்லை என்று போட்டிருந்ததாம். எது நிஜம்னு புரியலை.''

''முதல்நா—ஏஷியத்தின் பேரிலே போட்டுட்டான். மறுநா போட்டதுதான் நிஜம். தாலிகட்டவில்லை''

''அம்மாடி! நல்லவேளை. பின்னே கொஞ்சநாப்போனதும் அவளுக்கு ஒரு கல்யாணத்தைப் பண்ணிடேன்?''

''பாட்டி, இப்போ ஏற்பட்ட அமளி அடங்கட்டும். ஒன்றுமே சொல்லவேண்டாம். நானு இப்போதைக்கு ஒரு ஏற்பாடும் செய்யப்போவதில்லை. படிக்கட்டும், பின்னுல் அவள் இஷ்டப்படி செய்யலாம். காமு செத்த வயத்தெரிச்சல்தான் ஆறவே மாட்டேங்கிறது. பாட்டி! என் மனசு அருண்டேபோயிடுத்து. நல்காலம் சௌதா வந்துட்டா. பிரபுவும் சௌதாவும் அவளைச் சமாதானப் படுத்திவிடுவா, இப்போ ஆத்துக்கு அழைச்சிண்டு போறேன்,''

''என்னமோம்மா! உன் பெத்த பொண்ணுட்டமா நடத்து. குழந்தையின் துக்கத்திற்கு எல்லையே இல்லை''

''அதை நீங்க சொல்லணுமா. காமுக்கு நான் கடமைப்பட்டுட்டேனே. அவள் தெய்வமா நின்று என்னை எரிச்சுடமாட்டாளா? இனிமே எங்காத்திலே இருந்துண்டுதான் படிப்பாள். நாங்க வரட்டுமா?'' சௌதா! எனத்திரும்பினுள். மூவரும் இவளை நோக்கி வந்து கொண்டிருந்தார்கள்.

''சித்ரா, உன் பெட்டி, சாமான்கள் எங்கேயிருக்கிறது. ட்ரைவரைக் கூப்பிட்டு வைக்கச்சொல்லுகிறேன் சொல்லு''

''இந்த அவசரத்தில் ஒன்றும் வேண்டாம். நாளை, நானும் அவளுமாக வந்து யாவற்றையும் எடுத்து வருகிறேம். வா போக

நஞ்சன்கூடு பல்பொடி
I.D.L.61, மெடிகேடட்

நறுமண சரும ரக்ஷிணி
ஸான்டல்க்ஸ்
முகப்பரு
தீப்புண்
காயங்கள்
சொறி
சிரங்கு
குணமடைய
முகக்ஷவரா உதவி




ஸ்ரீகா கஸ்தூரி ஸ்ரீகர் கோரோஜனை பாலக்ஸ்
சோல் ஏஜண்ட்ஸ்: யுனைடெட் கன்ஸர்ன் 54, பந்தர் தெரு, மதராஸ்.
டிப்போ: (மதுரை: 42, தெற்காவணி மூலவீதி) (கோவை: 234, ராஜா தெரு)

லாம். பாட்டி போய்வரட்டுமா?" என்றான் பிரபாகரன்.

"சரிப்பா. அனாதைக் குழந்தையை அரவணையுங்கோ" என்றாள்.

"பாட்டி! வரட்டுமா?" என்றார்கள் சௌதாவும் சித்ராவும்.

"ஆகாடியம்மா, சித்ரா, நீ யில்லாட்டால் என் வலது கையே போனமாதிரி. ஆனா இந்த சமயம் நீ அங்கேபோய் இருப்பதுதான் நல்லது. என் திருப்தியைப் பார்க்கலாமா?"

"கொஞ்சநாள் இருந்துவிட்டு வந்துவிடுகிறேன். உங்களிடம் இருப்பது தான் எனக்கு ஸௌக்யம்"

காமுவின் உத்தரகிரியைகளை, ஸீதாலக்ஷ்மி விமரிசையாக நடத்தினாள். அவைகள் முடிந்த மூன்றாவது நாள் சித்ரா காய்ச்சலாகப் படுத்தாள். ஏழெட்டு நாள் வரை நினைவுடனிருந்தாள். பிரபாகரனும் சௌதாமினியும் பக்கத்திலேயே யிருந்தார்கள். டாக்டர் வந்து பார்த்துக்கொண்டுதானிருந்தார். எட்டுநாளைக்குப்பின் நினைவின்றி வாய் பிதற்றலானாள். ஸீதாலக்ஷ்மியின் கவலையும் பயமும் உச்சநிலையை அடைந்தன. சித்ரா பிழைத்து எழ அவள் எதையும் செய்யத் தயாரானாள். அதனால் பிரபாகரனின் செய்கைக்கு எதிப்பேயில்லை.

சித்ராவிற்குத் தன் நினைவு உண்டாகும்பொழுது பிரபாகரனின் அணைப்பிற்குள் தானிருப்பதை உணர்ந்தாள். அவன் அயர்ந்த உறக்கத்திலிருந்ததினால் மனம் பதறினாளே தவிர, தன்னை விடுவித்து அவன் நித்திரையைக் கலைக்க அவள் மனம் துணியவில்லை. அவளறியாமல் தேகம் புல்லரித்தது. அந்த அதிர்ச்சியில் அவன் கண்ணை விழித்தான்.

"இது என்ன?" என்றாள்.

"எது? உனக்கு என்ன வேண்டும்?" என்றான்.

"ஒன்றும் வேண்டாம்; தாங்கள் எழுந்து நாற்காலியில் உட்காருங்கள். இப்பொழுது ராத்திரியா? மத்தியானமா? விளக்கு எரிகிறதே" என்றாள்.

"சித்ரா! நினைவுடன் பேசுகிறாயா?" என்று தன் கையைத் தள்ளின கையைச் சேர்த்துப் பிடித்தவாறு கேட்டான்.

"நினைவோடுதான் கேட்கிறேன். சாயங்காலம் தலையைச் சுற்றிற்று. பிறகு இப்போதுதான் கண்ணை விழித்தேன் போலும். இப்பொழுது மணி என்ன?"

"உன் நினைவு தப்பிப் பதினைந்து சாயங்காலம் ஓடி, பதினாறாவது நாள் இரவு இரண்டு மணி" என்று சொல்லும்பொழுது கடிகாரம் அது உண்மை என்று சொல்லிற்று.

"ஆ! இவ்வளவு நாட்களா நினைவற்றுக் கிடந்தேன். உங்களுக்குக் காலேஜ் கிடையாதா? நீங்கள் இப்படி......இது என்ன அநியாயம்?"

"அநியாயமா? அது இரண்டுதாரம் வீட்டிலேனா நடக்குமென்று கேள்வி. அதெல்லாமிருக்கட்டும். நாக்கை உதட்டில் தடவியவாறு பேசுகிறாயே ஏதாவது சாப்பிடுகிறாயா?"

"தாகமாகத்தானிருக்கிறது. இப்பொழுது யாரைத் தொந்தரவு செய்யப்போகிறீர்கள்?"

"ஒருவருக்கும் தொந்தரவு கொடுக்க எனக்கு விருப்பமில்லை. சோடா சாப்பிடுகிறாயா?"

"உம்"

சோடா சாப்பிட்டானதும், தலையணையை அடுக்கிச் சாய்ந்து உட்கார்ந்துகொண்டாள். அவனும் அவள் மார்புக்குப் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு நெற்றியில் புரளும் தலையை ஒதுக்கிவிட்ட வண்ணம் "சித்ரா, இப்பொழுது உடம்புஎப்படி இருக்கிறது?" என்றான் அன்பு ததும்ப.

"சோர்வாக இருக்கிறது. மற்றப்படி ஒன்றுமில்லை. நீங்கள் ஏன் காலேஜ் செல்லவில்லை?"

"காலேஜா? அதைப்பற்றி யாருக்குக் கவலை? என் ஜீவியமே பாழாகி விடுமோ என்று பயந்தேன். என் காதல், என்னை ஆதரித்தது"

"ஆனால் இரவு பகல் எப்பொழுதும் நீங்கள் இவ்விடமா இருக்கிறீர்கள்? அதிலும் சற்று முன்னதாகப் படுத்திருந்த திருக்கோலத்தில்? உங்கள் அம்மா சௌதா எல்லோரும் எங்கே? தயவுசெய்து தாங்கள் அந்த நாற்காலியில் உட்காரக் கூடாதா?"

"ஏன்?"

"அம்மா வந்தால் என்னாகும்?"

"அப்பப்பா! என்ன பீதியோ! சதா இதே நினைவுதானா? நினைவின்றிக் கிடந்தபொழுது

கூட இதே கேள்விதான். டாக்டர் நினைவு வரும் என்று சொன்ன கெடுவுகளெல்லாம் தாண்டிக்கொண்டே வர, நேற்று இரவு நான் ஒரு முடிவிற்கு வந்தேன்''

‘‘என்ன முடிவு? அம்மாவிடம் சண்டை போடுவதென்று?''

‘‘இல்லை. மாதாக்கள் செய்தது மக்கள் தலைமீது, என்று ஓர் வாக்யம் உண்டல்லவா? அதுபோல் என் அம்மா செய்த வினையினால் நீ நிரந்தரமாக நினைவின்றியே கிடப்பதுதான் விதிபோலும். அதனால், எங்கேனும் மனித சஞ்சாரமற்ற இடத்தில் ஓர் குடிசை கட்டிக்கொண்டு, உன்னை அவ்விடத்தில் கொண்டுவைத்து ஏகாந்தமாக நீ பிதற்றும் சொற்களைக் கேட்டுக்கொண்டு காலத்தை ஓட்டுவது. உலகத்தின் சம்பந்தமே வேண்டாம். அம்மா அப்பா பணமும் வேண்டாம். பிரியவசனி பத்திரிகைக்கு எழுதுவதினால் கிடைக்கும் பணத்தைக் கொண்டு இருவர் காலத்தைக் கழிப்பது, முதலில் நீ இறந்தால், உடனே நானும் உயிரை விட்டுவிடுவது. நான் இறப்பதாக இருந்தால், உனக்கு விஷம் வைத்துவிட்டுப் பிறகுதான் என் ஜீவனை விடுவதென்று''

‘‘அம்மா! என்ன கொடூர சிந்தனை?''

‘‘கொடூரமா? இருபத்திரண்டு தினங்களாக நீ படும் பாட்டையும், உன் பிதற்றலையும் கேட்டால் பச்சைமரம் பட்டுவிடும். இந்தக் கட்டிலில் நீ புரண்டதோ? கீழே எவ்வளவுதடவை விழுந்திருப்பாய். டாக்டர் கண்டிப்பாகப் பக்கத்தில் நான் எப்பொழுதும் இருக்கவேண்டுமென்றார். அம்மா நர்ஸ் ஏற்படுத்த அவசரப்பட்டாள். என் குடும்ப கௌரவம் காப்பாற்ற நானும் சௌதாவுமே நர்ஸ் பணியை மேற்கொண்டோம். அம்மா வாயைத் திறக்க வகையே இல்லை. உன் இரு பக்கமும் நானும் சௌதாவும் படுத்து, உன்னைக் கீழே விழா வண்ணம் பாதுகாத்தோம். இரண்டு நாட்களாக அவள் உடம்பு சற்றே தளர்வுற்றது போல் தோன்றினதால், நான் மட்டுமே இரவு பகல் உன்னிடம் இருந்தேன். அப்படியிருந்தும் பகல் வேளையில் சௌதா உன்னைவிட்டு அகலமாட்டாள். கதவைத் தாளிட்டு விடுவேன். ஒருவரும் ஒன்றும் பேசமுடியாது. இப்பவும் கதவு தாளிடப் பட்டிருக்கிறது. அப்பா அடிக்கொருதரம் வந்து பார்ப்பார். முன்பின் சொல்லாமல் ஒருநாள் ஸர்ஜன் ஜனரலைக் கூட்டிவந்துவிட்டார். மனிதர்களுக்குச் சஹிக்கமுடியாத ஒருவித கஷ்டமேற்பட்டால், கடைசியில் அதன் முடிவு ஒரு நன்மையில் கொண்டு விடுவது சகஜம் போலும். என் அம்மாவின் செய்கையினால் உன் அம்மாவை இழந்தாய். அதனால் அருண்ட அம்மா அப்பா இருவரும் உன் விஷயத்தில் எவ்வளவு பரிவு காட்டுகிறார்கள் தெரியுமா? உன் பக்கத்தில் உட்கார்ந்து உன்னை அணைத்தவண்ணமே, எதிரில் நாற்காலியில் உட்கார்ந்திருக்கும் அம்மாவுடன் பேசுவேனென்றால்? பிறகு உனது சிந்தனைக்கே விட்டு விடுகிறேன். கவலையை விடு. பயப்படாமல் தைரியமாக இரு''

‘‘உங்கள் அன்பிற்கு எது ஈடாகும்? நான் மிகவும்கடமைப் பட்டுள்ளேன். என்னிடத்தில் இவ்வளவு பிரேமைக்குக் காரணம்! நான் என்ன கைம்மாறு செய்ய முடியும்?''

‘‘கைம்மாறு? என்னை மறந்துவிடு, பக்கத்தில் உட்காராதே, என்றெல்லாம் சொல்லாமல், இருந்தால் அதுவே எனது மனதிற்குகந்த கைம்மாறாகும்.''

தனது மெலிந்த கைகளை அவன்தோளின் மீது வைத்து, என் முழு மனதுடனா அவ்விதம் சொல்லுகிறேன்? என் மனம் தாங்களறியாததல்லவே''

‘‘தெரியும் சித்ரா! அம்மாவிற்காக நீ அஞ்சவேண்டிய அவசியமேயில்லை''

‘‘நீங்கள் என்ன சொன்னாலும், புலி பதுங்குவது பாய்ச்சலுக்கடையாளம் என்றே தோன்றுகிறது. சரி, இவையெல்லாம் போகட்டும். உங்களுக்கு லீவு எவ்வளவு நாளிருக்கிறது? என்னால் உங்கள் படிப்பும் வீணாகிறதே'' என்றாள்.

‘‘நீ எனக்குக் கிடைத்துவிட்டால் படிப்பென்ன பிரமாதம்? உன் நினைவினாலேயே மார்க்கு வாங்கிவிடுவேன். இன்னும் எட்டு நாளிருக்கிறது. அதற்குள் உனக்குப் பூரண சுகமாகிவிடும். ஆனால் உன்பரீக்ஷைதான்...''

‘‘சற்றே குணமானால் போதும், நான் படித்துவிடுவேன்'' என்று சொல்லிவிட்டுச் சோர்வினால் கண்ணை மூடித் திறந்தாள்.

‘‘உன்னிடம் இவ்வளவு பேச்சுக் கொடுத்ததே தப்பு'' என்று சொல்லியவாறே தலையணைகளை நேராக வைத்து, குழந்தைபோல் தூக்கி அவளைப் படுக்கவிட்டு, தானும் படுத்துச் சற்று நிம்மதியாகத் தூங்கினான்.

* * *

சித்ராவிற்குத் தான் இருப்பது பூலோகமா? ஸ்வர்க்கமா? என்று சந்தேகமாகத் தோன்றினது. பால்யத்திலிருந்து அதுவரை ஸீதாலக்ஷ்மியால் அவள் நடத்தப்



அழகுத் தெய்வமான

மன்மதன், இளவேனில் ஓய்ந்ததும் பெண்மணிகளின் கூந்தலைத் தன் இருப்பிடமாகக் கொண்டான் என்பர் கவி காளிதாஸர். எந்த அழகிய கூந்தல் தேவதைகள் கண்ணையும் கருத்தையும் பிணிக்குமோ, அக் கூந்தலை வருஷம் முழுவதும் எல்லாப் பருவங்களிலும் கேசவர்த்தினியின் உதவியால் பெறுங்கள். மயிர் உதிர்வதை நிறுத்துங்கள். கூந்தலைப் பெருக்கிக் கொள்ளுங்கள்.

இளமையும் அழகும் கூந்தலுக்குத் தந்து கூந்தலை மனோஹரமாக்குவது கேசவர்த்தினி ஒன்றே.

முக அழகைக் கூந்தலினால் அழகுபடுத்துங்கள். உங்கள் கூந்தலைக் கேசவர்த்தினி கொண்டு அழகுபடுத்திக் கொள்ளுங்கள்.

# கேசவர்த்தினி

கூந்தலைப் பாதுகாப்பது, விருத்தி செய்வது, அழகு படுத்துவது

**விலை அணா 12**

(மேற் செலவு வேறு)

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்

தயாரிப்பவர்

**தென் இந்திய ரஸாயன சாலை**

**கோயமுத்தூர்.**

பட்ட விதமும் தற்சமயம் அவள் நடத்தப்பட்டு வருவதும் மலைக்கும் மடுவிற்குமுள்ள வித்யாசமாகத் தோன்றின. பிரபாகரன் புறப்படும் சமயம், அவளுக்கு அநேக தேறுதல் மொழிகளும், அன்பு முத்தங்களும் கொடுத்துச் சென்றதையும் நினைக்க நினைக்க, தான் ஆகாயத்தில் மிதப்பது போன்ற குதூகல உணர்ச்சி மிதமின்றித் தோன்றினது. வீட்டில் சமையலுக்குப் பரிசாரகன். ஏவின வேலைசெய்ய ஒரு பெண். சௌதாமினியும் சித்ராவும் ஒரே சமநிலையாகச் சகல விதத்திலும் நடத்தப்பட்டார்கள். அவ்வருஷம் பரீக்ஷைக்குப் போக வேண்டாமென்று தேக நிலைமையை உத்தேசித்து டாக்டர் சொன்னதினால், மறு வருஷம் சேர்ந்து படிக்கலானாள். மாசிலாமணி மிக்க அன்பான தேறுதல் மொழிகள் சொல்லிவந்தாள். கோடை விடுமுறையில் பிரபாகரன் வந்திருந்த சமயம், சதாகாலமும், சௌதா, சித்ரா, பிரபாகரன் மூவரும் சேர்ந்தேதான் காணப்படுவார்கள். சமயங்களில் சௌதா வரமுடியாவிட்டால் சித்ராவை மட்டும், பிரபாகரன் சினிமா முதலிய இடங்களுக்கு அழைத்துச்செல்லுவதை ஒருவரும் ஆக்ஷேபனை செய்யவில்லை. ஸ்கூலுக்கு செல்லத் தொடங்கினதும் காரில் கொண்டு விட்டுக் கூட்டிவரலானார்கள். கடிந்த முகமே காணுவதில்லை சித்ரா.

நான்குநாள் ரஜா கிடைத்தாலும் பிரபாகரன் வந்துவிடுவான். சௌதாமினிக்கு அழகிய பெண் பிறந்தது. ராகவன் வந்தான். சித்ராவின் நிலைமைக்கு வருந்தி, பிரபாகரனின் உறுதியை இன்னும் பலப்படுத்தினான். ராகவன் சௌதா ஒரு பார்ட்டியாகப் பிரிந்தால், சித்ராவும் பிரபாகரனும் ஒரு பார்ட்டியாகப் பிரிந்து, உலாவுவதோ, பேசுவதோ ஏற்படுத்திக்கொள்ளுவதை ஒருவரும் ஆக்ஷேபிக்கவில்லை. பிரபாகரன் இல்லாத சமயம் சௌதாவின் பெண் சந்திரலேகா, சித்ராவின் வாழ்க்கை வனத்தில் அன்பு மலராகத் திகழ்ந்தாள். இவைகளையெல்லாம் நினைத்துப் பார்க்கும் பொழுது 'தன்னைவிட பாக்கியசாலி ஒருவருமில்லை. ஸீதாலக்ஷ்மி தன்னை நாட்டுப் பெண்ணாக்கிக் கொள்ளத் தீர்மானித்துவிட்டாள் போலும்' என்று ஆனந்தமடைவாள். அதனால் அச்சமின்றி, பிரபாகரனுடன் நெருங்கிப் பழகலானாள். தாயார் இறந்த வருத்தம்கூட அவளைப் பாதிக்கவில்லை.

ஆனால் ஒருநாள் தனிமையில் ஸீதாலக்ஷ்மி அவளிடம் சொன்ன வார்த்தையானது, ஆனந்தசாகரத்தில் பறந்துகொண்டிருந்தவளைச் சற்றுக் கீழே இறங்குமாறு பிடித்திழுப்பதுபோல் தோன்றினது.

"சித்ரா! ஒரு விஷயம். நீ எனக்கு உதவி செய்யவேண்டும். உன் இஷ்டம்போல் நடந்துகொள் உங்கள் இருவரின் அன்பும் பிரிக்கமுடியாதது என்பதை ஈசனே எனக்கு அறிவுறுத்திவிட்டான். ஆனாலும் வெளி யுலகை ஏமாற்றினாலும், அக்னி சாக்ஷியாக உன் கழுத்தில் மாங்கல்யம் கட்டினது நம் மனச்சாக்ஷிக்குத் தெரியும்"

"என் மனசாக்ஷியோ நானோ அறியவில்லை"

"அதிருக்கட்டும். நீ அவனுடனே டாக்டராகிக் காலம் கழி. ஆனால் சுகன்யாவை அவன் மணக்கும்படி நீதான் செய்யமுடியும்" அப்படி நடந்தால் தான் எங்கள் குலதீபம் பிரகாசமடையும். சுகன்யாவின் சந்ததி தான் எங்களைக் கரையேற்றும். நீ எவ்வளவு உண்மையன்புடன் பழகினாலும், ஆண்பிள்ளைகளின் மனம் காமத்தில் சிக்காமலிருக்க முடியாது, ஜாக்கிரதையாக நடந்துகொள்ளு. உனக்கும் பருவகாலம். மனதை உறுதிப்படுத்த வேண்டும். அதற்காக நான் உன்னை ஒருவித கட்டுப்பாடும் செய்யமாட்டேன்" என்றாள்.

"உங்கள் புத்திமதியை ஏற்கிறேன். ஆனால் அவர் மனதைத்திருப்புவது என்பது எப்படி? என்றுதான் தெரியவில்லை"

"நீ மனம்வைத்தால் முடியும்" என்றாள்.

இதென்ன கொடுமை? மறுபடியும், நான் அவரை மறப்பதாவது? அவர் என்னை விட்டுப் பிறரை நேசிப்பதாவது? ஆனால் சுகன்யாவின் காதலும் வியர்த்தமாகக் கூடாதுதான். நமக்கு இவ்வளவு மேன்மை கொடுக்கும் ஸீதாலக்ஷ்மியின் மனப்படி நடப்பது தனதுகடமையாகும் என்ற முடிவிற்கு வந்தாள். அதனால் அவள்மனதில் வருத்தம் ஏற்படவில்லை. நான் இப்பொழுதிருப்பது போலவே பிரபாகரனுடன் பழகிவரலாம். சுகன்யா குடும்பப்பணியில் அவருக்கு உதவியாய் இருப்பாள். நான் டாக்டராகி ஆபீஸ் வேலைகளில் உதவியாக இருப்பேன். அவர் நம்மிடம் கொண்ட அன்பானது புவனத்திலும் பெரியது. அதனால் கீழ்த்தரமான காம விகாரங்களுக்கு என்னை உட்படுத்தாமல், இரு ஆண்மக்கள், எப்படி நெருங்கிய நட்பினராகப் பழகுவார்களோ அவ்விதமிருக்கலாம் என்றால் நிச்சயம் சம்மதிப்பார் என்ற நம்பிக்கையுண்டு. நாம் மனதை அடக்குவது கடினமா? கொஞ்சநாட்களாக நாம் எவ்வளவு உல்லாஸமாக இருக்கிறோம். எத்தனை இரவு பன்னிரண்டுமணிவரை இருவரும் ஏகாந்தமாக மரமும் கொடியும் போல் நின்று பேசியிருக்கிறோம். அத்துமீறின செய்கையோ, சொற்களோ அவரிடம் ஒரு சமயம்கூடக் கண்டதில்லை. இப்படியே வாழ்நாள் முழுமையும் ஏன் கழிக்க முடியாது என்ற தைரியமே அவள் மனதிற்குச் சாந்தியைக் கொடுத்தது. தன்னை இவ்வளவு மேன்மையாக நடத்தும் ஸீதாலக்ஷ்மியின் அபிலாஷையைப் பூர்த்தி செய்யவேண்டியது கடமைதானென்ற உறுதியும் தோன்றினது. ஆனால் பிரபாகரன் இந்த விஷயத்திற்குச் சம்மதிப்பானென்பது பகல் கனவுதான். ஆனாலும் அன்பினால் ஆகாதகாரியம் உண்டா? முயன்று பார்ப்போம். பிறகு அப்படி அவன் சம்மதித்துவிட்டால் ஸீதாலக்ஷ்மி தன்னை எவ்வளவு மேன்மையாக நினைப்பாள். சுகன்யா எவ்வளவு ஆனந்தமடைவாள்? ஆனால் பிரபாகரன் மனம் எந்த நிலைமையை ஏற்கமுடியும்? என்ற சிந்தனைக்கு வருஞ்சமயம் சற்றுத் தயக்கமுண்டாயிற்று. இருந்தாலும் அவனுடைய முழு அன்பிற்கும் பாத்திரமான நான் கவலைப்பட வேண்டிய அவசியமில்லை. பிரபாகரனைப் பிரியாமல் இருப்பதுதான் தனது லக்ஷ்யம். வாழ்க்கை ஆனந்தகரமாகச் செல்லும் என்ற முடிவிற்கு வந்தாள். "இயற்கை, விதி இரண்டையும் மனிதன் வெற்றி கொள்ள முடியுமா?" என்ற சிந்தனைக்கு அவள் மனதில் இடமேயில்லை.

இது விஷயம் பேசப்பட்டபின் பிரபாகரன்வந்த சமயம், தன் பிளானை எடுத்துக் கூறினாள்.

"சித்ரா உன் குணத்தின் மேன்மையும், மனதின் பண்பும் என் ஹிருதயத்தை எவ்வளவு பரவசமடையச் செய்கின்றன தெரியுமா? அம்மா சொல்லுவதற்கெல்லாம் சரியென மண்டையை ஆட்டிவிடு. மற்றவிஷயம் நான்பார்த்துக்கொள்ளுகிறேன். ஒரே ஒரு விஷயம் நமது பொறுமையைச் சோதனைசெய்யும். அம்மாவின் பூரண சம்மதத்துடன் நமது கல்யாணம் நிறைவேறச் சில வருஷங்கள் நாம் பொறுத்திருக்கவேண்டும். அப்படியானால் பெற்ற கடமை, காதலின்கடமை இரண்டையும் நிறைவேற்ற முடியும். என் குலதீபம் உன்னால் ஏற்றப்பட்டே பிரகாசமடையும். என் ஹ்ருதயாசனத்தில் உன்னையன்றி ஒருவருக்கும் இடமில்லை" என்று இறுகத் தழுவிக்கொண்டான், அந்த மோன நிலையில், உலகம், கடமை, ஸீதாலக்ஷ்மி, சுகன்யா—ஒருவரைப்பற்றிய சிந்தனைக்கும் இடமில்லை. பிரபாகரன் ஒருவனே அவள் மனதில் தோற்றமளித்தான். காதலின் ஜோதியைத்தான் அவள் கண்டாள். இந்த இன்பமே என்றும் நிலைக்கும் என்பதேதான் தோன்றினது. ஆனால், இயற்கை! விதி!

(தொடரும்)

# புத்தக விமர்சனம்

### கவிக்குயில் பாரதியார்

ஆசிரியர் யோகி சுத்தானந்த பாரதியார். இராமச்சந்திரபுரம், அன்பு நிலயத்தார் வெளியீடு. விலை ரூ 4—0—0

"உள்ளத்தில் உண்மையொளி யுண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்" என்று பாடிய ஸ்ரீ சி. சுப்பிரமணிய பாரதியார், தம்வாக்குக்குத் தாமே உதாரண புருஷராக எல்லோரும் பாராட்டும் வண்ணம் விளங்கிக் கொண்டிருக்கிறார் என்பதையும், அவர்தம் வரலாற்றையும், அவருடைய புலமைத்திறம் பாட்டின்திறம் முதலியவற்றையும், இந்நூலில் ஸ்ரீ யோகி சுத்தாநந்த பாரதியார் மிக மிக அழகாக எடுத்துக் காட்டியுள்ளார். அப்பாரதியின் சிறப்பியல்புகளை இப் பாரதி நன்கு ஆராய்ந்து கூறும் உண்மை பெற்றவரென்பதை இந் நூலைப் படிப்பவர் நன்கு உணர்வர்.

ஸ்ரீ பாரதியாரையும் அவரோடுறைந்தவர்களையும் பல சந்தர்ப்பங்களிலே நேரிற் கண்டும், அவர்களுடைய வரலாறுகளைப் பலர்வாயிலாகக்கேட்டும் அறிந்துள்ள இந்நூலாசிரியர், பன்மொழி நூல்களிலும் தென்றசீரிய கூரிய நல்லறிவு படைத்தவராதலால் கவிக்குயில் பாரதியாரை நாமெல்லாங் காண உதவியிருக்கிறார். ஸ்ரீ பாரதியாரின் நூல் தொகுப்பிலுள்ள எல்லாத் தொகுதிகளையும் தமிழர் அனைவரும் சுவைக்கும் வண்ணம், தாம் நுகர்ந்து சுவைத்தவைகளை இந்நூலால் விளக்கியிருக்கிறார்.

இந்நூலின் முடிவிலே,

"உன்னை நினைக்கையிலே—எங்கள்
உள்ளத்தில் வீர வெள்ளம் பெருகுது!"

என்று தொடங்கி,

"பற்றிமுன்னேறிடுவோம்—சக்தி
பாரதிக் குன்கவி ஆரம் அணிகுவோம்"

என்று முடித்திருப்பது இப்பாரதி அப்பாரதியேயோ என்ற உணர்ச்சியை எழுப்புகின்றது.

இந்நூல் பாரதிநூல்களிலே புகுமவர்க்கு நல்ல திறவுகோலாகும்; தமிழர் அனைவர்க்கும் தக்க துணையாகும்.

### புதுமைக்கவி பாரதியார்

ஆசிரியர்: தி. ஜ. ர. அல்லயன்ஸ் கம்பெனி வெளியீடு. மயிலாப்பூர். சென்னை, விலை ரூ. 1—0—0

இந்நூலாசிரியர் ஸ்ரீ பாரதியாரைப்பற்றிக்கேட்டும் படித்தும் அறிந்தவைகளைத் துணைகொண்டு ஆராய்ந்து. தாம் கண்ட உண்மைகளை இனிய தமிழ் நடையிலே இரு பகுதியாக்கிப் புலப்படுத்தியுள்ளார்.

இந்நூல் ஸ்ரீ பாரதியாரின் ஒரு சிறிய ஜீவிய சரித்திர மட்டுமன்று; அவர் தம் நூல்களைப் படித்துச் சுவைக்க வேண்டுமென்னும் ஆர்வத்தை எழுப்புவதாயும் உள்ளது; தன்னை ஆக்கியவரின் எழுத்துத் திறமையையும் நன்கு விளக்குகின்றது.

### கந்தபுராணத் திரட்டு

(யுத்த தேவ, தக்ஷ காண்டங்கள்)

தொகுத்தவர் திரு. ரா. பி. சேதுப் பிள்ளை பி. ஏ., பி. எல். அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை. விலை ரூ. 2—4—0.

கந்தபுராணம் தமிழ் மொழியிலுள்ள பெருங் காப்பியங்களுள் ஒன்று; ஸ்ரீ கச்சியப்ப சிவாசாரியரால் அருளிச் செய்யப் பெற்றது; சைவ புராணங்களுள் மிகவும் சிறந்தது. இது பல்லாயிரம் விருத்தப் பாக்களால் விரிவாய் இருத்தலால் எல்லோருக்கும் சுருக்க வகையில் பயன்பெறும்படி சரித்திரப் பகுதியைப் பற்றிய பாடல்களை இயன்ற அளவு ஆராய்ந்து, அவற்றிற்கு நல்ல பொழிப்புரையும் எழுதியுள்ளார் திரு. ரா. பி. சேதுப்பிள்ளை.

இந்நூல் மூன்றும் பாகம். தமிழ்க் கடவுளாகிய முருகன் திருவிளையாடல்களை எல்லோரும் இனிதாக ஓதியுணர்வதற்கு இத் தொகுப்பு, சிறந்த கருவியாகும்.

### காமினி

இது ஒரு நாடகநூல். ஆசிரியர்: சாது, சுப்பிரமணிய யோகியார், விலை அணு 12, ஸ்டார் பிரசுரம், பாலக்கரை, திருச்சி.

இந்நாடகம் மூன்று களமும் ஐந்து காட்சிகளும் கொண்டுள்ளது. "கடவுளை நம்பினோர் கைவிடப்படார்" என்பதனையும், அடியார் பிழைகளை இறைவன் பொறுத்தருள்வதோடு அவர்க்குறும் துயரங்களையும் தானே ஏற்றருள்வன் என்பதனையும், எப்பொழுதும் இறைவனை மறவாதவர் செய்யும் வினைகள் எத்தன்மையனவாயிருப்பினும் நல்வினைகளாகவே முடியும் என்பதையும் இந்நூல் அழகாக எடுத்துரைக்கின்றது.

இந்நூலின் நடை மனோன்மணியம் என்னும் நாடக நூலைப்போல மிக்க இனிமை பயப்பதாய் மிளிர்கின்றது. இந்நூலாசிரியர் தமிழ் மொழிக்குக் காலத்திற்கேற்ற ஒரு தொண்டு புரிந்துள்ளார் என்பதும் இதனைப் படிப்பவர்க்கு விளங்கும்.

Edited & Published by N. R. Ramanujan & Printed by S. Rangaswami
at the Cauveri Colour Press, Besant Road, Kumbakonam.



# THE MAN *in* INDUSTRY

## ட்ராப்ட்ஸ் மேன்

இவர், தொழிற்சாலையில் திட்டம் தயாரிப்பவர்களுக்கும், தொழிலாளருக்கும் இடையே தொடர்பாயுள்ளவர்.

கலையும், தொழில் ஞானமும் ஒருங்கே அமையப்பெற்ற இவர், திட்டங்களை யெல்லாம் விளக்கும்படி விரிவாகச் சித்தரித்து, குண்டூசி முதல் கப்பல்வரை செய்வதற்கு, இன்ஜினியர்களுக்கு உதவுகிறார்.

தொழிற்சாலையில் தயாரான பொருளை, நாடெங்கு விநியோகம் செய்வதற்கு நல்ல சாலைகள் தேவை. தற்பொழுது நம் நாட்டிலுள்ள ரோடுகள், சாமான்களை தேசம் முழுதும் விரைவில் சேர்க்க வசதியாய் அமைக்கப்படவில்லை. இந்தியக் கைத்தொழில் முன்னேற்றத்துக்கு, நன்கு அமைக்கப்பட்ட நல்ல ரோடுகள் தேவை.

**இந்தியக் கைத்தொழில் அபிவிருத்திக்கு நல்ல ரோடுகள் தேவை எனும் நம்பிக்கையுடன் பர்மாஷெல் கம்பெனியாரால் வெளியிடப்பட்டது.**



BURMAH-SHELL OIL STORAGE AND DISTRIBUTING CO. OF INDIA LTD. (INCORPORATED IN ENGLAND) GA/88/2

Regd. No. M. 4405 CAUVERI



டி. எஸ். ஆர். கோகுல் தைலத்தை

தொடர்ந்து உபயோகித்த இம்மங்கை தனது கூந்தல் அடர்ந்து கவர்ச்சியாக வளர்ந்திருப்பதைக் கண்டு அகமகிழ்கிறாள்

இம் மகிழ்ச்சியை நீங்களும்
- எளிதில் அடையலாம் -

டி. எஸ். ஆர்.

# கோகுல் கூந்தல் தைலம்

## சந்தனாதித் தைலம், அரைக்கீரை விதைத் தைலம்

இவைகள் குற்றால ஸ்நானத்தின் குளிர்ச்சிக்கு நிகரானவை!

மதராஸ் ஸிடி ஏஜண்டு **புஷ்பவனம் ஸ்டோர்ஸ்** பைக்ராப்ஸ் ரோடு, திருவல்லிக்கேணி.

# T. S. R. & CO. PERFUMERS KUMBAKONAM

Cauveri Colour Press, Kumbakonam.